அமுத சுரபி

மார்ச் '98

விலை ரூ. 10



ACC.NO.10599

மலர் - [illegible]
இதழ் - 11
மார்ச் 98
ஈஸ்வர - பங்குனி

அமுதசுரபி

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே - பாரதியார்

பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்

சூப்பர் பொன்னி ஜே 18 -
மேலட்டை அமைப்பு : ஜி.கே. மூர்த்தி வண்ணப் போட்டோ : யோகா



'பாரத ரத்னா' பெருமை அடைகிறது

'சி.எஸ்' என அன்போடும், மரியாதையோடும் அழைக்கப் பெறுகின்ற அறிஞர் சி. சுப்பிரமணியம் 'பாரத ரத்னா' விருது பெறுவதை நினைத்து இந்தியத் துணைக் கண்டமே மகிழ்ந்து பெருமிதம் அடைகிறது! சொல்லப் போனால் 'பாரத ரத்னா' விருதே பெருமை பெறுவதாகக் கருதலாம்.

தேசப்பற்று மிக்க சி.எஸ், இளமைக் காலம் முதலாகவே தேசத்திற்குப் புதிய நலமும் வளமும் பெருகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். மூதறிஞர் இராஜாஜியின் வழிகாட்டலைத் தமது அரசியல் வாழ்விற்கு அடித்தளமாகக் கொண்டு, தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் அமைச்சர் பொறுப்பின் அரிய இலக்கணமாகவும், உரிய இலக்கியமாகவும் வாழ்ந்து காட்டிய, மனித நேயமிக்க அரசியல் அறிஞர்.

'பாரத ரத்னா' அறிஞர் சி. சுப்பிரமணியம் பல்லாண்டு கள் உடல் நலத்துடன் வாழ்ந்து நாட்டு மக்களுக்கு வழிகாட்டி மேலும் புகழ் சேர்க்க வேண்டுமெனப் பிரார்த்திக் கிறோம்.

மௌனமாக ஒரு புரட்சி

.... கலைமாமணி விக்கிரமன்

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள், ஜே பண்ணையிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. 'பொன்னி சூப்பர் 18' ரக அரிசியை விளைவித்திருக்கிறோம். அதை அறிமுகப்படுத்தும் விழாவிற்கு வரவேண்டும் என்று கூறி அழைத்ததோடன்றி, சென்னையிலிருந்து தனிக் காரில் ஜே பண்ணைக்கு அழைத்தும் சென்றார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜே பண்ணையின் சாதனைகளை எழுத்தாளர்களுக்கு நேரே காட்டி விவரிக்க தனிப் பேருந்தில் ஜே பண்ணைக்கு அழைத்துச் சென்றது நினைவுக்கு வந்தது. அது மாம்பழ ஸீஸன்.

ஜே பண்ணையில் ஏற்றுமதி ரக மாம்பழங்களை விளை விக்கிறார்கள். மாம்பழங்களைப் பார்த்தவுடன் எழுத்தாளர்களுக்கு இளம் வயது நினைவு வந்து விட்டது. கைக்கெட்டும் வகையில் கொத்துக் கொத்தாய்த் தொங்கிய மாம்பழங்களைப் பறித்துச் சுவைத்து இரண்டு மணி நேரம் போனது தெரியாமல் மகிழ்ச்சியுடனிருந்தனர்.

எழுத்தாளப் பெருமக்கள் தம் ஆவலை, ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல் ருமானி மாம்பழங்களை ரகசியமாகப் பறித்துச் சாப்பிட்டு 'ஹா ஹா என்ன சுவை'? என்று பலரறியக் கூறி மகிழ்ந்தனர். திருடிச் சாப்பிடும் சுவையே சுவை என்று விமர்சித்தார் ஓர் எழுத்தாளர். அருமையான கவிதையும் எழுந்தது. (கவிதை : பூவண்ணன்)

'ஜே பண்ணை மாம்பழம்
செழிப்பான மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
தெவிட்டாத மாம்பழம்
திருடராக்கும் மாம்பழம்
ஜே பண்ணை மாம்பழம்
செழிப்பான மாம்பழம்'

பிறகு ஜே பண்ணையின் சிருஷ்டிகர்த்தா, அமால்கமேஷன்ஸ் தலைவர் திரு. ஏ. சிவசைலத்துடன் அளவளாவினர். அவரும் எளிய தமிழில் எழுத்தாளர்களுடன் பேசினார். எழுத்தாளர்க கவிதைகளின் மூலம் தங்க மகிழ்ச்சியைத் தெரிவித்த 'மாம்பழக் கவிராயர்களாக' மாறி

அன்று மாமரத்தி புதுமையைப் புகுத்திய பண்ணையின் சிற்பி டாக்டர்.எஸ். நாகராஜன், இன்று புதிய ரக சூப் பொன்னியை அறிமுகப்படுத்தின

எடுத்த தொழிலையெல்ல செவ்வனே செய் அமால்கமேஷன்ஸ் நிறுவனம் ஸிம்சன் நிறுவனங்கள் என்ற உடனே புரியும் - அதன் நிறுவ 'ஜே' என்று அன்பு அழைக்கப்படும் தி அனந்தராமகிருஷ்ண வேளாண்மை உழு கருவிகள் மற் அதன் பாகங்கள் தயாரிக்க டா∴ என்ற நிறுவனத்தைத் தொடங்கின அதைக் கண்டு அக்காலத் வெள்ளை முதலாளிகள் எ நகையாடினர்.

அவர்கள் முகத்தில் கரி வெற்றிகரமாக டா∴பே நிறுவனத் நடத்திக் காட்டினார். அதற் துணையாய் பல விதங்கள் உதவியாக இருக்கப் பண்ணை நி தேவைப்பட்டது. அதற்க



ாங்கப்பட்டதுதான், சென்னையிலிருந்து சுமார் 40கி.மீ. தொலைவில் திருப்போரூக்கு நருக்கத்தில் கேளம்பாக்கம் அருகில் வலப்புறம் திரும்பினால் ற்றுத் தொலைவில் 4 பரந்த லப்பரப்பு; அதுதான் ஜே பண்ணை!

அதிகமான தண்ணீர் சதியில்லை. காடு திருத்தி டாக்கிய பல்லவ மன்னர் மகேந்திர ர்மனுக்கு உறுதுணையாயிருந்த ரு நரசிம்ம வர்மனைப் போல், திரு. ணந்தராம கிருஷ்ணனுக்கு, தவியாயிருந்து அவர் புதல்வர் ரு.ஏ. சிவசைலம் தந்தையின் னவை நனவாக்கினார்.

மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மனை மேற்கோள் காட்டினோம். அவர்களுடைய வீரதீரப் பராக்கிரமங்களுக்குக் காரணகர்த்தரான பரஞ்சோதியையும் கூற வேண்டுமல்லவா? அவர்தான் விவசாயத்துறை நிபுணர் டாக்டர்.எஸ்.எஸ். நாகராஜன். ஜே பண்ணையின் மூலம் பல வித ஆராய்ச்சிகளை அவர் மேற்கொண்டார். குறைந்த காலத்தில் நிறைந்த மகசூல் தரும் ஜே 13 ரக நெல்லை விளைவித்தார். வெள்ளைப் பொன்னி என்று இன்று தமிழ்நாடு முழுவதும் பிரபலமாயிருக்கும் நெல் வகை ஜே பண்ணையில் உருவானது.

'மஷிரிபூதே' எனப்படும் மலேசிய நாட்டு நெல் வகையை ஆய்வு செய்து அதை .வெள்ளைப் பொன்னியாக்கிய பெருமை ஜே பண்ணையைச் சாரும்.

டாக்டர்.எஸ்.எஸ். நாகராஜன் அரிய ஆராய்ச்சியின் மூலம் புதிய ரக அரிசியை உருவாக்கினார். அதை விவசாயிகளிடம் விளக்கினார். அவர்களை விளைவிக்கச் சொன்னார். அவர்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்க வழி சொன்னார்.

சூப்பர் 18 பொன்னி ரக நெல்லின் வெற்றியை விவரித்து தமிழக அரசின் வேளாண் துறைச்

பிரியாணி, பலகாரத்துக்கு ஏற்ற அரிசி

இந்த அரிசி, பிரியாணி மற்றும் லகாரங்கள் செய்வதற்கு மிகவும் ற்றதாக உள்ளது. கடற்கரைப் குதிகளில் வடகிழக்குப் ருவமழையின் சீற்றத்தின் ாரணத்தால் வயல்களில் வெள்ள ாதிப்பு ஏற்படுவதற்கு அதிகமான ாய்ப்புகள் உள்ளன. இந்த வெள்ள ாதிப்பினால் பல ரகங்கள் கரைந்து யிர் அழிந்து அந்த இடத்தில் திதாக நாற்று நட வேண்டிய ூழ்நிலை ஏற்படுகிறது. வெள்ள ாதிப்பினால் பயிர் முற்றிலும் அழிந்த சூழ்நிலையிலும் சூப்பர் பொன்னி நெல் புத்துயிர் பெற்று மிகவும் அதிகமான தூர்கள் கட்டி யல்பான மகசூலைக் கொடுப்பது றிப்பிடத்தக்கது.

இயற்கை விவசாயத்தைக் டைப்பிடித்து சூப்பர் பொன்னி ாகுபடி செய்வதற்கான சாகுபடி றைகள்:

ஆடி மாதம் 20-ஆம் ததியிலிருந்து 25-ஆம் தேதிக்குள் ந்த ரகத்தினை விதைக்க வண்டும். விதை அளவு ஏக்கருக்கு 2 கிலோ ஆகும். 8 சென்ட்



நாற்றங்காலுக்கு 450 கிலோ மக்கிய குப்பை எருவினை அடி உரமாக இட வேண்டும். நட்டு 10 நாள்கள் கழித்து நிம்பிசிடின் எனும் மருந்தினைத் தெளிக்க வேண்டும்.

நடவு வயலுக்கு 10 டன் நன்கு மக்கிய குப்பை எரு இட்டு உழவு செய்தல் வேண்டும். 75 நாள்கள் வயதான நாற்றினை நடுதல் வேண்டும். நடுவதற்கு முன் நாற்றின் தலையை அறுத்து நட வேண்டும். நட்டு 20 நாள்கள் கழித்து 4 பாக்கெட் (800 கிராம்) அசோஸ்பரில்லம் எனும் நுண்ணுயிர் உரத்தை, குப்பை எருவுடன் கலந்து மேலுரமாகத் தூவ வேண்டும். அடுத்து நட்டு 45 மற்றும் 75-ஆம் நாள் முறையே 15 கிலோ, 10 கிலோ வேப்பம் பிண்ணாக்கினை மேலுரமாக இட வேண்டும். பூச்சி, வியாதி ஆகியவை வருமுன் தடுக்க 200 மில்லி நிம்பிசிடின் மருந்தை நடவு நட்டு 15 மற்றும் 30 நாள்களில் தெளிக்க வேண்டும். நட்ட நாளில் இருந்து 105-ஆம் நாளில் நெல் அறுவடைக்கு வரும். மகசூல் சராசரியாக ஏக்கரில் 20 மூட்டை (75 கிலோ மூட்டை) வரை கிடைக்கும். இதற்காகும் சாகுபடிச் செலவு ரூ. 4000 வரை ஆகும். செலவு போக வரவு ரூ. 5000 வரை கிடைக்கும். இந்த ரகத்தை விவசாயிகள் விரும்பி அதிகப் பரப்பில் சாகுபடி செய்வதற்குக் காரணங்கள், இது சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு உற்ற நண்பனாக இருப்பதும், அதிக லாபத்தைக் குறைந்த செலவிலேயே கொடுப்பதுமாகும். ●

சூப்பர் பொன்னி நெல் அறிமுக விழாவில் அந்த நாலு பேர் சொன்னார்கள்



❊ காவிரி நீரைக் கேட்ட ஜமீன் மனைவி: புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியைச் சேர்ந்த ஜமீன் அர்ச்சுனனின் மனைவி தெய்வானை அம்மாள் சொன்னது:

எனக்கு கிணற்றுப் பாசனததில 2 ஏக்கர் சூப்பர் பொன்னி சாகுபடி செய்ய முடிகிறது. இதை ஐந்து ஏக்கர்பரப்பில் நானும் சக விவசாயிகளும் சாகுபடி செய்ய தமிழக அரசு ஐப்பசி-கார்த்திகைப் பட்டத்தில் எங்கள் மாவட்டத்திற்கு 3 மாதமாவது காவிரித் தண்ணீரை விட வேண்டும்.

❊ கோபத்தைத் தணித்த சூப்பர் பொன்னி அரிசி:

தருமபுரி மாவட்டம் காவேரிப் பட்டணத்தைச் சேர்ந்த விவசாயி திரு ஏகாம்பரம் சொன்னது:

எங்கள் உறவினர் ஒருவரது வீட்டில் நடந்த திருமணத்தில் முதல் நாள் இரவு விருந்து வைக்க கடையில் கிடைத்த பிரியாணி அரிசி பயன்படுத்தப்பட்டது. அதன் தரம் சரியாக இல்லாததால் மாப்பிள்ளை வீட்டார் விருந்தில் திருப்தி அடையாமல் பெண் வீட்டார் பேரில் கோபம் கொண்டனர். உடனே திருமண நாள் அன்று கைவசம் இருந்த சூப்பர் பொன்னி அரிசியை உபயோகித்து விருந்து அளித்த போது பிரியாணியைச் சுவைத்துச் சாப்பிட்டு மனமகிழ்ச்சி அடைந்த மாப்பிள்ளை வீட்டார்கள் "இந்த அரிசி என்ன அரிசி" என்று கேட்குமளவிற்கு வந்து விட்டனர்.

❊ முதியவர்களுக்கு ஏற்ற சூப்பர் பொன்னி

நன்னிலம் தாலுக்கா பூங்குளத்தைச் சேர்ந்த விவசாயி சுப்பிரமணியம் சொன்னது:

(இவர் வயது 68. தொண்டையில் இவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு கழுத்தில் துவாரம் இடப்பட்டு உள்ளது. இதனால் அவரால் வாயால் பேச முடியாது. இருந்த போதிலும் நவீன கருவி ஒன்றை அந்த துவாரத்தில் வைத்துக் கொண்டு மைக்கின் முன்னால் பேசினார்)

சூப்பர் பொன்னி நெல்லை வீட்டில் உட்கார்ந்தவாறே விவசாயம் செய்யலாம். இதன் அரிசியை வயது முதிர்ந்தவர்கள் எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடியும்.

❊ மழையில் கரைந்தும் மறுபிறவி எடுத்த நெல்:

தென்னார்க்காடு மாவட்டம் பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமலை ரெட்டியார் சொன்னது:

இந்த வருடம் மழை வெள்ளத்தால் முற்றிலும் கரைந்த சூப்பர் பொன்னி மழை விட்டதும் வீரியமாக அடிக்கட்டையிலிருந்து துளிர்த்து வந்து இயல்பான மகசூலைத் தந்தது அனைவருக்கும் ஆச்சர்யத்தை அளித்தது. ●

செயலாளர் திரு.என். ஆதிமூலம் அவர்களிடமும் அதைத் தெரிவிக்கும் ஓர் எளிய - ஆனால் சிறந்த - விழாவை ஏற்பாடு செய்தார், திரு. ஜே பண்ணையின் தலைவர்.

அந்த விழா ஒரு வேளாண்மை மாநாடு போலவே காட்சி தந்தது. ஜே 18 பொன்னியைப் பயிரிட்ட விவசாயிகள், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்து தங்கள் அனுபவங்களை விவரித்தார்கள். அப்பப்பா! எப்படிப் பேசுகிறார்கள்?

சுப்ரமண்யம் என்னும் ஒரு விவசாயி நன்னிலம் அருகிலுள்ள கிராமத்திலிருந்து வந்திருந்தார், தொண்டையில் அறுவை சிகிச்சையினால் அவருக்குப் பேச முடியவில்லை. அதற்கென்று ஒரு கருவியை வைத்துக் கொண்டு மிகவும் சிரமத்துடன் தன் பழைய நினைவுகளை, ஜே 18 பொன்னியின் சிறப்பைப் பேசினார். பல ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்த வேளாண்மைத் துறை இயக்குனரும் உரையாற்றியதை நினைவு கூர்ந்தார்.

புதிய ரக அரிசியை விவசாயத் துறைச் செயலாளர் திரு.என். ஆதிமூலம் பெற்றுக்கொண்டு, பயனுள்ள சொற்பொழிவாற்றினார்.

ஜே பண்ணையின் அதிபர் திரு.ஏ. சிவசைலத்தின் சேவையைப் புகழ்ந்தனர். அவரது திருக்குமார[illegible] மல்லிகா சீனிவாசனைய[illegible] பாராட்டினார்

1945-46-இல் நான் ஸ்பென்[illegible] கம்பெனியில் பணியாற்[illegible] கொண்டிருந்த போது மவுண்ட்ரோ[illegible] கம்பெனிகளின் சிறப்பைப் பற்[illegible] பேசிக் கொள்வார்கள். கம்பெனி[illegible] எல்லாம் வெள்ளைக்காரர்களி[illegible] நிர்வாகத்தில் இருந்த காலம். சிம்[illegible] கம்பெனியின் நிர்வாகிகள் இளை[illegible] திரு. அனந்தராமகிருஷ்ணனின் க[illegible] உழைப்பையும், நிர்வாகத் திறனை[illegible] வெகுவாகப் பாராட்டுவார்க[illegible] அனந்தராமகிருஷ்ணன் எ[illegible] வார்த்தையை அவர்களால் உச்சரி[illegible]

பவில்லை. அதனால் 'ஜே' என்று
ாபுடனும் மரியாதையுடனும்
ழைத்தார்கள்.

ஆங்கிலேயர்கள்
ப்விட்டார்கள். ஆனால் அவர்கள்
டிய 'ஜே' என்ற பெயர்
ரயவில்லை. அந்தப் பெயரால்
ட்ட ஜே பண்ணையை அவர்
திரு.ஏ. சிவசைலம் திறம்பட
பாக வளர்த்தார். திரு. அனந்த
கிருஷ்ணனின் மற்றொரு
வர் திரு. கிருஷ்ணமூர்த்தி,
யனுடன் சேர்ந்து ஊக்கத்துடன்
கித்து வருகிறார். அன்று
ரை மேடைக்கு வருமாறு
ழத்தும் வராமல் பார்வை
ர்களுடன் முதல் வரிசையில்
ந்திருந்த அடக்கத்தை எண்ணி
தேன்.

ரு. சிவசைலத்தின் குமாரத்தி
தி. மல்லிகா சீனிவாசனின்
க ஆற்றலையும் அவர் கற்ற
ியையும் பற்றி நிறையக்
ர்விப்பட்டிருக்கிறோம்.
துதான் அவரை நேரே காணும்
கிடைத்தது. திருக்குறளில் ஒரு
'மகன் தந்தைக்கு ஆற்றும்
' என்ற குறளில் மகன் என்று
றதே ஏன் 'மகள்' என்று
ருவர் குறிப்பிடவில்லை
ார்கள். ஆனால் இன்று அந்தக்.
ள 'மகள்' என்றும் மாற்றிச்
லலாம்.

ருமதி. மல்லிகாவின்
பண்ணையின் சாதனையை
கும் - கச்சிதமான, பொருள்
ந்த சொற்பொழிவு. வேளாண்
் செயலாளர் திரு. ஆதிமூலம்
ரையும் பாராட்டியது முற்றிலும்

டாஃபே நிறுவனத்தின்
ரவில் நடைபெறும் ஜே
ணையிலுள்ள ஆராய்ச்சித்
யினரின் இடைவிடாத சலிக்காத
ய்ச்சியின் பயனாக உருவானதே
சூப்பர் ஜே 18 பொன்னி.
விவசாயிகளுக்குத் தேவையான
புதிய தொழில் நுட்பங்களை
ஜே பண்ணை ஆராய்ச்சி நிறுவனம்
தெரிவிக்கிறது. 35 ஆண்டுகளாக
விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து
செயல்படுகிறது. தமிழ்நாடு, புதுச்சேரி,
ஆந்திர மாநிலங்களில் ஆயிரக்
கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில்
பிரபலமாகிவரும் பொன்னி, ஐ.ஆர்.
50, ஜே 13 போன்ற நெல் ரகங்களை
விவசாயிகள் நலனுக்காக
வெளியிட்ட ஜே பண்ணை தற்போது
சூப்பர் பொன்னி 'ஜே 18' என்ற
ரகத்தையும் அறிமுகப்படுத்தி
யுள்ளது" என்று கூறினார் திருமதி.
மல்லிகா சீனிவாசன். இயற்கை
உரத்தைப் பயன்படுத்துவதால்
ஏற்படும் அமோக விளைச்சலைப்
பற்றியும் திருமதி. மல்லிகா
குறிப்பிட்டார்.

சூப்பர் 18 பொன்னி - அறிமுக
விழாவில் ஒன்றைத் தெளிவாக
அறிந்து கொண்டோம்.
இவ்வளவுக்கும் காரணம்
வேளாண்மைத் துறை ஆராய்ச்சி
அறிஞர் டாக்டர் எஸ்.எஸ்.
நாகராஜனின் சலியாத உழைப்பும்
ஆராய்ச்சியும்தான். சேர்மன் திரு.ஏ.
சிவசைலத்தின் பரிபூரண ஆதரவு
அவருக்கிருக்கிறது. ஜே
பண்ணையின் ஆராய்ச்சியில் அவர்
பூரண சுதந்தரத்தை அவருக்கு
அளித்திருக்கிறார். தமிழ்நாட்டிலுள்ள
விவசாயிகளுடன் கலந்து பேச,
சுற்றுப்பயணம் செய்ய, தடையற்ற
வசதியமைப்பும் வாய்ப்பையும்
அளித்திருக்கிறார். டாக்டர் எஸ்.எஸ்.
நாகராஜனின் பல்லாண்டு கால
அனுபவம் ஜே பண்ணையின்
செயலாக்கத்திற்குப் பெரிதும்
உதவுகிறது. விவசாயிகளின்
ஐயப்பாடுகளை அவ்வப்போது
கண்டறிந்து தீர்க்கிறார்.

சென்னைத் தொலைக்காட்சி
முன்பு (1) மிகப் பயனுள்ள நிகழ்ச்சி
ஒன்றை அளித்து வந்தது. மாலை
வேளைகளில் கிராமப்புற
விவசாயிகள் தொலைக்காட்சிப்
பெட்டி முன்பு 'வயலும் வாழ்வும்'
நிகழ்ச்சிகளில் கூடி விடுவர். டாக்டர்
எஸ்.எஸ். நாகராஜன் அளிக்கும்
பயிர்த்தொழில் தொடர்பான
சொற்பொழிவுகளை - ஆலோ
சனைகளை - கேட்பர். 'வயலும்
வாழ்வும்' விவசாயிகள் மட்டு
மல்லாமல் மற்றவர்களும் பார்த்துப்
பயன் பெற்றனர்.

இப்போது அந்த நிகழ்ச்சியின்
இடத்தை சினிமாவின் ஆபாசப்
பாடல்கள் ஆக்ரமித்து 'வேறு'
வளர்ச்சிக்கு உரமிடுகின்றன.

இதற்கெல்லாம் திரு.எஸ்.எஸ்.
நாகராஜன் மனம் தளரவில்லை.
அவருடைய யோசனை கேட்டு
நூற்றுக்கணக்கான பண்ணைகள்
உருவாயின. 'அமுதசுரபி' தீபாவளி
மலரில் ஒவ்வோர் ஆண்டும் மிக
முக்கியமான பகுதி டாக்டர் எஸ்.எஸ்.
நாகராஜன் எழுதும் வேளாண்மை
செய்து வெற்றியடைந்த தோட்டப்
பண்ணையாளரின் சாதனை பற்றிய
கட்டுரை.

தமிழ்நாட்டில் வேளாண்மைப்
பல்கலைக் கழகம் இருக்கிறது.
வேளாண்மை ஆராய்ச்சி
நிலையங்கள் பல இருக்கின்றன.
அவை பல புதிய ஆராய்ச்சிகளைச்
செய்து வருகின்றன. ஆனால்
திருப்போரூர் அருகே உள்ள ஜே
பண்ணை மௌனமாக ஒரு
புரட்சியைச் செய்து வருகிறது. அது
தமிழ்நாட்டின் நெல் உற்பத்தியில்
வெற்றி காணப் பல புதிய
யோசனைகளைக் கூறி வருகிறது.
நடைமுறையில் செய்து காட்டி
விவசாயிகள் பலனடைய வழி செய்து
வருகிறது.

ஜே 18 சூப்பர் பொன்னியைக்
கண்டுபிடித்துத் தமிழ்நாட்டுக்களித்த
ஜே பண்ணைக்கு ஒரு 'ஜே!' போட
வேண்டும் என்ற ஒலி என்னுள்
எழுந்தது.

பேருந்துப் பயணிகள் தொடர்ந்த வழக்கு

வீ.செ. கந்தசாமி

திருநெல்வேலியிலிருந்து, திருப்பதிக்குச் செல்வதற்காக, மனுதாரர்கள் ஐவர் தாங்கள் பயணம் செய்யும் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, திருநெல்வேலியில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் பயணச் சீட்டுகளை குறிப்பிட்ட பேருந்திற்கு முன் பதிவு செய்து பணம் கொடுத்து பயணச் சீட்டுகளும் வாங்கியிருந்தனர். பேருந்தின் தடம் எண் 983. பாபநாசத்திலிருந்து திருப்பதிக்குச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்த அப் பேருந்தின் எண் டி.என்.0049 என்றும், அது பிற்பகல் 3 மணிக்குப் புறப்படும் என்றும் அறிவிக்கப் பட்டிருந்தது. பயணம் செய்யும் நாளன்று, குறிப்பிட்ட பேருந்து, ஒரு மணி நேரம் காலதாமதமாகப் பேருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. அது வரும் வரையில் காத்திருந்த பயணிகள், அப் பேருந்தில் ஏறிப் பயணம் செய்தனர். அடுத்த நாள் காலையில் 7 மணிக்கு அப்பேருந்து வேலூர் வந்ததும், அனைவரையும் கீழே இறக்கிவிட்டு விட்டுச் சென்று விட்டது. விசாரித்ததில், மனுதாரர்கள் பயணம் செய்த அப்பேருந்து திருப்பதிக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றிருக்க வில்லை என்றும், ஆகவே, அப்பேருந்து திருப்பதிக்குச் செல்லவில்லை என்றும், மனுதாரர்கள் வேலூரிலிருந்து வேறு பேருந்தில்தான் திருப்பதிக்குச் செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. வேலூரில் இரண்டு மணி நேரம் காத்திருந்த பிறகு, வேறொரு பேருந்து காலை 9 மணிக்கு வந்து அவர்களை ஏற்றிக் கொண்டு திருப்பதி சென்றது.

பயணச் சீட்டுகள் முன்பதிவு செய்யப்பட்ட போது, திருநெல்வேலியிலிருந்து மனுதாரர்கள் பயணம் செய்த பேருந்து நேராகத் திருப்பதிக்குச் செல்லும் என்று தெரிவித்துவிட்டு, அதற்கு மாறாகப் பாதி வழியில் வேலூரில், தங்களை இறக்கி விட்டு, வேறு பேருந்தில் ஏறி, திருப்பதிக்குச் செல்லுமாறு போக்குவரத்துத் துறையினர் தெரிவித்ததும், வேலூரில் வேறு பேருந்து வருவதற்குச் சுமார் இரண்டு மணி நேரம் கால தாமதம் ஆனதும், மனுதாரர்களுக்கு மன உளைச் சலையும் கால விரயத்தையும் உடல் அசதியையும் உண்டாக்கியது. மேலும், வேலூரிலிருந்து திருப்பதிக்குப் புறப்பட்ட பேருந்தில் மனுதாரர்கள் மூவருக்கு அமர இடமில்லாமல் அவர்கள் நின்று கொண்டே செல்ல வேண்டிய வசதியற்ற நிலைமையும் ஏற்பட்டது. இதற்குக் காரணம், அப்பேருந்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட பயணிகளை விடக் கூடுதலாகப்பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்று மனுதாரர்கள் கூறினர். இதன் காரணமாக, ஐந்து மனுதாரர்களும் திருநெல்வேலி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மீதும், சென்னையிலுள்ள அதன் தலைமைக் கழகத்தின் மீதும், சேவையில் குறைபாடு கூறி திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் இழப்பீடு கேட்டு வழக்குத் தொடர்ந்தனர்.

எதிர் மனுதாரர்களான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினர், தங்களுடைய எதிருரையில், திருநெல்வேலியில் குறிப்பிட்ட பேருந்து புறப்படுவதற்கு
முன்பே, அப்பேருந்து வேலூ
வரையில் தான் செல்லுமென்றும்
திருப்பதி வரையில் செல்வதற்கு
அப்பேருந்திற்கு அனுமதி இல்லை
என்றும் ஒலிபெருக்கி மூலம்
அறிவிக்கப் பட்டதாகவும், அதற்கு
உடன்பட்டே மனுதாரர்களு
மற்றவர்களும் அப்பேருந்தி
பயணம் செய்தார்களென்றும்
ஆகவே போக்குவரத்துக் கழகத்தின
மனுதாரர்கள் அடைந்ததாக
கூறப்படும் காலவிரயத்திற்கும்
தொல்லைகளுக்கும், பொரு
இழப்பிற்கும் எவ்விதத்திலு
பொறுப்பாளியாக முடியாது என்று
வாதிட்டனர்.

வழக்கு விசாரணைக்கு வந்தது
எதிர் மனுதாரருடைய மேற்ப
வாதத்தை, அந்த வழக்கை விசாரித்
நுகர்வோர் குறைதீர் மன்றப
ஏற்கவில்லை. காரணம், மனுதாரர்க
குறிப்பிட்ட எந்தப் பேருந்திற்கு மு
பதிவு செய்து கொண்டு, பயண
சீட்டுகளை வாங்கினார்களோ
அப்பேருந்து திருப்பதிக்கு
செல்வதற்கு அனுமதி இல்லை
என்றால், அது குறித்து, பயண
சீட்டுகளை முன்பதிவு செய்த போதே
கூறியிருக்க வேண்டும். அவ்வா
செய்யாமல் விட்டு விட்டு, பேருந்
புறப்படும் நாளன்று, புறப்படும் சமய
ஒலிபெருக்கி மூலம் அது குறித்
அறிவிக்கப்பட்டிருந்தாலும், அது எதி
மனுதாரரின் பொறுப்பற்ற செயலே
யாகும். காரணம், நீண்ட தூர
பயணத்திற்காக எல்லா ஏற்பா
களையும் செய்து கொண்
வந்தவர்கள், பயணம் தொடங்க
போகும் கடைசி நேரத்தில், தங்க
பயணத்தைத் தள்ளிப் போடுவது
அல்லது வேறு மாற்று ஏற்பாடுக
செய்வதும், தங்களைப் பெரிது
தொல்லைக்கு உள்ளாக்கி
கொள்வதாகும். ஆகவே, அவ்வா
பேருந்து புறப்படும் நேரத்தி

'அமுதசுரபி' இதழுடன் இந்தியன் வங்கி இணைந்து நடத்திய

காப்பியப் போட்டி முடிவுகள்

முதற்பரிசு	ரூ. 5000	தியாக தீபம்	எழுதியவர்	மரு. பரமகுரு, குன்றக்குடி
2ஆம்பரிசு	ரூ. 3000	உளிகள்	எழுதியவர்	அரிமதி தென்னகன் புதுச்சேரி
3ஆம்பரிசு	ரூ. 1000	தேடல்	எழுதியவர்	ஆண்டாள் பிரியதர்ஷினி, சென்னை

பரிசுபெற்ற கவிஞர்களுக்கு அமுதசுரபி நிறுவனத்தாரும், இந்தியன் வங்கி நிறுவனத்தாரும் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறார்கள்.

றிவிப்பு செய்திருந்தாலும், அதுவும் திர் மனுதாரரின் சேவையில் றைபாடுள்ளது என்பதையே ட்டுகிறது. மேலும் வேலூரிலிருந்து, வறு பேருந்தில் மனுதாரர்கள் ருப்பதிக்குப் பயணம் செய்த போது, வர்கள் எந்தப் பேருந்தில் சன்றார்கள் என்பது பற்றியோ ப்பேருந்தில் அவர்களுக்காக துக்கப்பட்ட இருக்கைகளின் ண்ணிக்கை பற்றியோ அதில் த்தனை பயணிகள் பயணம் ய்தனர் என்றோ, எதிர் மனுதாரர் பாக்குவரத்துக் கழகம் எவ்வித ளக்கமும், நுகர்வோர் மன்றத்திற்கு ளிக்கவில்லை. இதிலிருந்தே, தெலான பயணிகளை அப் ருந்தில் ஏற்றிச் சென்றனர் என்ற நுதாரர்களின் கூற்று மறுக்கப்பட வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

மேலே கூறப்பட்ட காரணங் களால், எதிர் மனுதாரரின் சேவையில் குறைபாடு உள்ளதென்றும், அத்தகைய குறைபாடான சேவையினால் மனுதாரர்களுக்கு உடற் சோர்வும், பொருட்செலவும், காலவிரயமும், மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளதென்றும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் தீர்மானித்து, அதற்கீடாக ஒவ்வொரு மனுதாரருக்கும் தலா ரூ.500 இழப்பீடாகவும், வழக்கின் செலவுத் தொகையான ரூ.200ம் எதிர் மனுதாரர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இந்த உத்தரவு பிறப்பித்த ஒரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது.

மாவட்ட நுகர்வோர் மன்றத்தின் அத்தீர்ப்பை எதிர்த்து, எதிர் மனுதாரர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில், மேல் முறையீடு செய்தது. அம்மேல் முறையீட்டை விசாரித்த மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், இந்த வழக்கில், மாவட்ட நுகர்வோர் மன்றம் அளித்த தீர்ப்பு சரியானதே என்றும், அதில் தாங்கள் தலையிடுவதற்குத் தகுந்த காரணம் ஏதும் காட்டப்படவில்லை என்றும், மாவட்ட மன்றம் வழங்கிய இழப்பீட்டுத் தொகையும் செலவுத் தொகையும் நியாயமானதே என்றும் கூறி, மாவட்ட மன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து, அம்மேல் முறை யீட்டைத் தள்ளுபடி செய்தது.

●

"உங்களில் நிறைய பேர் என்னை இன்று ன் பார்த்திருப்பீர்கள். ஆனால் நான் போதுமே உங்களுக்கு ஏற்கனவே நெடுநாள் ிச்சயம் உள்ளவன் தான். எனக்கு உங்களை எல்லாம் தெரியும். நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள் என்றும் எனக்குத் தெரியும். எவ்வளவு நாள் வருந்துவீர்கள், உங்களது வருத்தங்கள் நின்று விடும். நீங்கள் உடனே அன்பு பாதையை பின்பற்றுங்கள்."

— சத்யசாயி


சரணாகதி



மனிதன் வாழவும், வாழ்வு முன்னேறவும் புதுப்புது விஷயங்களைக் கற்றுக் கொள்கிறான். புதுத் திறமைகளை முயன்று பெறுகிறான். இதுவரை வாழ்வு இப்படித்தான் முன்னேறியுள்ளது. எதிரியைச் சந்தித்தால் அவனை முறியடிக்கிறான். எதிரி சரணடைகிறான். எதிரி ஜெயித்தால், தான் சரணடைகிறான்.

சரணாகதித் தத்துவம் பக்திமார்க்கத்திற்குரியது. கீதையின் கருவாக விளங்குவது. தானே முயன்று பெறும் மோட்சத்தை விட, இறைவனைச் சரணடைந்து பெறுவது சுலபம் என்று கீதை கூறுகிறது. மோட்சம் பெற தவம் ஒரு கருவி; நியாயம், தர்மம் உதவும், "இவையெல்லாம் உண்மையானாலும், நானே அவற்றின் உற்பத்தி ஸ்தானமானதால், தர்மத்தை நம்புவதை விட என்னையே நம்புவது சிறந்தது" என்கிறது கீதை.

ஸ்ரீ அரவிந்தர் கூறும் சரணாகதி, மோட்சம் பெறுவதற்கன்று. இறைவனின் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்யும் திருவுரு மாற்றத்தை அடைய அவர் சரணாகதியை மேற்கொள்ள வேண்டும் என்கிறார். வாழ்வில் சரணாகதியை நாம் எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதே அன்பர்கட்கு அவசியம்.



யோக பரம்பரைக்கே ஸ்ரீ அரவிந்தருடைய சரணாகதி புதியது என்றாலும், நம் வாழ்வில் சரணாகதி என்ற கொள்கையின் வெளிப்பாடு அநேக இடங்களில் காணப்படுகின்றது. வீட்டில் குடும்பத் தலைவரின் பேச்சுக்கு மறு பேச்சில்லை, இருந்தால் குடும்பம் இருக்காது. சர்க்கார் ஆபீஸானாலும், தனியார் கம்பெனியானாலும், பண்ணையிலும், கல்லூரியிலும், அரசியல் கட்சியிலும், எந்த ஸ்தாபனமானாலும் அங்கு வேலை செய்யும் சிப்பந்திகட்கு உரியது சரணாகதி. நாம் அதைக் கீழ்ப்படிதல் என்கிறோம். உத்தரவை இடுவது அதிகாரி, முதலாளி, தகப்பனார், தலைவர் போன்றவர்கள். மற்ற அனைவரும் உத்தரவை அமல்படுத்த வந்தவர்கள். எந்த ஊழியருக்கும் உத்தரவு சரியா எனக் கேட்கும் உரிமையில்லை. இராணுவத்தில் இது கடுமையாகப் பின்பற்றப்படுகிறது. (Theirs is to do & die, theirs is not to question why) முடியாட்சி, மக்களாட்சி, அல்லது வேறெந்த ஆட்சி எப்பொழுது வந்தாலும், நிறுவனம் செயல்பட உறுப்பினர் பணிதல் அவசியம். இதை, கட்டுப்பாடு discipline என்கிறோம். இது இல்லாமல், துரும்பும் அசையாது. ஸ்ரீஅரவிந்தர் இதையே அன்பால் செய்ய வேண்டும் என்கிறார்.

அதிகாரத்திற்குக் கட்டுப்படுவது கீழ்ப்படிதல்,
அன்புக்குப் பணிவது ஆன்மிகச் சரணாகதி.

அன்னை, மனிதனை நாடிவரும் தெய்வம். தவத்திற்காகவோ, ஸ்தோத்திரத்திற்காகவோ அன்னை காத்திருக்கவில்லை. உலகில் அவர் சக்தி 40 வருடமாகச் செயல்படுகிறது. அழைத்தால் உடன் வருவார்.

'கர்மயோகி'

நம்மைச் சுற்றி அன்னை யிருக்கிறார். இன்னும் நம் அழைப்பின்றிச் செயல்பட அவர் முடிவு செய்யவில்லை. அழைப்பின் பலனை அன்பர்கள் அறிவார்கள். பிரார்த்தனை, அழைப்பு என்பவை ஆரம்ப நிலை. சரணாகதி என்பது முடிவான மனநிலை. நாமே செய்தாலும், காரியங்களை அன்னையே நடத்துகிறார் என்ற ஞானம் ஏற்பட்டு நாமே முன்வந்து நம் பொறுப்பை அன்னையிடம் ஒப்படைப்பது சரணாகதி. ஆபரேஷனுக்குப் போனால் டாக்டரை நம்பி உடலை ஒப்படைக்கிறோம். ரயிலில், பஸ்ஸில் போனால் டிரைவரை நம்பி உயிரை ஒப்படைக்கிறோம். இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அளவில் நாம் நம்மைச் சரணடைகிறோம்.

எழுதுவது, கையால்- உடலால்- செய்யும் காரியம், சிந்திப்பது, மனத்தால் செய்யும் செயல். எழுதப் பயிற்சி பெறுகிறோம். சிந்திக்கக் கல்வியை நாடுகிறோம். எந்த ஒரு செயலைச் செய்யவும் ஒரு திறமை தேவை.

அன்னை நம்முள் முழுமையாகச் செயல்படத்
தேவையான திறமை ஆன்மிகச் சரணாகதி.

வாழ்க்கையைப் பொருத்தவரை பலனைக் கொண்டுதான் நாம் அறிய முடியும். பிரார்த்தனை முதல் நிலை, அழைப்பும் உயர்ந்ததெனினும் ஒருவகையில் முதல் நிலைக்குரியதே. சரணாகதி முடிவான நிலை எனில், பிரார்த்தனையின் பலனைக் கண்டவர்கள் சரணாகதியின் பலனைக் கண்டால், அதன் அளவு புரியும். பரீட்சை எழுதி பாஸ் நிலை என்றவன் பிரார்த்தனை செய்தான்; பாஸாயிற்று, 35 மார்க் வருமா எனக் கருதியவனுக்கு 41 வந்தது என்று நாம் பலமுறை பார்த்துள்ளோம்.

பரீட்சைக்கு 45 நாளிருக்கும் பொழுது, அதுவும் அது எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை என்ற பொழுது, முதல் தலைமுறையில் படிக்க வந்த பட்டிக்காட்டுப் பையன் அதுவரை பாஸ் செய்யாத ஆங்கிலத்தில் பாஸாக முயன்று, ஆசிரியர்கள் எவரும் ஏற்காத நிலையில் அன்னை பக்தர் அவனை ஏற்றதுடன், இக்குறுகிய காலத்தில் சொந்தமாக ஆங்கிலம் எழுதக் கற்றுக் கொள் என்றதை மாணவன் ஏற்பது கீழ்ப்படிதலில்லை. பயம் அவனைக் கொல்லும். அவனுக்குப் புத்தியில்லா விட்டாலும், ஆன்ம விழிப்பிருந்தது. ஆசிரியர் சொல்லை அவன் ஏற்றது சரணாகதியாகும்.

அவன் 45ஆம் நாள் பரீட்சையில் பள்ளியில்
முதல் மாணவனாகத் தேறினான்.
மனம் சரணாகதியை ஏற்றால் வாழ்வு தரும் பரிசு பெரியது.

அன்னைக்குகந்த முறை சரணாகதி. நாம் பயத்தால் பீடிக்கப்பட்ட பொழுதும், முடியாது எனக் கைவிட்ட பொழுதும் நிர்ப்பந்தத்தால் சரணாகதியை மனத்துள் அனுமதித்து பெரும் பலன் பெற்றதை அறிவோம்.

தைரியமாக, நம்மால் முடியும் என்ற பொழுதும்,
நாமே விரும்பி, பக்தியாலும், நம்பிக்கையாலும், நம்
செயல்களுக்கு முழுப்பொறுப்பை அன்னையிடம் ஒப்படைப்பது சரணாகதி.

எடுக்கவா, கோக்கவா என்ற துரியோதனனும், மகனே உன்னிஷ்டப்படி என் தலையை வெட்டு என்ற புத்தரும், பிள்ளையைக் கறி சமைத்த நாயனாரும் ஏற்ற மனநிலைகள் சிகரமானவை. அவற்றுள் சரணாகதித் தத்துவம் வேறு உருவத்தில் கலந்துள்ளது. சரணாகதிக்குரிய மனப்பான்மை நம்மை ஆன்மிகத்தின் சிகரத்திற்கே எடுத்துப் போய், அங்கேயே நிலையாக நிறுத்தும்.

நம்மால் சட்டை போட்டுக் கொள்ள முடியும். இதை ஏன் அன்னைக்கு சரணம் செய்ய வேண்டும் எனக் கேட்கலாம். சட்டை போடுவது செயல். அதற்கு முன் அதை நாம் மனத்தால் நினைக்கிறோம். அது எண்ணம். புது சட்டை ஆனால் அதைப் போடுவதில் சந்தோஷம். சட்டை போடுவதைச் சரணம் செய்வதெனில், போடும் செயல், போடவேண்டும் என்ற எண்ணம், போடுவதால் சந்தோஷம் என்ற உணர்ச்சி ஆகியவற்றைச் சரணம் செய்கிறோம்.

செயலாலும், உணர்வாலும், எண்ணத்தாலும்
சட்டை போடுவதைச் சரணம் செய்வதால், நாம்
அன்னைக்குரியவராகிறோம்.

செய்ய முடியும், செய்யத் தெரியும் என்ற பொழுது சரணாகதி மனத்தால் அவற்றைச் செய்யும் திறனை அளிக்கிறது. மனம் வாழ்வில் வலிமை பெறுகிறது. அதன் மூலம் எந்தச் செயலையும் முடியும் என்ற பொழுது சரணம் செய்தோமோ, அதை மனத்தால் செய்யும் திறமை பெறுகிறோம்.

நினைத்தால் நடக்கின்றது என்பதே இத்திறமை.

4 கோடி ரூபாய் முதலீடுள்ள ஒரு கம்பெனியை வாங்கும் திறனுள்ள முதலாளி, தாமே முன்னின்று அத்தனையும் செய்வார். அதைப் பிறரிடம் ஒப்படைக்க முடியாது. அவர் பக்தராகி, சரணாகதியை மேற்கொண்டு தம்மால் முடியும் என்ற இச் செயலை. அன்னையிடம் சரண் செய்து பணிகளை நடத்தி வெற்றி பெற்றால், அடுத்தாற்போல் இதே போன்ற வேறு கம்பெனி ஒன்றை வாங்க நினைத்தால், அவர் நினைத்தது நடக்கும்.

முடியாது என்பதைச் சரணம் செய்தால் காரியம் முடியும்.
முடியும் என்பதைச் சரணம் செய்தால் நினைத்தது நடக்கும்.

மலர்

சரணாகதிக்குரிய மலர் ரோஜா, நாம் நாட்டு ரோஜா என்பது, ஆசிரம பாஷையில் இதற்கு surrender rose எனப்பெயர்.

தொடர்ந்து அன்னைக்கு ரோஜா மலரை அர்ப்பணித்தால் மனத்தின் முனைப்பு மழுங்கி, குறைவதைக் காணலாம்.

எளிமையான கிரமம்

பிறரிடம் நம் பொறுப்பை ஒப்படைப்பது எளிது. அன்னையிடம் நம் பாரத்தை மாற்றுவது எளிது. இது பொது அனுபவம். ரிஸல்ட் வந்து விட்டது. தபாலைப் பிரித்துப் பார்த்தால் பாஸா, பெயிலா எனத் தெரியும், தபாலைப் பார்த்தபின் அதைப் பிரித்துப் பார்க்காமல் அன்னையை நினைப்பது சிலரால் முடியுமானாலும், பலருக்குச் சிரமம், கை தானே கடிதத்தைப் பிரித்து விடும். அன்னை மறந்து விடும்.

ஊருக்குப் போயிருந்த மகன் வந்து விட்டான் அவனைப் பார்த்த பின், அவனை அழைப்பதை அன்னையிடம் சரணாகதி பயின்று அழைப்பது பாசமான பெற்றோரால் முடியாத செயல். அப்படி செய்தால் பாசம், அன்பாக உயரும், நம் அன்றாட உணர்ச்சிகளை அதுபோல் சரணம் செய்ய முடிந்தால் அவருக்கு யோகம் பலிக்கும், அவர் யோகத்தை மேற்கொள்ளாதவரானால் வாழ்க்கை "யோகமாக"- அதிர்ஷ்டமாக மாறும்.

பொன்மொழி

“எல்லா மதங்களும், மனிதன் தன் இதயத்தை சுத்தம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றன. கோபம், தாபம், பொறாமை, ஆசை, வெறுப்பு இவற்றிலிருந்து நம் இதயங்களை விடுவிக்க வேண்டும். எல்லா மதங்களுமே நமக்கு கடவுளின் வெகுமதியாக அவரது கருணை நமக்கு கிடைக்கும் என்று கூறுகின்றன. நான் மேல், இன்னொருவர் கீழ் என்பதெல்லாம் நமது அகம் நிறைந்த இதயத்தில் தான் ஏற்படுகிறது. யாராவது தன்னை மேலானவன் என்று நினைத்தால், அல்லது தங்களது மதம் மற்றவர்களை விட உயர்ந்தது என்று நினைத்தால் அவன் கடவுள் நம்பிக்கையை விட்டு வழுவியிருக்கிறான் என்று அர்த்தம்! இதை விட்டு இதயத்தை தூய்மைப்படுத்தும் சாதனைகள் தான் உலகத்தின் எல்லா மதங்களையும் ஒற்றுமையை நன்றாக வளர்க்கும். ”

— சத்ய சாயி



▲

பழைய மாமல்லபுரம் சாலையில் அடையாறிலிருந்து 35கி.மீ. தொலைவில் திருப்போரூர் அருகே ஸ்ரீராம் ஆட்டோ காம்பொனென்ட்ஸ் (சென்னை) லிட்,. என்ற நிறுவனத்தை ஸ்ரீராம் குருப் நிறுவனங்கள் தொடங்குகிறார்கள். டிட்கோவின் பங்கும் ஆதரவுடன் 21 கோடி மதிப்பீடுள்ள திட்டம் இது. (ஐடிபிஐ, ஐஐபிஐ உதவியும் உண்டு) தமிழக முதல்வர் கலைஞர் அலுவலக அறையில், எளிமையான, திட்டம் கையெழுத்திட்டளிக்கும் நிகழ்ச்சி. போட்டோவில் முதல்வர், திரு.ஏ.வி.எஸ் ராஜா - வைஸ்சேர்மன் மற்றும் பிரஸிடென்ட், ஸ்ரீராம் நிறுவனங்கள் சார்பாக திரு.ஜி.வி. ராமன் - எக்ஸிகியூடிவ் சேர்மன், திரு.ஆர். கோபாலன், ஐ.ஏ.எஸ்.- டிட்கோ மேலாளர், டிட்கோ எக்ஸிகியூடிவ் டைரக்டர் திரு.கே. கணேசன்.



...னையில் பழம்பெரும் ...பார்த்தசாரதி சபையினர், ...ஆண்டு விழாவை, கலை ...வாக நடத்தினார்கள். விழாவை ...ல்லி தேசிய கலாசார ...னத்தின் தலைவரும், சங்கீத ...அகடமியின் உறுப்பினரும் ...டாக்டர் என்.பி. சேஷாத்திரி தொடக்கி வைத்து சபையின் சேவைகளைப் பாராட்டினார். விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு. ஏ.நடராஜன். அன்று நடனமாடிய குமாரி வேதா கோபாலனுக்கு விருது வழங்கினார். சபையின் தலைவர் திரு. நல்லி சின்னசாமி செட்டியார், நடன குரு திரு. வி.ஆர். சாம்ராஜ் பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். 15 நாள்கள் நடந்த இந்த விழாவில் பல கலைஞர்கள் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.

நல்ல தமிழ்

பேராசிரியர் தி. முத்து கண்ணப்பர்

பிழைகளும் திருத்தங்களும்

1. வருகை தர

அழைப்பிதழ்களில் பெரும்பாலோர் இவ்வாறு 'வருகை தர' வேண்டுகிறோம் என்றே முடிக்கின்றார்கள். அது அவ்வளவு சரியன்று. 'தர' என்றால் கொடுக்க என்றுதானே பொருள்படும்? வருகையைத் தர முடியுமா? 'வர' என்று, செய்ய என்னும் பொருளில் தானே கூறுகிறார்கள்? அது பொருத்தமானதா? எனவே, 'வருகை புரிய' என்று சொல்வது தான் சரியானது; பொருத்தமானது.

2. பேச்சுவார்த்தை நடந்தது

இந்தத் தொடர் பேச்சு வழக்கில் இருந்து இப்போது எழுத்து வழக்கிலும் வந்துவிட்டது. பேச்சை-வார்த்தையை நடத்த முடியுமா? இது வழக்கில் வருவதற்கு மூலகாரணமாய் இருந்தவை மக்கள் தொடர்புச் சாதனங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவையான வானொலியும், தொலைக்காட்சியுமே தான். 'இதைப் பற்றிப் பேசினார்கள்' என்று சொன்னாலே போதுமே. 'இந்தச் செய்தி பற்றிப் பேசப்பட்டது, விவாதிக்கப்பட்டது' என்று கூடச் சொல்லலாமே! எப்படியோ, இது இப்போது வழக்கில் வந்துவிட்டது. இப்படிச் சொல்வது சரியன்று என்று உண்மையைச் சுட்டுகின்றோமே, அன்றி இந்த வழக்கைத் தடுத்து விடுவது நம் கருத்தன்று.

3. நாம், நாங்கள்

இந்த இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தருவன போலத் தோன்றுகின்றன. ஆனால் இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது. 'நாம்' என்றால் தன்மையோடு முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்துக்கும் பொதுவாய் வருவது. (எ.டு) 'நாம் பார்க்கலாம்'; நாம் செய்யலாம்' என்றால் நானும், எதிரில் உள்ளவர்களும், தொடர்புடைய மற்றவரும் சேர்ந்து பார்ப்பதை, செய்வதை உணர்த்துகிறது அல்லவா? ஆனால், 'நாங்கள்' என்றால், முன்னிலையில் உள்ளவரை நீக்கி தன்னையும் தொடர்புடைய படர்க்கையில் உள்ளவர்களையும் குறிக்கிறதல்லவா? 'நாங்கள் செய்தோம்' என்று சொன்னால் எதிரே உள்ளவரை நீக்கி, தானும் தொடர்புடைய பிறரும் (படர்க்கை) செய்ததாகத்தானே பொருள்படும்? இந்த வேறுபாட்டை உணர்தல் வேண்டும்.

4. தவறான சில சொற்றொடர்கள்

''.....வரவேண்டும், செய்ய வேண்டும்,'' போன்ற, 'வயது வந்தோர் கல்வி, சிறார் கல்வி' போன்ற என்று தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழி கூறப்படுகின்றன. இத்தகைய சொற்றொடர்களில் 'ஆகியன' 'முதலியன' என்னும் சொற்களைச் சேர்த்துக் சொல்வது சிறந்தது.

(எ.டு) 'வரவேண்டும், செய்ய வேண்டும் முதலியன/ ஆகியன போன்ற', என்றும் 'வயது வந்தோர் கல்வி, சிறார் கல்வி முதலியன/ ஆகியன போன்ற' என்றும் சொல்வது தான் பொருத்தமானது.

5. முந்திரிக் கொட்டை

இதன் பருப்பு மிகவும் சுவையானது; உணவு வகைகளில் சேர்க்கப்படுவது. சத்துத் தருவது.

இதற்கு ஏன் இப்படி பெயர் வந்தது? இப்படிச் சொல்வது சரியா? என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். காரண பொதுவாகக் கொட்டைகள் அல்ல விதைகள் பழங்களின் உள்ே இருக்கும். ஆனால், முந்திரி கொட்டை மட்டும் பழத்தி வெளியே இருக்கிறது அல்லவ மேலும் மற்றப் பழங்களி கொட்டைகள் அல்லது விதைக கண்ணுக்குத் தெரியாம பழங்களின் உள்ளே மறைந் இருக்க, இதன் கொட்டை மட்டு பழத்தின் வெளியே-முன்ே தெரிவதால்தான் இந்தப் பெய வந்தது. அதனால் இதன் சரியா சொல் 'முன்தெரி கொட்ை என்பதுதான். முன்தெரி கொட்ை என்பதில் உள்ள 'தெரி' என்னு சொல் திரிந்து, முந்திரி கொட்டையாக வழக்கி வந்துள்ளது. ஆகவே இதை 'மு தெரி கொட்டை' என் சொல்வதுதான், சிந்தித்துப் பார்க்கு போது சரியென்று உணர முடிகிற தமிழில் 'முந்திரி' என்றால் வே பொருளை உணர்த்தும் சொ என்பதைக் குறிப்பிட வேண்டு முற்காலத்தில் எண்களை துல்லியமாகக் குறிக்க (எண்ணல காணி, மாகாணி, முந்திரி - என் சொற்கள் வழக்கில் இருந்தன. இ முழு எண்ணின் பின்னங்க 'முந்திரி' என்ற சொன்னால் 320-இ ஒரு கூ (1/320) என்றுதான் பொருள்பட இது பழந்தமிழர்களின் கணி நுண்ணறிவைக் காட்டுகிறது என்ப பெருமைக்குரியது. எனவே 'முன்தெரி கொட்டை' என்பதுதா மிகவும் பொருத்தமானது என் கொள்ளலாம் அல்லவா?

உறவுமுறைச் சொற்களில் சி

1. ஓரகத்தி

முன்பெல்லாம் பெரும்பாலு கூட்டுக் குடும்ப முறையே பரவலா இருந்தது. உடன் பிறந்தவர்க

இருவர், மூவர், பலர் - சகோதரர்கள்) திருமணம் செய்து கொண்டு ஒரே வீட்டில் வாழ்வர். இந்த உடன் பிறந்தோர்களின் மனைவியர் 'ஓரகத்தியர்' எனப்படுவர். அதாவது அகம் என்றால் வீடு. ஒரே வீட்டில் குடும்பத்தில்) வாழுகின்ற சகோதரர்களின் வாழ்க்கைத் துணைவியர்கள் என்பது பொருள்.

. சக்களத்தி

இப்படித்தான் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் வழங்கப்படுகிறது. ஆனால் இதை 'சக்களத்தி' என்று கூறுவதுதான் சரியானது.

முன்பெல்லாம் பலதார முறை வழக்கில் இருந்தது. ஓர் ஆண்மகன் இரண்டு பெண்களை மணந்து கொள்வதுண்டு. களத்திரம் என்றால் மனைவி என்பது பொருள். 'சக' என்பது இணையான, துணையான, உடனான - எனப் பொருள்படும். அதனால் ஒரு மனைவிக்கு இணையாக, உடனாக இருக்கும் மற்றொரு மனைவி 'சக களத்தி' என வழங்கப்படுவாள்.

'சக்களத்தி' என்னும் இச்சொல்லைச் 'சக்கழுத்தி' என்று வழங்குவதில் கூடத் தவறிருப்பதாகத் தோன்றவில்லை. 'கழுத்தி' என்றால் ஒருவனுக்குத் தாலி கட்டக் கழுத்தைக் கொடுத்தவள். 'அவருக்குக் கழுத்தைக் கொடுத்தேன்' என்பது, அவனை மணந்து கொண்டேன் என்னும் பொருளில் வழங்குவது தெரிந்ததே.

எனவே, 'சக்கழுத்தி' என்றால் ஏற்கனவே கழுத்தைக் கொடுத்த (மணந்து கொண்டுள்ள) ஒருத்திக்கு உடனாக இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டவள் என்று பொருள்படுமல்லவா?

இப்போதெல்லாம் நடைமுறையில் உள்ள சட்டப்படி சக்களத்திக்கே இடமில்லை. ஆனால் வழக்கில் உள்ளதைக் குறிப்பிடுகிறோம்.

3. நாத்தி

நாத்தி என்றால் கணவனின் உடன்பிறந்தவள். 'நாத்தனார்' என்றும் சொல்வதுண்டு. இச்சொல் இலக்கியங்களில் 'நாத்தூண்' என்றுதான் வழங்கப்படுகின்றது. (நாத்தூண் நங்கை - சிலம்பு 16:19) 'நாத்தூண் + ஆர் = நாத்துணார்' என்பது திரிந்து நாத்தனார் என்றாகியது.

இந்தச் சொல்லைச் சிலர் 'நாத்தீ' என்று இறுதியிலுள்ள 'தி' என்னும் குற்றெழுத்தை 'தீ' என்று நெடிலாக்கி, அதற்கு வேடிக்கையான காரணமும் கூறுகிறார்கள். அதனையும் அறிவது நல்லது.

குடும்பத்தில் மணமாகாத சகோதரி இருக்க, சகோதரன் மணம் புரிந்து கொள்ளக் கூடாது என்பது தமிழ்நாட்டில் முன்னர்ப் பரவலாக இருந்து வந்தது. அதைக்குறிக்க 'கன்னி இருக்க காளை மணையேறக் கூடாது' என்னும் பழமொழியும் உண்டு. இதில் காரணமும் உண்டு. மணமாகாத சகோதரி வீட்டில் இருக்க, சகோதரன் மணந்து கொண்டு ஒரே வீட்டில் வாழ்ந்தால், இந்தக் கன்னிக்கு மனக் கலக்கமும், மணம் பற்றிய ஏக்கமும் உண்டாகும். தன்னிடத்தில் அளவற்ற அன்பு கொண்டிருந்த தன் சகோதரனின் அன்பு பெரும்பாலும் அவன் மனைவி மீது செலுத்தப்பட்டுவிடும். அது இந்தச் சகோதரிக்கு வெறுப்பையும், பொறாமையையும் உண்டாக்கும். அதனால் அவள் தன் பெற்றோர்களிடம் அண்ணியைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கலகம் ஏற்படுத்தவும் கூடும். அதனால் அவள் 'நாத்தீ' - நாவினால் குடும்பத்தையே சுட்டு விடுபவள், கலகம் உண்டாக்கி விடுபவள் என்று கூறுவர். இது வேடிக்கையாகத் தோன்றினாலும் உண்மையும் உள்ளதல்லவா?

வலி மிகுமிடங்கள் சில

வலி மிகுமிடங்களைப் பற்றி முந்தைய இதழ்களில் போதுமான அளவு அறிந்து கொண்டோம். எனவே இப்போது ஒன்றை மட்டும் அறிந்து கொள்வோம்.

அற்றை, இற்றை, எற்றை இச்சொற்களுக்கு முன் வல்லெழுத்து (க், ச், த், ப்) மிக வேண்டும்.

(எ-டு)

அற்றை + திங்கள் = அற்றைத்திங்கள்
இற்றை + திங்கள் = இற்றைத்திங்கள்
எற்றை + கண்டான் = எற்றைக்கண்டான்

'அற்றை' என்றால் அன்றைய அல்லது அந்த நாள். 'இற்றை' என்றால் இன்றைய அல்லது இந்த நாள் எனப் பொருள்படும்.

தம் தந்தையையும், தந்தை ஆண்ட பறம்பு நாட்டையும் இழந்த பாரி மகளிர் ஒரு முழுமதி நாளன்று, அம்முழு மதியை நோக்கி 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்...' என்று பாடியது இவற்றுக்கு எடுத்துக் காட்டு. 'எற்றை' என்றால் எப்பொழுதும் என்று பொருள்படும்.

'இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும்' என்று திருப்பாவையில் (29) ஆண்டாள் கூறுவதை நினைவு கொள்வோம். எனவே 'எற்றைக்கும்' என்றால் எப்பொழுதும் என்பது பொருள். எற்றைக்கும் நல்ல தமிழ் வாழும்.





படத்தில் (இடமிருந்து வலமாக) உட்கார்ந்திருப்பவர்கள்
பால்யூ. ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், நா
ராமச்சந்திரன், வித்வான் வே. லட்சுமணன், கலைமாமணி
விக்கிரமன், திருமதி. ராஜலட்சுமி விக்கிரமன், டாக்டர்
ராஜலட்சுமி ராதாகிருஷ்ணன், நீலவன், புஷ்ப
தங்கதுரை (நிற்பவர்கள்) கீதாஞ்சலி ஹோட்டல் அதிப
ரூபன், பின்னலூர் மு. விவேகானந்தன், டாக்டர் எஸ்.என்
நாகராஜன், ஏ.வி. ராஜகோபால் (ராஜ்) சுப்ரபால
டி.ஆர். கணேசன், ஜெயரதன், நாகராஜகுமார்
பகவானந்ததாசன், கண்ணன் விக்கிரமன், பால இரமணி
ஆண்டாள் பிரியதர்ஷினி, திருமதி சாவித்திரி யோகா
யோகா.

அமுதசுரபியில் என் முதல் சிறுகதை

கலைமாமணி விக்கிரமன்

1949 பிப்ரவரி மாதம் 4ஆம் தேதி நான் 'அமுதசுரபி' அலுவலகத்திற்குள் அடியெடுத்து வைத்தேன். அங்கு சேர்வதற்குச் சில நாள்கள் முன்பு, சிறுகதை ஒன்றை 'அமுதசுரபி'யில் வெளியிட என் ஓவிய நண்பர் ஸுபா அவர்களிடம் தந்தேன்.

நான் பணிக்குச் சேர்ந்தவுடனேயே பிப்ரவரி இதழில் அந்தக் கதை வெளிவந்தது. அப்போது 'அமுதசுரபி' தமிழ் மாதம் முதல் தேதி வெளிவரும். எல்லாமே ஆங்கிலத் தேதி வழக்கில் இருக்கும்போது பிடிவாதமாக இலக்கியப் பத்திரிகை என்பதற்காக நாம் தமிழ்த் தேதியைக் கடைப்பிடிப்பதால் நிர்வாகச் சிக்கல், பொருளாதார இழப்பு ஏற்படும் என்பது என் கருத்து. அப்போதே அழுத்தமாக அதைச் சொல்லுவேன். மொழிக் கொள்கை, பண்பாட்டை எதிர்க்க வேண்டுமென்பதற்காக அன்று; பொருளாதாரக் கண்ணோட்டத்தில்.

கடைக்குச் சென்று வார, மாத இதழ்களை வாங்குபவர்களிடம் ஆங்கில மாத முதல் வாரம் சிறிது பணப் புழக்கம் இருக்கும். புதிதாக வரும் இதழ்களை வாங்குவார்கள். பிறகு பிடித்திருந்தால் அவற்றைத் தொடர்ந்து வாங்குவார்கள். மாதத்தின் நடுவே என்றால் பணம் இராது. விற்பனையின் முதல் ரகசியமே அதுதான். (பல ஆண்டுகள் கழித்தே, ஆங்கிலத் தேதியில் வெளியிடுவதை வழக்கப்படுத்தினேன்)

என் சிறுகதையின் முதல் ரசிகர் ஓவியர் ஸுபா (எல்லாச் சிறுகதைகளுக்கும் முதல் ரசிகர் படம் வரையும் சித்திரக்காரராகத்தானிருக்க வேண்டும்!) என் சுப்ரமண்யம் என்ற பெயருடைய அவரும் நானும் பள்ளித் தோழர்கள். அவருடன் பேசிக் கொண்டே நடந்து செல்லும்போது கதையின் கரு உதயமாகும். அவரிடம் கதையைச் சொல்லிக் கொண்டே கதைக்கு வடிவம் கொடுத்து விடுவேன். நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டேயிருப்பார். அவர் மிகப் பொறுமைசாலி.

'விஷக்கத்தி' கதையை அவரிடம் சொன்னேன்.

"அமுதசுரபிக்கு எழுது. ஆசிரியர் வித்வானிடம் சொல்லிப் போடச் சொல்கிறேன்" என்றார்.

நான் அப்போது தமிழ்ப் பண்ணையில் பணி செய்து கொண்டிருந்தேன்

''நன்றாய் இருந்தால் மட்டும் வெளியிடச் சொல்லுங்கள். சிபாரிசுக்காக வேண்டாம்" என்றேன்.

1944 - 45லிருந்து பத்திரிகைகளுக்குக் கதை எழுதி அனுப்பி, சிபாரிசின்றி கதை பிரசுரமாக வேண்டுமென்பதில் உறுதியுடன் இருந்தேன்.

கதை கிடைத்த பிறகு என்னைப் பார்க்கும்போது, "விஷக்கத்தி வேம்பு வருக" என்று வித்வான் ஸார் வேடிக்கையாக அழைப்பார்

ஸூபா சித்திரம் வரைய, 'அமுதசுரபி' பிப்ரவரி இதழில் அந்தக் கதை வெளிவந்தது. 'அமுதசுரபி'யில் வெளிவந்த முதல் கதை அது. 50 ஆண்டுகளுக்கு முன்பு வெளி வந்த அந்தச் சிறுகதையை 1998 மார்ச் அமுதசுரபி இதழில் (பக்கம் 19) வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஓவியமணி 'கோபுலு' அவர்கள் சித்திரம் வரைந்தது எனக்குப் பெருமையே. 50 ஆண்டுகளுக்கு முன்பு அவரைச் சந்திக்க முடியுமா? பேச முடியுமா? என்று நினைத்ததுண்டு.

அரைநூற்றாண்டுக்கு முன்பு வெளிவந்த கதை என்ற பெருமையுடன் 'அமுதசுரபி'யில் வெளிவந்த என் முதல் சிறுகதை என்ற சிறப்பும் அதற்கு உண்டு. மற்றொரு சிறப்பு 21ஆவது வயதில் எழுதப்பட்ட சிறுகதை! 21ஆவது வயதில் கதை எழுதுவதில் அப்படி என்ன பெருமையும் சிறப்பும் இருக்கின்றன என்ற கேள்வி எழலாம். 50 வருடங்கள் கழித்துப் படித்துப் பார்க்கும்போது, நம் எழுத்துக்கு வெட்கப்படுகிறோமோ, அல்லது பெருமைப்படுகிறோமா, என்றறிய வேண்டுமன்றோ?

50 ஆண்டுகளுக்கு முன்பு சிறுகதை இலக்கியம் எப்படி இருந்தது? என் எழுத்து எப்படி இருந்தது? சிறுகதை உத்தி, நடை, கற்பனை, திருப்பங்கள் எப்படி இருந்தன? என்று ஆராய்வதற்கும் உதவும்.

இது வீடியோ யுகம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வீடியோ கிடையாது. அப்போதைய நடை உடை ஆகியவற்றை வீடியோ எடுத்து இப்போது போட்டுப் பார்த்தால் அசட்டுத்தனத்தை மீண்டும் பார்த்துத் தலைகுனிகிறோமா? கம்பீரமாக மகிழ்கிறோமா?

சென்ற இதழில், 'பிப்ரவரி 4 - 1949' என்ற கட்டுரை எழுதியவுடன், நண்பர்கள் சிலர் அன்றைய மாலை எனக்கு ஒரு விருந்து கொடுக்கத் திட்டமிட்டு திரு. யோகா மூலம் அழைத்தார்கள். மிகவும் எளிய கூட்டம். இந்த நாளைக் கொண்டாட வரவேண்டும்' என்று போட்டோ கலைஞர் திரு. யோகா முன்னின்று அழைத்தார்.

யார் யார் வருகிறார்கள் என்று நான் கேட்கவில்லை. வித்வான் வே. லட்சுமணன் அவர்களைத் தவறாமல் அழையுங்கள் என்று மட்டும் கேட்டுக் கொண்டேன்.

'கூட்டம் கூட்டக் கூடாது. பாராட்டு, பூமாலை, பரிசு என்றெல்லாம் கூடாது. இதற்கு ஒப்புக் கொண்டால் வருவேன்' என்று நிபந்தனையைத் தெரிவித்தேன்.

மாலை 6.30 மணிக்கு, என் மனைவியுடன் நான் தியாகராயநகரில் உள்ள 'கீதாஞ்சலி'க்குச் சென்றேன். அதற்கு முன்பே மாடி மண்டபத்தில் இருபதுக்கும் மேற்பட்ட எழுத்தாள அன்பர்கள் கூடியிருந்தனர். அதிர்ச்சி... வியப்பு! ஒரே நாளில் எப்படி அழைத்தார்கள்? இயன்றவரையில் தொலைபேசிமூலம் அழைத்ததாக அறிந்தேன்.

வித்வான் வே. லட்சுமணன் உரிய நேரத்திற்கே வந்துவிட்டார். அவருக்கு ரோஜா வண்ணச் சால்வை அணிவித்து நானும் என் மனைவியும் அவர் பாதம் தொட்டு வணங்கி, "ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் என்னை 'அமுதசுரபி' அலுவலகத்திற்குள் காலடி வைக்கச் சொல்லி அன்புடன் ஏற்றுக் கொண்டவர்" என்று அவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவரை அறியாதார் யார்?

50 ஆண்டுகள் 'அமுதசுரபி'யில் தொண்டாற்றி வருவதால் ஆயிரக்கணக்கானவர்கள் அறிமுகம், தொடர்பு, நட்பு. 'ஒருபகல் பழகினார் உயிரைஈவரால் என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுப்பவர்கள் பலர் எனக்கு உற்ற நண்பர்கள். ஐம்பது ஆண்டுகளாக 'எழுத்து' என்ற பல்கலைக்கழகத்தில் பயில்கிறேன். இன்றும் பயில்கிறேன். நாளையும் பயில்வேன்.

(நான் எழுதிவரும் **"பொன்விழா ஆண்டில் அமுதசுரபியும் நானும்"** என்ற நூலிலிருந்து) ●



புதிய நிதி அமைச்சரும் பழைய பிரச்னைகளும்

எஸ். இராஜரத்தினம்

இந்த இதழ் வாசகர்களின் கையில் இருக்கும்போது புதிய அரசுக்குள்ள முயற்சிகள் நடந்து கொண்டிருக்கலாம். புதிய அமைச்சரவை எந்தக்கட்சி அல்லது கட்சிகள் அமைத்தாலும் நிதி அமைச்சராக யார் வருவார் என்பது பற்றி தொழில், வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் மட்டுமின்றி நமது பொருளாதாரத்தில் அக்கறை கொண்ட அனைவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் நிதி அமைச்சகம் நமது நாட்டின் பொருள் வளத்திற்குப் பொறுப்பாக இருப்பதுடன் அதன் செயல்பாடுகள் நமது மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடும்.

நிதி அமைச்சர் மன்மோகன் சிங் பல பொருளாதார சீர்த் திருத்தங்களை துணிந்து செய்தார். தாராளமயக் கொள்கை மிகுந்த அளவில் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ததுடன், விலைவாசி ஏற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்தி தொழில் முன்னேற்றத்திற்கு வழி செய்தது. பங்கு மார்க்கெட்டில் முதலீடுகள் நடுத்தர மக்களிடமிருந்து பெறப்பட்டு தொழில்கள் விரிவடைந்து வேலைவாய்ப்புகள் பெருகின. உலக அளவில் நம் நாட்டின் முன்னேற்றம் பெரிதாகப் பேசப்பட்டது. வெளிநாட்டு முதலீடுகள் ஓரளவே வந்தாலும் பெருமளவில் வந்து இந்த பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதற்குப்பின் வந்த நிதி அமைச்சர் சிதம்பரம் அவர்கள் முன்னிருந்த மந்திரிசபையில் அமைச்சராக முந்தைய நிதி மந்திரியுடன் இணைந்து பணியாற்றிய காரணத்தால் தாராளமயக் கொள்கை மேலும் தொடர்ந்தது. பல கட்சிகளின் கூட்டு அரசாக மைய அரசு செயல் பட்டாலும் இணைந்து செயல்பட்டு உலக அரங்கில் இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிய நம்பிக்கை தளராமல் தொடர்ந்தது.

ஆயினும் எதிர்பார்த்த அளவு வெளிநாட்டு முதலீடுகள் வரவில்லை. அதற்கு ஒரு முக்கிய காரணம் பங்கு மார்க்கெட்டில் பெரிய அளவில் விலைச்சரிவு ஏற்பட்டது. இதன் காரணத்தால் பங்குகளின் மீது நடுத்தர மக்கள் நம்பிக்கை இழந்தார்கள். இதன் விளைவாக மேலும் சரிவு ஏற்பட்டது. தொடங்கப்பட்ட புதிய தொழில்களுக்குத் தேவையான பணத்தை புதிய பங்குகள், கடன் பத்திரங்கள் வெளியீடுகளால் ஈட்ட முடியாத காரணத்தால் பல தொழில்கள் தொடக்க கால கட்டத்தைத் தாண்ட முடியாமல் முடங்கிப்போயின.

நிதி அமைச்சர் நேர்முக வரியை வெகுவாகக் குறைத்து ஒரு பொது மன்னிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதைச் சிறப்பான முறையில் வெற்றியடையச் செய்து புகழ் பெற்றார். நேர்முக வரிகள், கம்பெனிச் சட்டம், அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள் சட்டம் ஆகியவற்றை சீர்திருத்த, புதிய திருத்தங்கள், சட்டங்கள் மூலம் முயற்சிகள் மேற்கொண்டார். ஆயினும் அவை நிறைவேறுமுன் பாராளுமன்றமே கலைக்கப்பட நேரிட்டது.

நிதி அமைச்சகமும் ரிசர்வ் வங்கியும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், கட்டுப்பாடற்ற முறையில் இயக்கிய சில நிதி நிறுவனங்களின் மோசடிகளைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. இதில் முக்கியமானது, வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களின் மீது ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் தாம். கம்பெனிச் சட்டத்தில் கட்டுப்பாடுகளுக்குட்படாத நிதி நிறுவனங்களும் அசல் மோசடி செய்த ஓரிரு நிறுவனங்களையும் கட்டுப்படுத்த ஏற்பட்ட முயற்சியால், கட்டுப் பாட்டுடன் செயல்படும் நிதி நிறுவனங்களுக்கு இந்தப் புதிய கட்டுப்பாடுகளினால் பெரிய அளவில் தாக்கம் ஏற்பட்டது. தனியார் துறையில் இயங்கி வந்த நிதி நிறுவனங்கள் வைப்பு நிதிகள் பெறுவதில் ஏற்படுத்தப்பட்ட தடைகளினால் மத்திய தர மக்களின் சேமிப்புகளின் மூலம் திரட்டப்பட்டு சரக்கு லாரிகள் வாங்குதல், வீடுகள் கட்டுதல் ஆகிய பல சிறு - பெரும் - தொழில் முயற்சிகளுக்குக் கிடைத்து வந்த பணம் திடீரெனக் குறைந்தது. பொருளாதார வளர்ச்சியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. தொடங்கப்பட்ட தொழில்களைத் தொடர்ந்து செய்ய ஆரம்பிக்கப்பட முடியவில்லை. விற்கப்பட்ட பொருள்களுக்கு வர வேண்டிய பணம் வராததால் தொழில்களுக்குப் பெரிய பணமுடை ஏற்பட்டது. வங்கிகளில் பணமிருந்தும் அவற்றின் செயல்பாட்டினாலும் அவர்களுக்குரிய கட்டுப்பாடுகளினாலும் தொழில்களுக்கு வேண்டிய பணம் கிடைக்காததால் தொழில்கள் நசிந்து வருகின்றன.

தென்னாட்டில் சிறப்பாக சென்னையில் பரஸ்பர நல நிதிகள் கம்பெனிச் சட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இந்தச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு புதிதாகத் தொடங்கப் பட்ட பல நிறுவனங்களுக்கு மட்டுமின்றி, தொன்று தொட்டு

இயங்கி வரும் இத்தகைய நிதி நிறுவனங்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. விளைவாக மத்திய தர மக்களான சிறு வியாபாரிகளும் வீடுகட்ட வாங்கப் பயன்படுத்தக் கூடிய கடன்கள் போன்றவற்றை வேண்டிய அளவில் பெற முடியாமல் பணமுடைக்குள்ளாகி, செயலிழந்து நிற்கின்றன. தக்க சமயத்தில் இந்தக் கட்டுப்பாடுகளை நீக்காவிட்டால் இவையும் பொருளாதாரத்தில் ஏற்றுவந்த பங்குச் செய்ய முடியாமல் போவதுடன் ஒரு சிறந்த சேமிப்பு முறையும் மறையும்.

இதே திசையில் நமது பொருளாதாரம் செயல்படுமானால் நாம் வெகுவிரைவில் வீழ்ச்சி அடைவோம் என்ற பயம் நம்மிடம் பலிருக்கும் ஏற்பட்டுவிட்டது. நிதியமைச்சர் சிதம்பரம் ஓரளவு இந்த பணத்தட்டுப்பாட்டிற்கு தமது அதி தீவிரக் கட்டுப்பாட்டின் காரணமாக இருந்தாலும் புதிய யுக்திகளை தைரியமாகக் கையாண்டு இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பொருளாதார விழிப்பிற்கு வழி கோலுவார் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்குமுன் மந்திரிசபை கவிழ்ந்தது.

புதிய மந்திரி சபைக்கு பல பிரச்னைகள் உண்டு. சம்பளக் கமிஷன் சிபாரிசுகளை நிறைவேற்றியதால் ஏற்படப்போகும் பற்றாக்குறை, உற்பத்திக் குறைவினால் ஏற்படப்போகும் வரிகள் வரவுக் குறைவு, தேர்தல் முதலியவற்றால் பெருகும் செலவினங்கள், பங்கு மார்க்கெட் வீழ்ச்சி, பணத் தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம், அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தில் சரிவு ஆகிய பிரச்னைகள் புதிய அமைச்சருக்கு - அவர் யாராயிருப்பினும் - உள்ள பிரச்னைகள் ஆகும். அறிவுபூர்வமான முறைகளினால் செயல் திட்டங்களை வகுத்து உறுதியான முறையில் செயல்பட்டால் இந்தப் பிரச்னைகளை எதிர்கொள்ள முடியும். உழைப்பு, சேமிப்பு, உற்பத்தித்திறன் அனைத்தும் ஒருங்கே அமையப்பட்டுள்ள இந்திய மக்கள் எதிர்கொள்ளப் புதிய பொருளாதாரக் கொள்கை அடித்தளமாக அமைய வேண்டும். அவ்வாறே அமையும் என்று எதிர்பார்ப்போம். ●

பட்டாம்பூச்சி

சந்தக் கவிமாமணி தமிழழகன்



கத்திரித்த வண்ணம்
காகிதப் பூங் கிண்ணம்
சித்திரிக்க மேலே
சிதற விட்டாற் போலே
செடியில் பட்டாம் பூச்சி - மறு
நொடியில் தொட்டாற் போச்சு.

தூக்கத் தினால் தோன்றும்
துள்ளி நெஞ்சுள் ஊன்றும்
ஏக்கத்தினால் மேலே
எழும்பும் கனாப் போலே
இருக்கும் பட்டாம் பூச்சி - கணம்
பறக்கும் பொட்டாய்ப் போச்சு.

தேய்ந்த பிறை வடுக்கள்
தெறித்த முன்னாள் உடுக்கள்
மேய்ந்தெழவான் மேலே
மிதந்தெழுமாம் போலே
மிளிரும் பட்டாம் பூச்சி - பனிக்
குளிரில் நெட்டாய்ப் போச்சு

பொரி பொரியாய்த் தூவல்
பொடி பொடியாய்ச் சிவல்
வரி வரியாய் மேலே
வலை விரித்தாற் போலே
வசந்தப் பட்டாம் பூச்சி - அட கொஞ்சம்
அசந்து விட்டேன் போச்சு

சென்ற வாரம் நானும், நண்பர் மணியமும் அக்கரைப்பட்டி கிராமத்துக்குப் போயிருந்தோம் கிராமம் என்று தொண்ணூறு



வருஷங்களுக்கு முன்பு கொடுக்கப் பட்ட பெயர். இன்றைக்கோ மின்சார விளக்கென்ன, கப்பிரோடு என்ன, குப்பைத் தொட்டி என்ன என்று இரண்டாம் நம்பர் பட்டணமாகவே அது விளங்கியது.

எங்கள் பொழுதை மணிமுத்தாறு நதிக்கரையின் மணல் போக்கியது. பரந்து கிடக்கும் மணல் வெளியில் பாம்பு நெளிவதுபோல் நெளிந்து, சலசல வென்று தரை மணல் தெரியும்படி ஓடும் ஆற்று நீரை அனுபவித்துக்கொண்டு பொழுதைப் போக்கினோம். அக்கரைப்பட்டியின் அதிகாரிகள், பண்ணைக்காரர்கள், ஊரே நடு நடுங்கும் வஸ்தாதுகள் இவர்களைப் பற்றிய பேச்செல்லாம் அதிகமாய் அடிபட்டது. இச் செய்திகளால் என் முகம் ஆச்சரியத்தால் மலர மலர சுவாரஸ்யமான கதைகளைக் கூறிக் கொண்டே சென்றார் நண்பர்.

"அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்டாயே, பைத்தியம்போல் இருக்கிறதென்றாயல்லவா?" என்று கேட்டார் மணியம்

"ஆமாம்..." என்று சொல்லி வைத்தேன். உண்மையில் அந்த இரண்டு நாள்களில் அவரை எவ்வளவோ கேட்டு விட்டேன். எல்லாவற்றையுமா நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறது?

"பொற்கொடி மூன்று வருஷத் துக்கு முன்பு இப்படி இருந்தாள் என்றா நினைக்கிறாய்? உடல் துரும்பாய்ப் போய், தலை சிடுக்குடன், குழி வீழ்ந்த கண்ணுடன், பெயருக்குப் பொருத்தமில்லாமல் இன்று தோற்றமளிக்கிறாளே என்று நினைக்காதே. அவளுடைய அழகுக்கும், துணிச்சலுக்கும் அந்த வட்டாரங்களிலேயே இணை கிடையாது. அம்பலவாண சேர்வைக்கு அவள் ஒரே பெண். அம்பலவாண சேர்வை என்றால், அந்தப் பக்கத்திலே மதிப்பு அலாதி. குறிப்பிடும்படியான சம்பவம் ஒன்றும் சிறப்பாக அவர்கள் வாழ்க்கையில் நடந்து விடவில்லை. ஆனால் பொற்கொடியின் உள்ளத்தில் ஓடிய வீர ரத்தத்தையும், துணிச்சலையும் எண்ணிப் பார்க்கும்போது, அவளது அழிக்க முடியாத காதலை நினைக்கும் பொழுது, ரோமியோ-ஜூலியட்டும்,

லைலா-மஜ்னுவும், எந்த மூலைக்கு?"

நான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன், சுவாரஸ்யமாக ஏதோ கிடைக்கப்போகிறது என்ற தைரியத்தால்.

"அம்பலவாணம் தாயிழந்த தன் மகளைச் செல்லமாக வளர்த்து வருவதற்குக் கேட்கவா வேண்டும்? வீட்டில் அவள் தான் சட்டமிடுவது; திட்டம் செய்வது. அவள் கீறிய கோட்டைத் தாண்டுபவரே இருக்க முடியாது. துணிச்சலான தன் பெண்ணை நினைக்கும் போ தெல்லாம், "இவ்வளவு புத்திசாலித் தனமும், தைரியமும் இருக்கும் இவளுக்கு நல்ல புருசனாகக் கட்டிக்கொடுக்கும் பொறுப்பை நான் சரிவர நிறைவேற்றுவேனா?" என்று அம்பலவாண சேர்வை எண்ணியெண்ணி ஏங்குவார். ஒப்புக்குக் 'கணவன்' என்று யாரையாவது கட்டிவிட அவர் மனது விரும்பவில்லை. தன் செல்வத்தை ஆளக் கூடியவனாகவும், குணவானாகவும் இருக்க வேண்டும் என்பது தான் அவர் ஆசை. அத்துடன் அவரைப்போல் துடுக்குத் தனமும், தைரியமும் நிறைந்த தனக்குப் பிறகு அந்த வட்டாரத்தில் பெயரெடுக்க வேண்டும் என்பது அவரது இதய ஆசை. இவ்வளவுக்கும் தகுந்த வரன் ஒன்றை அவரது கண்கள் எங்கெல்லாமோ வலை வீசிப்பார்த்துக் கொண்டிருந்தன. 'களுக்' கென்று சிரிக்கும் பொற்கொடியின் சிரிப்பொலி ஆற்றங்கரை முழுவதும் பறந்து, தண்ணீர் மொள்ளும் மற்றப் பெண்களின் குலுங்கும் வளை யொலியுடன் எதிரொலிக்கும். கட்டுக்கடங்காத பார்வையும், துடுக்கும் அந்த ஊர் ஆண் பிள்ளைகளை அண்ட விடாமல் செய்தன. விளக்கு வெளிச்சத்தைக் காணக் காண விட்டிலுக்கு நெருங்க ஆசையாகத்தானிருக்கிறது. நெருங்கினால்.....

பெண்கள் தண்ணீர் எடுக்க வரும் போது அந்தத் துறையில் ஆண் பிள்ளைகள் இருக்கவே கூடாது. பெண்பிள்ளை ராஜ்யம் என்று ஒதுங்கித்தான் இருக்க வேண்டும். முத்து வேலுக்கு இது எப்படித் தெரியும்? அடுத்த ஊர்க் காரனானாலும் சிறுவயது முதல் பொற்கொடியைத் தெரியுமே தவிர, இந்த வழக்கம் அவனுக்குத் தெரியாது.

பக்கத்து மூங்கில் புதரிலிருந்து மூங்கில்களை வெட்டி வந்து அங்கேதான் சிம்பு, சிம்பாகச் சீவிக் கொண்டிருந்தான் வேலு.

பொற்கொடியும் அவள் தோழிகளும் அங்கு வரும்போது அவன் மும்முரமாக வேலை செய்வதைக் கண்டவுடனேயே, அவள் தைரியம் ஒரு கணம் எங்கோ பறந்துவிட்டது. வழக்கமாகச் செய்யும் கிண்டலொலி நெஞ்சுக் குழியைவிட்டு மேலுக்குவர ஒப்பவில்லை.

"இவரு ஊருக்குப் புதிசு போலிருக்கு!" என்றாள் ஒருத்தி.

"அவர் சீவுறதைப் பார்த்தாலே தெரியலே!" என்றாள் இதைத் தொடர்ந்து மற்றொருத்தி. 'களுக்' கென்ற சிரிப்பு அந்தப் பக்கங்களி லெல்லாம் பரவி எதிரொலித்தது. பொற்கொடி ஏனோ வாயைத் திறக்கவேயில்லை.

பொற்கொடியின் போக்கில் திடீரென மாறுதலை அம்பலவாணம் கவனித்தார். வழக்கமாய் ஆற்றங் கரைக்குப் போகும் நேரத்திற்கு இப்பொழுதெல்லாம் போகாமல், ஊரெல்லாம் நீர் எடுத்து வந்த பிறகு செல்வதையும், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதையும் குறிப்பாகக் கவனிக்கலானார். மகள் மனம் தந்தைக்கா தெரியாது? அதுவும் தாயாகவும் அவர் இருக்கையில்? பொற்கொடியின் போக்கில் மாறுதலை அவர் அறிந்து கொண்டார். மணிமுத்தாறு நதிக் கரையில் இளங்காதலர்கள் கூடிக் குலாவும் இக்காட்சியை மறைந்திருந்து கண்டார்.

"ஆ! பொற்கொடியா? பதினெழு வருஷமாகப் பச்சைக் குழந்தையென்று கண்ணிமை போல் நான் வளர்த்து வந்த பொற் கொடிக்கா இவ்வளவு துணிச்சல்?" என்று பல்லை நறநறவெனக் கடித்துக் கொண்டார், அதுவும் யாரோ பக்கத்து ஊர்க்காரனோடு தொடர்பு என்றால்............? அவருக்கு என்ன தெரியும், பொற்கொடியின் புனித உள்ளம் எவ்வளவு யோசனைக்கும், சிந்தனைக்கும் மேல் முத்துவேலை அணுகத் துணிந்தது என்று?

அவர், அந்த ஊரிலேயே உள்ள காளிமுத்துவுக்குத் தன் மகளைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணி யிருந்தார். காளிமுத்து துணிச்சலும், தைரியமும் பொருந்தியவன். ஆனாலும் அவன் போக்கும், குணமும் யாரையும் வெறுக்கும்படிச் செய்யும். அம்பலவாணரோ காளிமுத்துவை மருமகனாக்கிக் கைக்குள் போட்டுக் கொண்டு அந்தப் பிராந்தியத்தையே கலக்கி விடுவதென மனக் கோட்டை கட்டினார். காளிமுத்துவுக்கும் அம்பலவாணரின் உறவு இலேசில் கிடைப்பது ஆச்சரியமாக இருந்தது. பொற் கொடியெனும் பொக்கிஷத்தை அடையச் சுலபமான பாதையாக அதை மதித்தான் காளிமுத்து.

ஆனால் அம்பலவாணரின் மனோரதத்தைக் குலைக்க இந்த முத்துவேல் புகுந்தது அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது 'நம்மிடமே வாலாட்ட இந்த வட்டாரத்தில் ஒரு பயல் துணிந்து விட்டானா?'' என்ற கோபக்குரல் அவர் இதயத்திலிருந்து வெளியே குதிக்கத் தயாரானது.

பொற்கொடி - முத்துவேல் காதல் பயிர் வளரத் தொடங்கியது. காளிமுத்துவுக்கும், தனக்கும் போட்டியாக முத்துவேல் பொற்கொடியின் அன்பைக் கவர்ந்துவிட்டானே என்ற குரோத எண்ணம் கொழுந்துவிட்டு வளரத் தொடங்கிற்று.

இந்தச் சூழ்நிலையில் அந்த வருஷ அல்லாப் பண்டிகை வந்தது. அல்லாப் பண்டிகை ஆனால் இளம் ரத்தம் ஓடும் வாலிபர்கள் புலிவேஷம் போடுவதன் மூலமும், புலி வேஷத்தின் முன் சிலம்பம் சுழற்றுவது, 'பாணா' சுழற்றுவது போன்ற தீரச்செயல்களின் மூலமும் திறமையைக் காட்டிப் பொழுதைக் குதூகலமாகக் கழிப்பார்கள்.


அந்த வருஷம் ஊரில் இரண்டு கட்சிகள் எப்படியோ முளைத்து விட்டன. "அல்லாப் பண்டிகைக்கு'' ஒரு மாதம் முன்பிருந்தே முன் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

"இந்த வருஷம் நீங்கள் சிலம்பு விளையாடுகிறீர்களாமே" என்றாள் பொற்கொடி.. முத்துவேலனுக்கு ஆச்சர்யமாகப்போயிற்று. தான் அக்கரைப் பட்டியில் வந்து விளையாடப் போகும் விஷயம் இவளுக்கு அதற்குள் தெரிந்து விட்டதே என்று ஆச்சரியப்பட்டான்.

''ஆமாம் உங்க ஊரில் நம் கைவரிசையைக் காட்டாமல்...... மாமனார் மெச்ச வேண்டாமா? என்று கூறி, அவள் கன்னத்ை மெதுவாகத் தட்டினான். பிற அங்கே 'களுக்'கென்ற சப்த மட்டும்தான்.

அல்லாப் பண்டிகைக்கு முத நாள். இப்பொழுதெல்லா பொற்கொடி விஷயத்தில் மிக கடுமையாக நடந்து கொண்டா அம்பலவாணர். தந்தைக்கு மகளுக்கும் அவ்வப்போது சூடா விவாதம்-தர்க்கம். தனிக்காட் ராணியாகச் சுதந்தரமா வாழ்ந்தவளல்லவா?

வழக்கம்போல் தினந்தின பொற்கொடிக்காகக் காத்திருந் காணாமல் திரும்பிப்போகு முத்துவேலனுக்கு அன்



பொற்கொடியைக் காண ஆச்சரியம் தாங்கவில்லை.

மறுநாள் முத்துவேலன் விளையாடப் போகும் ஊர்வலத்தில் கலாட்டா செய்வது என்று தன் தந்தையும் காளிமுத்துவும் முடிவு செய்திருப்பதாகவும், முத்துவேலை வம்புக்கிழுத்து குற்றுயிர் கொலையுமிராய் ஆக்க வேண்டுமென்றும் பயங்கரத் திட்டம் போட்டிருப்பதாக, பொற்கொடி கூறும் போது அவள் கண்களில் நீர் ததும்பியது. 'அழாதே' என்று முத்துவேலன் அவளைத் தேற்றியதோடு அப்பொழுதே காளிமுத்து வகையறாவைத் தீர்த்து விடலாமா என்றும் அவன் துடித்தான்.

அன்று இரவு நெடுநேரம் பொற்கொடிக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். அந்த இருளின் மங்கிய ஒளியில், கூடத்தில் தன் தந்தை ஏதோ செய்து கொண்டிருப்பது அவள் கண்ணில் பட்டது. மங்கிய அச்சிறு வெளிச்சத்திலும் அவன் கையிலியிருந்த கத்தி பளபளவென மின்னியது. அருகே இருந்த புட்டியினின்று எதையோ எடுத்து அந்தப் பளபளப்பின்மீது தடவிக் கொண்டிருந்தார். பிறகு அந்தப் புட்டியை எடுத்து ஓட்டின் இடுக்குகளில் செருகிவிட்டுப் படுத்துவிட்டான். பொற்கொடிக்கு ஆவல் தாங்கவில்லை. 'அது என்ன, அது என்ன?' என்றறியத் துடித்தாள்.. காலையில் தந்தை வெளியே சென்றவுடன் அவர் முதல்நாள் ஒளித்து வைத்ததைத் தேடி எடுத்தாள். விஷம்...! 'ஆ' என்று தன்னை அறியாமல் கூவி விட்டாள். கத்தியில் அதைத் தடவுவானேன்? ஒரே குழப்பம் அவளுக்கு. அப்படியே அந்தப் புட்டியைத் தன்னிடையில் மறைத்துக் கொண்டு முத்துவேலனிடம் ஓடினாள்.

“எங்கே உங்கள் கத்தி எங்கே? கொடுங்கள் இப்படி'' என்று படபடப்புடன் கேட்டாள்.

முத்துவேலனுக்கு ஒன்றும் புரிய வில்லை. பேசாமல், இடையில் மறைத்து வைத்திருந்த பிச்சுவாவை எடுத்துக் கொடுத்தான். ஒருகணத்தில் புட்டியிலிருந்து ஏதோ எடுத்துக் தன் கையிலிருந்த பிச்சுவாவின்மீது தடவுவதைக் காண முத்துவேலனுக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒரு வகையாகப் பதற்றம் அடங்கி, முதல்நாள் இரவு நடந்த நிகழ்ச்சியைப்பற்றி முத்துவேலன் அறிந்த பிறகுதான் அவன் மனம் சமாதான மடைந்தது. தந்தை செய்யும் சதியை மகள் அம்பலப்படுத்தி அதைத் தகர்த்து விடுவாள் போலிருக்கிறதே என்று முத்து வியப்படைந்தான்.

டணுக் டணுக் என்று கொட்டும் தம்பட்டத்தின் ஓசையும், மற்றும் பல விசித்திர வாத்தியங்களின் சப்தங்களும் கேட்கத் தொடங்கிவிட்டன. இரண்டு கட்சியாளர்கள் புலிவேஷம் போட்டு மும்முரமாக ஊர்வலம் வருவது ஊர் ஜனங்களின் குஷியைக்

கிளப்பிவிட்டது. இரண்டு தரப்பிலும் ஏகக் கூட்டம். ஏகப் பரபரப்பு பந்தோபஸ்துக்காக உள்ளூர் போலீஸ் ஸ்டேஷன் முழுதும் வந்திருந்தது.

கடைத் தெருவில் இரண்டு கோஷ்டியும் சந்தித்துக் கடந்து செல்ல வேண்டும். ஏதாவது ஒரு கோஷ்டி ஒதுங்கியிருந்தால்தான் சமாதானமாகச் செல்லலாம். முத்துவேலன் தன் திறமையை யெல்லாம் வெளிக்காட்ட வித்தைகளைக் காண்பித்துக் கொண்டிருந்தான். காளிமுத்து புலி வேஷம் பூண்டிருந்தான். அம்பலவாணம் தடபுடலாக ஊர்வலத்துக்கே முதன்மையாக நின்று கொண்டிருந்தார். அவரது ஆட்கள் சமயத்தை எதிர் நோக்கியிருந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து காளிமுத்து கோஷ்டியைக் கடந்து செல்லும் கட்டளை வந்தது. ஜனக்கூட் மெதுவாக நகர்ந்தது. எதி கட்சியை நெருங்க நெருங்க த தப்பட்டைகளின் ஒலி அதிகமாகின. பரபர அதிகமாகியது.

எங்கிருந்தோ சிறு கல் விழுந் எதிர்பார்த்த குழப்பத்‍ சுலபத்தில் அது உண்டுபண் விட்டது. குழப்பத்தில் ஐயோ எ வீறிட்ட குரல். சாய்ந்துவிடு காளிமுத்துவைத் தாங்கக் கூ தோன்றாமல் திகைத்தனர் ப



முத்துவேலன் மீது நிஜப்புலிபோல் பாய எத்தனிக்கையில் முத்து வேலனின் இடுப்பிலிருந்த கத்தி பாய்ந்தது விலாவில். முத்துவேலனின் இந்த ஒருகணச் செய்கையைக் கூறுவது சுலபமாக இருந்ததே தவிர, அந்த அமளியில் எல்லோரும் முத்துவேலனைக் குறிவைத்துத் தாக்கியதில் அவனது இயற்கை ஆத்திரம் தூண்ட அவன் காளிமுத்துவின் விலாவைத் தேடியதில் ஆச்சரியமில்லை.

'பிடி விடாதே' என்ற கூக்குரல் தான் எங்கும்கேட்டது. ரிஸர்வ் போலீஸ் இரண்டு மணி நேரத்தில் வந்தது. சிவப்புக்கோடு, மஞ்சள்கோடு போடப்பட்ட உடலுடன் தரையில் கருஞ்சிவப்பு இரத்தம் தோய்ந்து கிடந்த காளிமுத்துவை வண்டியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அதற்கு முன்பே அவன் உயிர் போய் விட்டது. அம்பலவாணருக்கு ஒரே அதிர்ச்சி. காளிமுத்து செத்து விட்டான் என்ற செய்தியைச் கேட்டவுடன் பொற்கொடி கூடத் திடுக்கிட்டு விட்டாள். பரபரப்புடன் தன் தந்தை வந்து எதையோ, ஒன்றும் தெரியாதது போல் தேடிய போதுதான் அவளுக்குச் சொரேல் என்றது.

முத்துவேலனைத் தேடுகிறார்கள் என்ற செய்தி பொற்கொடியைத் திக்பிரமை கொள்ளச் செய்தது. கத்தி காளிமுத்துவின் விலாவில் அரைக்கால் அங்குலம் கூடப் போகாவிடினும், விஷ சம்பந்தம் கத்தியில் இருந்ததால் உடனே மாண்டான் என்று டாக்டர் கூறியதாக அவள் அறிந்ததும் ஒரு கணம் தலை சுழன்றது. முத்துவேல் அகப்பட்டுக் கொண்டால்..... "ஐயோ....வேண்டாம்! இந்தக் கோரம் வேண்டாமே! பழனியாண்டியே குன்னக்குடி சுப்ரமனியே சாமியே!'' என்று வேண்டி விம்மினாள் அவள்.

இரண்டு நாள்களுக்குள் முத்துவேல் கைது செய்யப்பட்டான். ஊரே உறுமியது. 'அந்தப் பயலை...' என்று ஏதோ சொல்ல வாயெடுத்த அம்பலவாணம், பொற்கொடியைத் திரும்பிப் பார்த்து நிறுத்திக் கொண்டார். அவருக்கு, தான் மறைத்து வைத்த இடத்தில் விஷப்புட்டி இல்லாதது திடுக்கிடும்படிச் செய்தது. சுற்றி வளைத்துத் தன்னை ஏதாவது இதில் சம்பந்தப் படும்படி ஏற்படுமோ என அஞ்சினார் அவர்.

'போலீஸ் கேஸ்' ஜோடனையாகி தேவக் கோட்டை கோர்ட்டில் வழக்கு விசாரணையில் பொற்கொடி கூடச் சாட்சியாகப் போகும்படி வந்தது. ஒத்திகையாக முதலில் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த விசாரணையில் பொற்கொடி ஒன்றுமே பதில் சொல்லவில்லை. வெறும் விம்மல் தான் பதிலாக நின்றது. சிறு குழந்தை கூச்சப்பட்டுப் பயப்படுகிறாள் என்று இன்ஸ்பெக்டர் அனுப்பிவிட்டார் 'ரிமான்'டில் உருகி இளைத்துப் போய் வாழ்நாளின் முடிவை எண்ணிக் கொண்டிருக்கும் முத்துவேலனை பொற்கொடி அசைப்பில் பார்த்ததிலிருந்து பொற்கொடி திக்பிரமை பிடித்தவளாகிவிட்டாள். விசாரணை நடந்து கொண்டே யிருந்தது. அன்று தீர்ப்புச் சொல்லும் நாள். தீர்ப்பு என்ன? ஆயுள் தண்டனையா? அல்லது மரண தண்டனையா?

அன்று கோர்ட்டுக்குப் பொற்கொடியும் வந்திருந்தாள். ஊரே குழுமி யிருந்தது. தீர்ப்புக் கூறப்போகும் நேரத்துக்கு முன்பு பொற்கொடி ஜட்ஜின் மேடையை நோக்கி ஓடினாள். ஒரு கணம் பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் திகைப்புற்று நின்றார்கள்.

"அவரை ஒன்றும் செய்யாதீர்கள். எல்லாவற்றிக்கும் நான்தான் காரணம். அவரது கத்தியில் விஷத்தைத் தடவிக் கொடுத்து நெஞ்சத்திலே நஞ்சை ஊட்டினேன். சாதாரணமான கத்திக் குத்தாக இருந்தால் காளிமுத்து இறந்திருக்கவே மாட்டான். விஷம் பாய்ந்தது. முத்து வேலனுக்கு இந்த விஷயத்தில் நான் உடந்தையாக இருந்தேன். என்னைத் தண்டியுங்கள்'' எனக் கூவினாள் பொற்கொடி வீராவேசத்துடன்.

சிறிது நேரம் அமைதியுடன் இருந்த கோர்ட்டில் மீண்டும் பெரும் கலகலப்பு ஏற்பட்டது. அதிக நேரம் பொற்கொடியைச் சேவகர்கள் அங்கு நிற்க விடவில்லை. அவள் சொன்னதை ஜட்ஜ் கவனித்ததாகவும் தெரிய வில்லை. 'மேட்' என்று அவர் உதடுகள் முணு முணுத்துக் கொண்டன.

தீர்ப்பு வாசிக்கப்பட்டது. 'காளி முத்துவின் உயிர் போகும்படிக் குரூரமாகத் தாக்கி, அவனைக் கொல்ல முன்கூட்டியே திட்ட மிட்டு விஷம் தயார் செய்து, சதி செய்ததற்காக முத்துவேலனுக்கு மரண தண்டனை' என்றது தீர்ப்பு...

ஒரே காலத்தில் இரு குரல்கள் 'ஹா' என்றெழுந்தன. இரண்டு பேர் தடாலென்று விழுந்தனர். பொற்கொடி நடைப்பிணமானாள். அழகு அழிந்தது; தந்தையின் கண்ணெதிரே அவள் பைத்திய மானாள்."

நண்பர் கதையை முடித்தார். எனக்கு அதற்கு மேலே கேட்கவும் பிடிக்கவில்லை. 'காதல் கண்ணை மறைக்கும். அறிவையும் மறைத்து

விட்டது!' என்று எண்ணினேன். என்னையறியாமலேயே என் கண்கள் கலங்கி யிருந்தன. விஷக் கத்தியும் பொற்கொடியின் பொன் முகமும் மாறிமாறி வந்து கலக்கின. "சிறுகதைக்காக ஏதாவது திருப்பத்தை ஏற்படுத்திக் கதையை முடித்திருக்கக் கூடாதா"என நான் கேட்டேன் "சிறுகதையா? ந கதை .அயயா! அதில் மாற்றல என்று முடித்தார் நண்பர்.



கடந்த 9 ஆண்டுகளாகத் தொடர்ந்து மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவை, சென்னை நகரில் ஸ்ரீராம் நிறுவனங்கள் சிறப்பாக நடத்தி வருகின்றனர். 10 ஆவது ஆண்டாக 7.2.98 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சென்னை, டி.டி.கே. சாலையிலுள்ள நாரதகான சபை அரங்கத்தில் பாரதியின் 116ஆவது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக நடத்தினர்.

பாரதி விழாவின் முக்கியப் பகுதி மாணவர்களுக்குப் பல நகரங்களில் பேச்சுப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்குவதாகும். பேச்சுப் போட்டிகளின் முக்கிய நோக்கமே வளரும் இளைய தலை முறையினருக்கு இலக்கியத்தில் ஆர்வமும், பயிற்சியும் ஏற்பட வேண்டும் என்பதாகும். அந்த வகையில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, காரைக்குடி ஆகிய நகரங்களில் பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்குப் பேச்சுப் போட்டிகள் கடந்த 31.1.98 மற்றும் 1.2.98 ஆகிய நாள்களில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் 5 நகரங்களிலும் மொத்தம் 6000 மாணவ-மாணவியர் கலந்து கொண்டு தங்கள் பேச்சாற்றலை வெளிப்படுத்தினர்.

வகுப்பு 6 முதல் 8 வரை, வகுப்பு 9 முதல் 12 வரை, கல்லூரிப் பட்டப் படிப்பினருக்கு என்ற முப்பிரிவு களிலும் ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன. முதற் பரிசு ரூ.4000/-,- 2ஆம் பரிசு ரூ.3000/-, 3ஆம் பரிசு ரூ.2000/- மற்றும் முதற் பரிசு பெற்ற மாணவ-மாணவியர் பயிலும் கல்லூரிக்குக் கேடயங்கள் வழங்கப்பட்டன. இவற்றின் மொத்தப் பரிசுத் தொகை ரூ.30,000க்கும் மேலாகும்.அத்துடன் இறுதிச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்னை வந்து செல்ல ரூ.400/- போக்குவரத்து, தங்குமிடம், உணவுச் செலவுகளுக்காக அளிக்கப் பட்டது.

மேலும் பாரதி இலக்கியத்தைப் பரப்பும் வகையில் அரும் பணியாற்றும் அறிஞர் பெரு மக்களைப் பாராட்டி, பொற்கிழி அளித்துச் சிறப்பிப்பதும் இவ் விழாவின் நோக்கமாகும். அதன்படி இவ்வாண்டு விழாவில் பாரதி புகழ் பரப்பும் கவிமாமணி நா.சீ. வரதராஜன், அறிஞர் பெ.சு. மணி, பாரதி பணிச்செல்வர் மல்லிகார்ஜுனன் ஆகிய அ பெருமக்களுக்குப் பாரா பொற்கிழியும் அளித்துச் சிறப்ப பட்டது. ஒவ்வொருவருக்கும் ரூ - ரொக்கம் அளித்துப் பாராட்டி அளித்து பொன்னாடை அணிவ பட்டது.

இப்பெருவிழாவிற்கு உ மன்ற முன்னாள் நீதிபதி மாண் எஸ். மோகன் அவர்கள் தலை வகித்தார். பேச்சுப் போட்டி வெற்றி பெற்ற மா மாணவிகளுக்கு மராட்டிய முன்னாள் ஆளுநர் மேதகு சுப்பிரமணியம் அவர்கள் பரிச பரிசு பெற்ற மாணவர்கள் ப பள்ளி / கல்லூரிகளுக்கு வெ கேடயமும் வழங்கிச் சிறப்பி தஞ்சை தமிழ்ப் பல்கலைக் முன்னாள் துணை வேந்தர் ட ஒளவை நடராசன் அவ சிறப்புரையாற்றினார். முன் கலைமாமணி விக்கிரமன் வரையும் வரவேற்றார்.

விழா நிறைவாக பேராசிரிய நமசிவாயம் அவர்கள் தலைமை வழக்காடு மன்றம் இடம் பெ இதில் திரு. இரெ. சண்முகவடி மற்றும் வழக்கறிஞர் கே. ஆகியோர் பங்கேற்றனர்.

விழாவில் கலந்து கொ வர்களை ஸ்ரீராம் நிறுவன துணைத்தலைவர் ஏ.வி.எஸ். கௌரவித்தார்.

ஸ்ரீராம் நிறுவனங்க முதன்மை நிர்வாகி ஜி. சுந்த விழா நிகழ்ச்சிகளை ஏற் செய்திருந்தார்.

"வாழும் தமிழுக்கு நாளும் பணி செய்வோர்."

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவை ...ண்டார். இங்கு அமரர் சிறப்புக் ...ண்டார்" மகாகவி பாரதியின் ...ருவாக்கு. ஆம், அறிஞர் கி. வேங்கட ...ப்பிரமணியம், இளமைக் காலத்தி ...லயே அமுதச் சுவை கண்டவர். ...தனால் வாழ்வு முற்றும் பெருஞ் ...றப்புக் கொண்டவர்.

மாணாக்கராகப் பயின்று கொண் ...ருந்த வேளையிலேயே, தமிழ் ...முதச் சுவையை இப் பெருமக ...ருக்கு ஊட்டி உண்பிக்கச் செய்த ...பருமக்கள், தமிழ் இமயங்களாகத் ...ழ்ந்த தமிழ் அறிஞர்களாயிற்றே..? ...ன்னே சுவைக்கவும், சுவைத்து ...ழவும், மகிழ்ந்து தமிழின்பால் ...ளம் ஒன்றவும் கேட்கவா ...ண்டும்? புலவர். இ.மு. சுப்பிர ...ணியபிள்ளை, டாக்டர் இலக்கு ...னார், பேராசிரியர் ஆ.முத்துசிவன், ...றிவாளர் அ. சீனிவாசராகவன், ...ராசான் சேதுரகுநாதன், பேரறிஞர் ...அருணாசலக் கவுண்டர் ஆகிய ...ருமக்களைப் படிக்கும் காலத்தே ...ல்விக்கும் தமிழாசிரியர்களாகப் ...திருந்தார கி.வே.சு.! எத்தகைய ...ய வாய்ப்பு! எத்துணை பெரும் ...ு!

...இளமையில் தமக்கு இனிய தமிழ் ...டி, இன்பத் தமிழுணர்வு ஊட்டி, ...கமான தமிழ்ப்பற்றை நாட்டிய ...ாசிரியர்களைப் பற்றி, டாக்டர் ...வேங்கடசுப்பிரமணியம் நன்றிப் ...க்குடன், கண் பனிக்கக் கூறும் ...ளை, வனப்பு மிக்கது, ...க்கத் தக்கது. "தமிழ்ப் போர்வாள் ...வர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை" ... கூறுகிறார். "தமிழ்ப் பீரங்கி - ...டர் இலக்குவனார்" எனச் ...கிறார். "தமிழ்ப் பூமாலை" பேராசிரியர் ஆ. முத்துசிவன்" என இயம்புகிறார். "தமிழ் அருவி அ. சீனி வாச ராகவன்" என்றும் "தமிழ்ப் பூச்செண்டு சேதுரகுநாதன்" என்றும் "தமிழ்ப் பஞ்சாமிர்தம் கு. அருணா சலக் கவுண்டர்" என்றும் தமிழ் இமயங்களின் குணப் பண்புகளைக் குறிப்பிட்டுக் காட்டும் கருத்துக் கணிப்புகள் சுவைத்து மகிழத் தக்கவை அல்லவா?

தமிழ்த்தாத்தா உ.வே.சா.வின் வழித் தோன்றல்களான இப் பெருமகனாரின் குடும்பத்தினர் ஆழ்ந்த தமிழ்ப் பற்றாளர்களாகத் திகழ்ந்துள்ளனர். டாக்டர் கி.வே.சு.வின் தந்தையார் வே. கிருஷ்ணசாமி ஐயர் ஆங்கிலேய அரசில் ஆவணக்களரித் தலைமை அதிகாரியாய்ப் பணி யாற்றியவராவார். தமிழ் மொழி யிடத்துக் கொண்ட ஈடுபாட்டால், 1929ஆம் ஆண்டிலேயே அப் பெருந்தகை, திருச்செந்தூர் முருகப் பெருமானுக்கு தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமெனக் குரல் கொடுத்துக் கோரிக்கை வைத் துள்ளார்! "தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனுக்குத் தமிழில் அர்ச்சனை கிடையாதா?" என அப்பெருமக்கள் அறுபது ஆண்டு களுக்கு முன்னர் குரல் கொடுத்தமை, நெஞ்சார்ந்து நினைக்கத் தக்கதன்றோ? பெருநிலக் கிழாராகப் 'புதுக்கோட்டை மிட்டாதாரர்' எனப் பெருமை பெற்றவர். அப் புதுக்கோட்டைப் பகுதியில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை உருவாக்கி, தமிழை முறையாகக் கற்க வாய்ப்பினை வழங்கியுள்ளார்.

ஆங்கில மொழி வழியாகப் பாடங்களைக் கற்கும் பழக்கம் இருந்த அந்தக் காலத்திலேயே கி.வே.சு.வின் தந்தையார், தமது புதல்வன் தாய்மொழியாகிய தமிழ் வழி, பாடங்களைக் கற்க வேண்டு மென எண்ணி, எண்ணியபடியே செயற்படுத்தினார். பள்ளிகளில் படித்தபோதும் கல்லூரிகளில் கற்றபோதும் ஆசிரியப் பெரு மக்களை, உய்விக்கும் தெய்வங் களாகவே நினைந்து போற்றும் உளப்பாங்கு கொண்டிருந்த வேங்கட சுப்ரமணியனார் குறிப்பாகத் தமிழைப் பயில்விக்கும் தமிழாசான்களிடம் தனி மதிப்பும், தனித் தொடர்பும் கொண்டிருந்தார். பள்ளி, கல்லூரி களில் தமிழாசிரியர்களைத் தனியாகக் கண்டு உரையாடி உவந்ததோடு, அப்பெருமக்களின் இல்லங்களுக்குச் சென்று, [illegible]ப் பணிகளை ஏற்று அன்பு செய்வதையும் ஒரு பழக்கமாகவே கொண்டிருந்தார் மாணவர் வேங்கடசுப்பிரமணியம். எனவே வேங்கடசுப்பிரமணியத்தைத் தமிழறிஞர்கள் 'மணி.. மணி' என மனம் இனிக்க அழைத்து மகிழ்ந்தனர். மாறாத தமிழுணர்வை உவந்து ஊட்டினர். (மாணவப் பருவத்தில் வேங்கடசுப்பிரமணியத்தை 'மணி' என அழைக்கும் பழக்கம் வீட்டிலும், வெளியிலும் இருந்து வந்தது.) "தமிழ் என் அறிவினில் உறைதல் கண்டீர்!" எனப் பாவேந்தர் பாரதிதாசன் பெருமிதத்துடன் கூறிக் களிப்பாரே, அத்தகைய தன்மையை இளமைக் காலத்திலேயே பெற்றுவக்கும் பேறு கி.வே.சு.வுக்கு வாய்த்தது. அறிவில் தமிழ் உறைந்தது, நிறைந்தது. தமிழ் நூல்களை வேட்கையோடு நாளும் விரும்பிப் பயிலும் ஆர்வம்

குனறக்குடி பெரிய பெருமாள்

வளர்ந்தது. குறிப்பாகத் திருக்குறளைத் திரும்பத் திரும்பப் படித்துப் பெருமிதம் கொண்டார் வேங்கட சுப்பிரமணியம். இனம், மொழி, நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து, மானுட மேன்மைக்கென்றே பெரு நாவலர் திருவள்ளுவர் வழங்கியுள்ள கருத்துகளின் நுட்பமும் திட்பமும் இப் பெருமகனாரை வியக்க வைத்தன. விரும்பி வேணவாக் கொண்டு திரும்பத் திரும்பப் படிக்க வைத்தன. 'அடடா! தமிழின் பெருமைக்குத் திருக்குறள் ஒன்று போதும்!' என உள்ளம்; நெகிழ்ந்திருக்கிறார். 'தமிழர்களின் புகழுக்குத் திருவள்ளுவர் ஒருவர் போதும்!' என எண்ணி மகிழ்ந்திருக்கிறார். 'திருக்குறளை அறியாதவன் தமிழன் அல்லன், திருவள்ளுவரை அறியாதவன் மனிதன் அல்லன்' எனத் தீவிர கருத்துக் கொண்டுள்ள அறிஞர் கி.வே.சு., 'தமது அயர்வறியா உழைப்பிற்கும், அகம் களிக்கும் உயர்வுக்கும் அருமருந்தான ஒரு திருநூல் திருக்குறளேயெனப் பெருமித உணர்வுடன் ஓங்கி உரைக்கிறார்.

பயிலும் காலம் நிறைவு பெற்றதும், பணியை ஏற்கும் நேரம் வந்தது. எம்.ஏ., பி.எல்., பட்டம் பெற்ற வேங்கட சுப்பிரமணியம் முதன் முதலாகத் திருநெல்வேலி மாவட்டக் கல்வி அதிகாரியாக 1952ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். கல்வி அதிகாரி கி.வே.சு.வின் முதல் சுற்றறிக்கை என்ன தெரியுமா? ''மாவட்டப் பள்ளிகளின் வகுப்பறைச் சுவர்களிலெல்லாம் திருக்குறள் எழுதப் பெறல் வேண்டும். மாணவர்களின் பார்வையில் படுமாறு அவை அமைய வேண்டும்!" என்பதே கல்வியாளர் வேங்கட சுப்பிரமணியத்தின் முதல் சுற்றறிக்கை! சில பள்ளிகளில் "புதிய கல்வி அதிகாரி தி.மு.க.வா?" என ஆசிரியர்கள் வினவிக் கொண்டதை, பள்ளி ஆய்வுக்காகச் சென்ற



கி.வே.சு.விடம் ஒரு தலைமை ஆசிரியர் மெல்லக் கிசுகிசுத்தார். "ஆம். நான் தி.மு.க.தான்!" என் உரக்க விடை பகர்ந்தார் இப் பெருமகனார். அது காங்கிரஸ் ஆட்சிக் காலம், எனவே தலைமை ஆசிரியர் வெருண்டு திகைத்துப் பிரமித்தார். உடன், "ஆமாம். நான் தி.மு.க.தான்! திருக்குறள் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன்தான்" என்று புன்னகை பூத்தார். வேங்கடசுப்பிரமணியத்தைப் பார்த்து, தலைமையாசிரியர் கைகூப்பிப் புன்னகை புரிந்தார். திருநெல்வேலி மாவட்டப் பள்ளிகளில் அப்போது பயின்ற மாணவர்களின் உள்ளத்துள் சுவர்களில் எழுதப் பெற்ற குறட்பாக்கள் நிலைபேறுடையனவாய்ப் பதிவாகி நின்றன! ஆய்வுக்குச் செல்லும் போதெல்லாம் மாணவர்கள் மனப்பாடமாகக் கூறும் குறள்களைக் கேட்டு இன்புறும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார் கல்வி அதிகாரி கி.வே.சு. இன்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சில பள்ளிகளில், சுவர்களில் திருக்குறள் எழுதி வைக்கும் பணி, பேணப் பெற்று வரும் பயன்தரு செயலாகத் தொடர்ந்து வருகிறது.

பிறகு, மதுரை மாவட்டத்திற்கு மாற்றலாகிச் சென்ற கல்வி அதிகாரி கி. வேங்கடசுப்பிரமணியம் ஆற்றிய அரும் பணிகள் போற்றத் தக்கவை. பொழுதெல்லாம் நினைந்து புகழத்

தக்கவை. அறிவைப் பெறுவ
பெருக்கிக் கொள்வதற்கும் நூ
ஊற்றுக் கண்கள் என உ
நம்பிக்கை கொண்ட டாக்டர்
பள்ளி ஆசிரியர் ஒவ்வொ
நூலகங்களில் உறுப்பி
வேண்டுமென வலியுறுத்தினா
அதிகாரியே நூலகங்க
அதிகாரியாகத் திகழ்ந்ததால், ப
கிராமங்களில் நூலகங்கள்
யத்துக் கட்டடங்களில் நூல
உருவாக்கம் பெற உதவி
வழங்கினார். மதுரை மாநகரில்
நூலகத்திற்கு இடமில்லா
இன்னலைப் போக்கி செடி
கொடிகளும் காடாக மண்டிக்
வைத்திய 'நாதய்யர் பூங்
நூலகத்தை இடம் பெறச்
புத்தகப் பூங்காவைப் பெ
அமைத்தார் கி.வே.சு.

"அறிவை ஓர் அற்புதக்
யாகப் பார்த்தவர் திருவள்
அதுவும் அற்றம் காக்கும் கருவி
சொன்னார். அழிவை நீ
கருவியைத் தமிழர் அனை
பெற வேண்டாமா?" என எப்
எங்கும் கேட்கும் பழக்கமு
கி.வே.சு., மதுரையில் மகளிருக்
தனிக் கல்லூரி இல்லா
அவலத்தை எண்ணிப் ப
பெருந்தகை பி.டி. இராஜன்
பெற்ற குழு ஒன்றை அ
பல்வேறு வகையில், வழியில்
திரட்டி, 'மதுரை மீனாட்சி க
உருவாக்கம் பெறு
உறுதுணையாகி, உரிய செய
முன்னின்று முடித்தது ந
உரியது; என்றும் பெண்மைக்
மிளிர நிற்பது,சங்கம் வைத்து
வளர்த்துச் சரித்திரம் படைத்த
மாநகரில் உருவாக்கம்
பல்கலைக் கழக அமைப்புக்
உறுப்பினராகப் பொறுப்பேற்
டாக்டர் கி.வே.சு., பல்கலைக்
தோற்றம் பெறப் பொருத்
நாகமலைப் பகுதியைத் தேர்வு

ய செயல் குறிப்பிடத் தக்கது.

மண்டலக் கல்வி அதிகாரியாக 60ஆம் ஆண்டு கோயம்புத் ருக்குச் சென்ற இப் பேரறிவாளர், ாவையில் ஆசிரியர் பயிற்சிக்குக் ங்கள் அமைத்தார். தமிழுக்கு லிடம் அளித்து, ஆசிரியர் ருக்கும், தலைமை ஆசிரியர் ருக்கும் பயிற்சி வழங்குமாறு ய்வித்தார். கொடையுள்ளம் ாண்ட கல்வியாளர்கள், அறி ட்டம் மிக்க செல்வர்கள் பெருமகனாரின் நன் முயற்சி நக்கெல்லாம் உதவுமாறு, உரிய ருகுமுறைகளைக் கையாண்டு, வெற்றி அளித்துவரும் செய்தி, லைமைச்சராக இருந்த பேரறிஞர் ண்ணாவின் கவனத்தை ஈர்த்தது. ன்னையில் நடைபெற்ற இரண்டாம் கத்தமிழ் மாநாட்டுத் தனி திகாரியாக டாக்டர் வேங்கட பிரமணியத்தைப் பொறுப்பேற்கச் ப்தார் முதல்வர் அண்ணா. டாக்டர் லஞர், டாக்டர் நாவலர் முதலிய ருமக்களுடன் இணைந்தும், யந்தும் ஆற்றிய மாநாட்டுப் ரிகளும், டாக்டர் சிலம்பொலி ல்லப்பனாருடன் ஆற்றிய ர்க்குழுப் பணிகளும் பின்னர் ிலில் நடந்த மூன்றாவது உலகத் ழ் மாநாட்டிற்குச் சென்ற ந்நாட்டுத் தமிழ்ச் சான்றோர் க் குழுவிற்குச் செயலராகச் லும் அரிய பொறுப்பை அறிஞர் வ.சு.வுக்கு அளித்தன. சான்றோர் க் குழுவின் தலைவராகச் றார் டாக்டர் கலைஞர். மாநிலக் ி இணை இயக்குநராகிப் பின்னர் க்குநராக ஐந்து ஆண்டுகளும், இயக்குநராக ஆறாண்டுகளும் றுப்பு வகித்த போது, வரலாற்றுச் பிற்குரிய பல்வேறு செயற் ங்களை உருவாக்கி நடை றப்படுத்திய டாக்டர் வேங்கட ரமணியம், தமிழ்த்துறைக்கும், ாசிரியர் களுக்கும் ஏற்றம் அளித்த அரிய செயல் என்றென்றும் நினைவில் கொள்ளத் தக்கது.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரவிந்தரின் பக்தராகவும், அன்னையின் சீடராகவும் திகழ்ந்த இப் பேரறிவாளர், பாண்டிச்சேரியில் புதிதாகத் தொடங்கிய மத்திய அரசின் பல்கலைக் கழகத்திற்கு முதல் துணைவேந்தராய் நியமிக்கப் பெற்றபோது, "ஆகா, பாவேந்தரின் ஊருக்குப் போகிறேன். பாரதி வாழ்ந்த பாசறைக்குச் செல்கிறேன்!" எனக் கூறி நெகிழ்ந்தார். மிக மிக மகிழ்ந்தார். 'பாரதி உயர் தமிழ்த்துறை' 'பாவேந்தர் பற்றிய ஆய்வுத்துறை' முதலான தமிழுக்கு ஊட்டமளிக்கும் பாண்டிச் சேரிப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு நாளும் பொழுதும் உற்சாகமாக உழைத்து உன்னதப் புகழ் ஈட்டினார் கி.வே.சு. தமிழ் மொழிக்குச் செழுமை சேர்த்த க.நா.சு, கி. ராஜநாராயணன் ஆகிய தமிழ்ச் செல்வர்களைப் பேராசிரியர்களாக நியமித்து, தமிழகத்தின் பாராட்டைப் பெற்றார்.

தமிழ்மொழியிலும், ஆங்கிலத் திலும் உரையாற்றலும், எழுத்தாற்ற லும் கொண்ட கி.வே.சு., 15 ஆங்கில நூல்களையும், 12 தமிழ் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். பன்னூறு மேடைகளில் தமிழ்நாடு, இந்தியா மட்டுமின்றி, உலகத்தின் பெரும்பான்மையான நாடுகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உரைப் பொழிவினைச் செவிமடுப்போர் சிந்தை குளிர ஆற்றியுள்ள கி.வே.சு., தமது உரையால் தமிழின் மாட்சிமையைத் தமிழர் களுக்கு உணர்த்தி வருவதைத் தலையாய கடப்பாட்டுப் பணியாகக் கொண்டவராவார். ஒரு முறை ரஷ்யா சென்றபோது, மருத்துவப் பல்கலைக் கழக வளாகத்தில், 'லெனின் கிராடு தமிழ்ச் சங்கம்' என்றோர் அமைப்பை உருவாக்கி, உரையாற்றி மகிழ்ந்தது குறிப்பிடத் தக்கது. இப்பேரறிவாளரின் ஆங்கில நூல்கள் சில, லண்டன் யார்க் பல்கலைக் கழகத்தில் பாடநூல்களாக வைக்கப் பெற்றுள்ளன. பல தமிழ்க் கட்டுரைகள் தமிழ்நாட்டுப் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன. 'தமிழால் முடியும்' 'தமிழை அரியாசனம் ஏற்றுவோம்' 'கல்விச் சிந்தனைகள்' ஆகிய இப் பெருமகனாரின் நூல்கள் மிகப் புகழார்ந்தவை! போற்றத் தக்கவை!

காஞ்சி மகாப் பெரியவர் அருளாசியுடன் 1929ஆம் ஆண்டு திருநெல்வேலியில் வே. கிருஷ்ண சாமி ஐயர் - மீனாட்சி அம்மாள் இல்லறப் பயனாய்ப் பிறந்த வேங்கடசுப்பிரமணியம், அம்பாசமுத்திரம் தொடக்கப் பள்ளியில் கல்வி பயிலத் தொடங்கி, கடையம், கோவில்பட்டி, சங்கரன்கோயில் - ஆகிய ஊர்களில் உயர்நிலைப் பள்ளிகளில் படித்து, திருநெல்வேலி ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருச்சி ஜெயிண்ட் ஜோசப் கல்லூரி ஆகியவற்றில் பயின்று பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றவர். சென்னை சட்டக் கல்லூரியில் மாநிலத்திலேயே முதன்மை பெற்று பி.எல். பட்டம் பெற்றார்.

கல்வியாளராகப் பணி வாழ்வைத் தொடங்கிய இப் பெருமகனார், வாழ்வு முற்றும் தமிழ் மொழி வளம் பெறவும், தமிழ் மக்கள் நலம் பெறவும் சிந்தனையால், செந்தமிழால், செயல் திறத்தால் ஆற்றி வந்துள்ள பணிகள் அளவிடற்கரியவை! "எத்தொழிலைச் செய்தாலும், ஏது அவத்தைப் பட்டாலும், முத்தர் மனம் இருக்கும் மோனத்தே!" எனப் பட்டினத்து சுவாமிகள் பாடியுள்ளாரே, அத்தகு நிலையில் வித்தகக் கல்வியாளர் அறிஞர் வேங்கடசுப்பிரமணியம், எப்பணியை ஏற்றாலும், எப் பொறுப்பை வகித்தாலும் சித்தத்தைச் செந்தமிழுணர்விலேயே திளைக்கச் செய்து, அக மகிழ்வுடன், அரிய பல சிறப்புகளுடன் வாழ்ந்து வருகிறார்!

சந்தேகம் ஒரு நோய்

-ஸ்ரீவேணுகோபாலன்-

அந்த நாளில் கர்நாடகத்திலிருந்து ஓர் இளைஞன் முதன் முறையாக சத்யசாயியைப் பார்ப்பதற்குப் புறப்பட்டான்.

புக்க பட்டணத்தை அடைந்து அங்கிருந்து ஒரு மாட்டு வண்டியைப் பிடித்துக் கொண்டார்கள். அந்த நாளில் அப்படித்தான் செய்ய வேண்டும்.

சித்ராவதி நதியைக் கடந்து போன போது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. ஆகவே நேராகப் படுக்கச் சென்று விட்டான். காலையில் சத்யசாயியைச் சந்தித்தான்.

பாபா அவரைப் பார்த்து லேசாகச் சிரித்தார்.

''நீ என் மீதுள்ள நம்பிக்கையில் வரவில்லை. என்னைச் சோதித்துப் பார்ப்பதற்கே வந்திருக்கிறாய்'' என்றார்.

வரும் வழியில் அவனுக்கு நடந்த பல சம்பவங்களையும் பாபா கூறினார்.

இளைஞன் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தான்

"பிறகு... நீ என்ன நினைக்கிறாய் தெரியுமா? நான் உன் மனசை அப்படியே சொல்கிறேன் என்று நினைக்கிறாய்" என்றார், பாபா.

"ஆமாம். என் மனசில் நடப்பதை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள்'' என்று இளைஞன் கூறினான்.

பாபா சிரித்தார்.

"என்னை ஒரு விதத்தில் நீ சோதித்து விட்டாய்" என்று கூறினார்.

ஆசிரமத்தில் அவன் சில நாள்கள் தங்கினான். அடுத்த நாள் காலையில் பாபாவைச் சில போட்டோக்கள் எடுத்தான்.

அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறான், அவரது அனுமதி இல்லாமல் சத்யசாயியைப் போட்டோ எடுத்தால் அது சரியாக வராது என்று. எனவே அவர் பூசை செய்யும் போது ஐந்து படங்கள் எடுத்தான்.

பின்னர் அவர் அவனைப் பார்த்து, புன்னகையோடு கூறினார்: "நீ ஐந்து படங்கள் எடுத்திருக்கிறாய். ஆனால் அவை உனக்குச் சரியாக வரா. நீ படம் எடுக்க வேண்டுமென்றால் நானே வருகிறேன். நானே உட்கார்ந்து கொள்கிறேன். படத்தை எடுத்துக் கொள்ளலாம்'' எ

கூறினார்.


பின்னர் அவரை உட்கார வை மூன்று படங்கள் எடுத் கொண்டான்.

பின்னர் அவற்றை டெவ செய்தான்.

ஆச்சரியமாக முதல் இ படங்களும் சூன்யம போயிருந்தன.

மற்ற மூன்று படங்களும் அழ வந்திருந்தன.

அப்பொழுதெல்லாம் சத்ய வெறும் காற்றிலிருந்தே பொ களை வரவழைத்தார்.



...க்கு என்ன வேண்டும்?''
...னைக் கேட்டார். தித்திப்புகளை
... சாதாரணமாக வரவழைத்தார்.

... நான் பாபாவுடன் சித்ராவதி
...ருச் சென்றிருந்தான். பலரும்
...ருந்தார்கள். அங்கே அவரைச்
... உட்கார்ந்து கொண்டார்கள்.
...னுக்கு உடல் நிலை சரியில்லை.
...பொழுது அவனுக்கு 'உருக்கி'
...ய் கொஞ்சம் இருந்தது.
...ற்காக சிகிச்சை நடந்து
...ண்டிருந்தது. அவனது சுவாசப்
...யில் டாக்டர்கள் காற்றைப்
...துவார்கள்.

...நாள்களில் அதெல்லாம்
...சைகள். இந்தக் குறிப்பிட்ட
...ச் சிகிச்சை ஒரு மாதத்திற்கு
...முறை நடக்க வேண்டும்.

...பார்த்திக்குப் போன போது
...கனவே சிகிச்சைக்கு இருபது
...கள் தாமதமாகி விட்டன.
...னால் கவலைப்பட்டுக்
...ண்டிருந்தான். சீக்கிரம் திரும்பிப்
...ய் அந்த சிகிச்சையை
...துக்கொள்ள வேண்டுமே என்று
...னத்தான். அதனால்
...றங்கரையில் உட்கார்ந்த போது
...கிருந்த குளிரைப் பார்த்துச்
... அச்சம் அடைந்தான்.

...ாவைச் சுற்றி இருபதடி
...களவில் எல்லாரும் உட்கார்ந்தி
...ார்கள். இளைஞன் பயப்படுவது
...வுக்குப் புரிந்தது. குறிப்பாக
... அப்பொழுது மழை வரும்
...றி இருந்தது.

...கள் சூழ்ந்து விட்டன. தூறவும்
...ங்கிற்று. அவர்களைச் சுற்றி
... படிவதைப் பார்த்தான்
...ஞன். ஆனால் ஒரு சின்னப்
...டுக்கூட அவர்கள் மீது
...வ இல்லை. அவர்கள் சிறிது
...னையாமல் இருந்தார்கள்.

...பொழுது பாபா அவனைப்
...துச் சிரித்துக் கொண்டு, "போய்

ஆற்றங்கரையிலிருந்து தண்ணீர் கொண்டு வா!" என்று கூறினார்.

இளைஞன் சித்ராவதிக்குச் சென்றான். தண்ணீரை ஒரு பாட்டிலில் எடுத்துக் கொண்டு வந்தான்.

திரும்பி வந்ததும் அவர், "எது வேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு அதைக் கீழே ஊற்று" என்று கூறினார்.

இளைஞன் அவரை அவ நம்பிக்கையுடன் பார்த்தான்.

''என் மீது உனக்கு இன்னும் நம்பிக்கை இல்லை அல்லவா? நீ அந்த நீரை ஒவ்வொருவருக்கும் விநியோகி" என்று கூறினார்.

அங்கு இருபது அல்லது இருபத்தைந்து பேர் இருந்தார்கள். அவன் எடுத்து வந்திருந்த தண்ணீரோ சின்ன பாட்டிலில் தான். அத்தனை பேருக்கும் போதுமா என்று தெரியவில்லை. எனினும் விநியோகிக்கத் தொடங்கினான். ஆச்சரியமாக அதில் தண்ணீர் இருந்து கொண்டே இருந்தது. விநியோகித்து முடித்த பிறகு கூட அதில் தண்ணீர் மிச்சமிருந்தது. தவிர, அந்த நீரை ருசித்தவர்கள் எல்லாரும் அந்த நீர் தித்திக்கிறது என்று கூறினார்கள்.

அவனுக்கும் அது நன்றாகவே தித்தித்தது.

அவன் சந்தேக புத்தி அவனை விடவில்லை.

ஆற்றுத் தண்ணீரையும் சோதித்துப் பார்த்தான்.

அது தண்ணீர் போலத்தான் இருந்தது.

ஆனால் பாட்டில் தண்ணீர் மட்டும் உண்மையில் சர்பத் போல அவ்வளவு தித்தித்தது.

பின்னர் எல்லாரும் கோயிலுக்குச் சென்றார்கள்.

பாபா அவனை நோக்கி, "நீ வருத்தமாக இருக்கிறாயா?" என்ற கேட்டார்.

"ஆமாம், சாமி" என்றான்

"ஓ! உனது சுவாசப் பை தானே உனக்கு வருத்தத்தைத் தருகிறது?" என்று கேட்டார் ''ஆமாம்'' என்றான்.

"சரி, நீ உனது டாக்டரிடம் செல், அவர் இஞ்செக்ஷன் கொடுத்தால் அதைப் போட்டுக்கொள். உனக்கு உடல்நிலை சரியாகிவிடும். நான் உன் அருகிலேயே இருப்பேன்'' என்று கூறினார்.

அவன் பின்னர் சென்னைக்குத் திரும்பினான். தாம்பரத்திற்குச் சென்றான்.

அன்று இரவு அவனுக்கு ஒரு சொப்பனம் வந்தது.

ஒரு டாக்டரிடம் சென்றான்.

''நீ இஞ்செக்ஷனுக்கு வெகு தாமதமாக வந்துவிட்டாய்" என்று கூறினார் டாக்டர்.

அவர் தான் மூன்று வருஷங்களாக அந்த இஞ்செக்ஷன் கொடுத்து வருகிறார்.

அதைக் கொடுப்பதில் அவர் மிகவும் திறமை வாய்ந்தவர். ஆனால் சொப்பனத்தில் அவர் அந்த இஞ்செக்ஷன் ஊசியை அவனது சுவாசப்பையின் ஊடே குத்திக் கொண்டு சென்றார். இதனால் அவனுக்கு ரத்தம் வெளி வந்தது.

சொப்பனத்திலேயே அவன் பாபா பற்றி நினைக்க, அவர் அவனருகில் கவனித்துக் [illegible]வதாகவும் நினைத்தான்.

டாக்டர் திடீரென்று திகைத்தார். எதற்குத் திகைக்கிறார் என்று தெரியவில்லை.

அவன் அவரை நோக்கி "ஒன்னும் பயப்பட வேண்டாம், எல்லாம் சரியாகி விடும்" என்று கூறினான்.

இதெல்லாம் நடந்தது சொப்பனத்தில்.

ஊருக்குத் திரும்பியதும் நண்பர்கள் சிலருடன் அவன் டாக்டரிடம் சென்றான்.

அவரிடம் தனது சொப்பனத்தில் நடந்ததைக் கூறவில்லை.

டாக்டர் அவனுக்கு இஞ்செக்ஷன் கொடுத்தார். சொப்பனத்தில் நடந்தது போலவே ஆச்சரியமாக அந்த இஞ்செக்ஷன் அவனது சுவாசப் பையைக் குத்தியது.

வாயிலிருந்து ரத்தத்தைக் கக்கினான்.

டாக்டருக்குக் கவலை வந்து விட்டது.

அவரைப் பார்த்து அவன் "ஒண்ணும் பயப்பட வேண்டாம்" என்று கூறினான்.

சத்யசாயி கொடுத்த விபூதியைப் பையிலிருந்து எடுத்து அதை விழுங்கினான். ரத்தம் நின்று விட்டது. பின்னர் வீட்டுக்குத் திரும்பினான். வீட்டில் இரண்டு பேர் காத்திருப்பது தெரிந்தது.

அவர்கள், சத்யசாயி அந்த ஊருக்கு வந்திருப்பதாகக் கூறினார்கள்.

உடனே பாபாவைப் பார்க்கச் சென்றான். அவர் அவனைப் பார்த்து, "உனது டாக்டர் உனக்கு இஞ்செக்ஷன் கொடுத்தாரா?" என்று கேட்டார்.

அவன் உடனே, ''கொடுத்த ஆனால் அவரால் சரிய இஞ்செக்ஷன் செய்ய முடியவில் எனது சுவாசப் பையைக் கு விட்டார்'' என்றான்.

அதனால் டாக்டர் பய போனதையும் கூறினான். பாபா விபூதியை வாயில் போட் கொண்டதையும் கூறினான்.

அப்போது பாபா கூறினார். இஞ்செக்ஷன் பற்றிக் கவலைப் வேண்டாம். நீ குணமாகி விட்டா என்றார்.

தனக்கிருந்த உருக்கி நே மறைந்து விட்டதை அவ உணர்ந்தான்.

பாபாவின் பொன்மொழிகள்

நீங்கள் ஏதோ எதேச்சையாய் என்னிடம் வரவில்லை.

உங்களுக்கு அழைப்பு வந்தது.

வந்து விட்டீர்கள்.

அதனால், வாழ்க்கையின் நிச்சய இலக்கை அடைவதற்குப் பாடுபடுங்கள்; அயராது பாடுபடுங்கள்.

நிச்சயம் உங்களுக்கு வெற்றி உண்டு. அதனால் தான் உங்களுக்கு என் அழைப்பு வந்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்

கடவுள் ஒரு சூரியன்.

அவரது கருனணக் கிரணங்கள் உங்கள் இதயங்களில் விழுகின்றன.

உங்களது 'அகங்காரம்' என்னும் மேகங்களையும் பொருட்படுத்தாது உங்கள் இதய கமலத்தில் விழுகிறது. அந்தக் கமலம் அப்போது இதழ்களைத் திறந்து மலர்கிறது.

ஒன்று நினைவில் வையுங்கள்- எந்த மொட்டுகள் தயாராக இருக்கின்றனவோ, அவை மட்டும் மலர்கின்றன. மற்றவை பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

நான் எல்லாருக்குமே ஒரு வேலைக்காரன். என்னை நீங்கள் எந்தப் பெயரில் அழைத்தாலும் நான் உடனே வருவேன்

எல்லாப் பெயர்களுமே என்னுடையவைதான்.

சொல்லப் போனால், எனக்கு எந்தக் குறிப்பிட பெயரும் கிடையாது.

ஒருவருக்குக் கிருஷ்ணா பிடிக்கும்.

இன்னொருவருக்குச் சிவன் பிடிக்கும்.

இன்னொருவருக்கு உருவ மில்லாத கடவுள் பிடிக்கு

தங்களுக்குப் பிடித்த எந்த உருவத்தையும் விட விட்டு என்னை மட்டும் வணங்கு என்று நா கூறுவதே கிடையாது.

தர்மத்தை நிலை நிறுத்த நான் வந்திருக்கிறே அதனால் உனது தொழுகையை நான் ஏற்றுக் கொ வரவில்லை.

உனக்குப் பிடித்த கடவுளுக்கோ, நீ விரும் குருவுக்கோ நீ அதைச் செய்.

சுவரில் படத்தை மாட்டினால், ஆணியை நன்ற அசைத்துப் பார்த்து, 'அது அந்தப் படத்தின் கனத்ை தாங்குமா' என்று பரிசோதிக்கிறீர்கள்.


அது போலவே கடவுளின் படம் உங்கள் மனங்க விருந்து விழுந்து சின்னா பின்னம் ஆகிவிடக்கூடா என்பதற்காக, உங்கள் இதயங்கள் சற்று அசைத்து பார்க்கப்பட வேண்டும்

அதனால்தான் ஏமாற்றங்களும் கஷ்டங்களு உங்களுக்கு வருகின்றன.

அவைதான் உங்கள் இதயத்தைப் பலமாக்குகின்ற உங்கள் நம்பிக்கைகளுக்கு வலுவைக் கொடுக்கின்ற கடவுளின் சிறு சோதனைகள் அவை!

இருள் மாயும்; வெள்ளி எழும்!

தன்னலமெல்லாம் சத்தியம் தின்னும்
தழலாய் மின்னிச் சொலிக்கிறது!
சாத்தான் ஓதும் வேதமும் தெருவின்
சந்தியிலெல்லாம் ஒலிக்கிறது!
புன்னகைப் பூக்களுக் குள்ளே நஞ்சும்
புதைந்தொரு போதை குமைக்கிறது!
போலியை நம்பிப் பழகிய நிலையோ
பூக்களைத் தலைமேல் சுமக்கிறது!



இருட்டுக் காட்டில் வழி தெரியாமல்
இலக்கைத் தேடித் திரிவதையும்
இன்னும் இன்னும் நடந்தே கால்கள்
இற்றே தேகம் சரிவதையும்
விரட்டும் வெளிச்சம் வருமா என்னும்
வேதனை ஓலமும் நசுங்கியது!
வீணுரை யாளர் வீசும் சொற்களின்
வெடியின் தீயில் பொசுங்கியது!

குமைந்து மறுகும் நெஞ்சும் ஒருநாள்
கோபத் தாலே வெடித்து விடும்!
கொதிப்பில் விளையும் நெருப்புச் சுழலே
கொடுமை இருட்டை மடித்துவிடும்!
சுமந்து சலித்த கால்கள் விரைவில்
சுமையைக் கீழே தள்ளிவிடும்!
சுழலும் காலம் விடியும் நேரம்
சூழ் இருள் மாயும்; வெள்ளியெழும்!

- நா.சீ. வரதராஜன் -



'அமுதசுரபி' இதழின் ஆசிரியராக 50 ஆண்டுகள் பணியாற்றிய கலைமாமணி விக்கிரமன் அவர்களுக்கும், பத்திரிகை முகவராக தொடர்ந்து 50 ஆண்டுகள் பணியாற்றிய (முத்து நியூஸ் ஏஜென்ஸி - திருப்பூர்) எம். அங்கப்பன் அவர்களுக்கும் சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் லேனா தமிழ்வாணன், ராஜேஷ்குமார், 'சுபா'லா', ஓவியர் அரஸ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். ஜியே பப்ளிகேஷன்ஸ் ஜி. அசோகன் விழா நிகழ்ச்சிகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

ஜோதிர்லதா கிரிஜா

வாணியால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. சில கணங்கள் போல் அவளுக்கு வாயடைத்துப் போயிற்று. என்னென்னவோ எண்ணங்கள் வந்தன. அவளுள் சற்றே சினம் கூடப் பொங்கிற்று. 'ஒரு பெண்ணுடன் தனியாகப் பேசுவதற்குக் காதலைத் தவிர வேறென்ன விஷயம் இருக்க முடியும்? கடைசியில் இந்தக் குமாரும் இவ்வளவுதானா? வெறும் அசட்டுப்பயலா! என்னை விடவும் சில நாள்கள் வயதில் இளையவன். இவனுக்கு என்னிடம் என்ன அந்தரங்கப் பேச்சு இருக்க முடியும்? இதென்ன வம்பு? நான் இவனுடைய நட்பை இழக்கப் போகிறேனா?'

"என்ன வாணி பதிலையே காணோம்? நான் உங்கிட்ட பேசப்போற விஷயம் உனக்கு ரொம்ப ஆச்சரியமான விஷயமாயிருக்கும். சந்தோஷமான விஷயமும் கூட!"

"அப்படியெல்லாம் உன்னோட அந்தரங்கமா எதையும் நான் பேசத் தயாராக இல்லை," என்று குரலில் கடுமை காட்டிச் சொல்ல நினைத்த அவள் ஏனோ கடுமை காட்ட இயலாமல், "சரி, குமார்! நீ இங்க மிஸஸ் ஜார்ஜ் வீட்டிலயே என்னோட பேசலாம். தோட்டத்துக்குப் போய் நடந்துண்டோ உக்காந்துண்டோ பேசணும்னுட்டுக் கூட இல்லை. எப்ப வரே?"

"இப்பவே வரட்டுமா?"

"உனக்கு ஆபீஸ் இல்லையா இன்னைக்கு?"

"சனிக்கிழமையாச்சே! அரைநாள்தானே?"

"சரி வா."

"சரியா மூணு மணிக்கு அங்கே இருப்பேன், வச்சுடட்டுமா?"

"சரி."

"ஏன் ஒரு மாதிரி உற்சாகமே இல்லாம பதில் சொல்றே? நான் சொல்லப் போற விஷயத்தைக் கேட்டதும் அப்படியே சந்தோஷத்துல குதிக்கப் போறே பாரு! நீ மட்டுந்தானா? உங்க அம்மா அப்பா கூடத்தான்!"

"சரி, குமார். நேர்ல வந்து சொல்லு! நான் வச்சுடறேன்."

ஒலிவாங்கியைக் கிடத்திவிட்டு அவள் கிளம்பியபோது பின்னால் மேரி ஜார்ஜ் புன்சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தாள்.

"யாரு ஃபோனில் பேசியது?"

"குமார்!"

"ஓ!" என்ற மேரிஜார்ஜ் பொருள் பொதிந்த பார்வையை அவள் மீது படர்த்தினாள். அவள் கண்களும் சிரித்துக்கொண்டிருந்தன. அதன் அர்த்தம் புரிந்ததும், வாணிக்கு முகம் சிவந்தது.

"அவனுக்கு உன் மேல் காதல் வந்திருக்கும்!"

"இல்லை, இல்லை, மிஸஸ் ஜார்ஜ்! எனக்கு அப்படி ஓர் எண்ணம் அவன் மீது அறவே இல்லை. அவன் என்னைவிட வயதிலும் சிறியவன். அப்படியெல்லாம் அசட்டுத்தனமாக அவன் ஏதேனும் சொன்னால்..."

அவள் சொல்லத் தொடங்கியதை முடிக்குமுன் மிஸஸ் ஜார்ஜ் அவளைக் கையமர்த்தினாள். "அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதே, என் குழந்தாய்! உங்கள் வீட்டில் நிலவும் ஏழைமைக்கு இப்படி எவனேனும் உன்மீது காதல்கொண்டு உன்னை மணக்க முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்ளுதலே புத்திசாலித்தனம். அவன் வயதில் உன்னை விடவும் சிறியவனாக இருப்பதை நீ பொருட்படுத்தத் தேவை இல்லை. ஒருவரை யொருவர் ஆழமாக நேசிக்கும்போது வயது அந்தஸ்து போன்றவை அற்பமான விஷயங்கள்.

தனிமையில் இனிமை கண்டேன் 7

அமுதசுரபி – பார்க் டவுன் பெனிபிட் ...ண்ட் இணைந்து நடத்திய புதினப் போட்டியில் ரூ.10,000 பரிசு பெற்ற ...நாவல்

"இல்லை, மிஸஸ் ஜார்ஜ்! எங்கள் குடும்பங்களில் ...து எடுபடாது. வயதில் மிகவும் அதிகமானவனை ...ண்டுமானால் பெண்ணுக்கு மணமுடிப்பார்களே ...ல்லாது. தம்பி போன்றவனை ஒருபோதும் மணம் ...டிக்க மாட்டார்கள்."

"அதில் எந்தத் தவறும் இல்லை. நான் உன் ...ற்றோரிடம் அது பற்றிப் பேசுகிறேன்!"

"அய்யய்யோ! அப்படி ஓர் எண்ணம் எனக்கு ...ருந்தால்தானே நீங்கள் அவர்களுடன் அது ...ற்றிப் பேச? குமாரை நான் நல்ல நண்பன் ...திரிதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். ...வன் எனக்குத் தம்பி போல! இந்தப் பேச்சே ...னக்கு அருவருப்பாக இருக்கிறது."

"இது வரையில் நீ அப்படி நினைத்திருக்கலாம், ...ன் அன்பான பெண்ணே! ஆனால் அவன் ...ன்னைக் காதலிப்பதாகச் சொன்னால், அதன் ...ருகு உனது மன நிலை என்னவாகிறது, ஏதேனும் ...ற்றம் ஏற்படுகிறதா என்பதை அலசி ஆராய்ந்த ...றகே நீ ஒரு முடிவுக்கு வரவேண்டும். ...வசரப்பட்டு எதும் முடிவெடுத்து விடாதே. அவன் ...து பற்றிச் சொன்னால் யோசித்துச் ...சொல்லுகிறேன் என்று கூறி அவகாசம் கேள். ...தெல்லாம் உடனே பதில் சொல்லக்கூடிய ...ஷயமில்லை என்று கூறி, நேரம் கேள்!"

"இல்லை, இல்லை, மிஸஸ் ஜார்ஜ்! அப்படி ...ர் எண்ணமே எனக்கு அருவருப்பாக இருக்கும் ...போது யோசிப்பதற்கு நான் அவகாசம் கேட்பதில் ...என்ன அர்த்தமிருக்க முடியும்?"

"உன்னுடைய எண்ணம் நிச்சயமாக ...துதானா?"

"சர்வ நிச்சயமாக அதுதான். என்னால் அப்படி ...ர் உறவில் அவனை என் கனவில் கூடக் ...காண முடியாது. மிஸஸ் ஜார்ஜ்!"

"சரி. ஆனால் ஒருவேளை அவன் பேசியதைக் கேட்ட பிறகு உன் மனம் மாறினால் நீ வெட்கப்படாமல் என்னிடம் சொல்ல வேண்டும். அதன் பிறகு நான் உன் பெற்றோரிடம் பேசுவேன். அவர்களைச் சரிக்கட்டுவேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"அப்படி ஓர் அவசியமே ஏற்படாது, மிஸஸ் ஜார்ஜ்!"

"பார்க்கலாம்!" என்று சிரித்தாள் மேரி ஜார்ஜ்.

சொன்னபடி சரியாக மூன்று மணிக்குக் குமார் வந்தான். அவன் வந்தது தெரிந்ததுமே மேரி ஜார்ஜ் நாசூக்காய்த் தான் கடைக்குப் போய்விட்டு வருவதாய்க் கூறி, வெளியே போய்விட்டாள். வேலையாள் மைக்கேலையும் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

முகம் முழுக்கச் சிரிப்புடன் குமார் அவள் தட்டச்சு செய்யும் அறைக்குள் நுழைந்து அவள் சொல்லாமலே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். வாணிக்குச் சிறிது படபடப்பு ஏற்பட்டது.

"வா, குமார்! சொல்ல வேண்டியதைச் சட்னு சொல்லு."

"என்னவாயிருக்கும்னு நீ நினைக்கிறே, வாணி?"

"குமார்! சட்னு விஷயத்துக்கு வா. இந்தச் சுத்தி வளைச்சுப் பேசறதெல்லாம் வேண்டாம்!"

"சரி. எங்கண்ணா ரவிக்கு உன்னை ரொம்பப் புடிச்சிருக்காம். உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறான். உன்னைக் கேட்டுண்டு வந்து சொல்லுடான்னான். அதான் வந்திருக்கேன். விஷயத்தைச் சுருக்கமா உடனே சொல்லிட்டேன். நீ பதில் சொல்ல வேண்டியது தான் பாக்கி!"

பரபரப்பின் உச்சத்துக்கே வாணி சென்றாள். இப்படி ஒரு பிரச்னையை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ரவிச்சந்திரனை அவர்கள் வீட்டுக்குப் போன நேரங்களில் அவள் பார்த்திருந்தாள். தானுண்டு தன் வேலையுண்டு என்று தோன்றுபவன். பாட்டை ரொம்பவும் ரசிப்பவன். அது மட்டும் 'இன்னொரு பாட்டுப்

பாடுங்கோ!' என்று ஒரு முறை அவன் சொன்னபோது அவளுக்குத் தெரிந்தது. அவர்கள் வீட்டில் அவன் மகா ரசிகன் என்று சொல்லியிருந்தார்கள் தானெனினும் அவன் வாய்ப்படவே அதை அவள் தெரிந்துகொண்டாள். ஆனால் அதற்கு அவள் எந்த முக்கியத்துவமும் அளித்ததில்லை. அவள் ஒரு பாட்டுப்பாடினால் இன்னும் ஒரு பாட்டு என்று யாருமே கேட்காதிருந்தது கிடையாதே! அந்த அளவுக்குத்தான் அவள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாள்.

இப்போது குமார் சொன்னதைக் கேட்டதும் அவளுள் பெருவியப்புப் பெருகியது. குமாரைத் தவறாக நினைத்துத் தனக்குள் குழம்பியதற்காக மிகவும் வருந்தினாள். இனமறியா வேதனை அவளைப் பிடுங்கித்தின்றது. தான் நினைத்தது தெரியவந்தால் அவனுக்கு எவ்வளவு மனக்கஷ்டம் ஏற்படும் என்றெண்ணி வருந்தினாள்.

குமாரைப் போன்றே ரவிச்சந்திரனும் நல்ல தோற்றமுள்ளவன்தான். குமாரின் அளவுக்கு உயரமாக இல்லாவிட்டாலும் நல்ல அழக குமாரைப் போல் நல்ல சிவப்பில்லாவிட்டாலு மாநிறத்துக்கும் சற்று மேல்தான். அரசுப்பணிய இருந்தான். நல்ல ரசிகனாதலாலும், அவர்க குடும்பமே இசையில் விருப்பமுள் குடும்பமாதலாலும், இசைத்துறையில் அவ முன்னேற விரும்பினால் தடுக்க முற்படாதவனா ரவி இருப்பான். ரவிச்சந்திரனின் மீது அவளுக அதுவரையில் எந்தவிதமான ஈடுபாடு இல்லாவிட்டாலும், இப்போது அவன் தன்ன மணக்க விரும்புகிறான் என்கிற தகவல் குமா மூலம் தெரிய வந்ததும், அவன்பால் அவளு ஒரு பிடித்தம் ஏற்படத்தான் செய்தது. தன் ப அன்பு செலுத்தத் தயாராக இருக்கும் எ உயிர்மீதுதான் பெண்ணுக்கு நன்றியும் பதிலன் ஏற்படுவதில்லை? பக்கத்தில் எந்தக் கொ நின்றாலும் படர்கின்ற கொடிதானே பெண்! தாலு அப்படித்தான் அன்று இருந்தாளோ என்று வாண இப்போது நினைத்துப் பார்த்தாள்.

"என்ன வாணி பதிலையே காணோம் மவுனம் சம்மதத்துக்கு அடையாளம்

கும்பிட்டு நெட்டுயிர்ப்போம்!

மேகமெனக் கருணைமழை
மேதினியில் பெய்தெமது
மோகலோப காமக்ரோத
மூத்த பிணிகளெல்லாம்

மாற்ற அவதரித்த
மாமுனிவா! மறைபொருளே!
ஆற்றவொண்ணாத் துயரிலெமை
ஆழ்த்திவிட்டு ஏன் பிரிந்தாய்?

தேகம் களைந்துதறி
தெய்வமே தானாகி
ஏகப் பரம்பொருளாய்
எங்கும் நிறைந்துவிட்டாய்

என்பதனை உணர்ந்தாலும்
எளியவர்யாம், பாமரர்கள்,
மன்பதையில் பெரும்பாலோர்,
மனச்சுமையை இறக்கி வைக்க



கண்குளிரத் தரிசிக்க
காதாரக் குரல் கேட்க
புண்ணிய, நின் சந்நிதியைப்
புகல்புகுந்த அபலைகள்

சிறிதேனும் அமைதிகொள
சீர்மிகுந்த காஞ்சியில் நீ
அறிதுயிலில் கோயில் கொண்ட
அதிட்டானம் வலம் வந்து

கருணையெனும் அமுதீனும்
காமதேனு! அம்மையப்பா
குருநாதா! எனத்துதித்துக்
கும்பிட்டு நெட்டுயிர்ப்போ

• டி.வி. சுவாமிநாதன் •

வெச்சுக்கட்டுமா? வாணி சரின்னுட்டா அப்படின்னு ...வி கிட்ட சொல்லிடட்டுமா?''

முகத்துச் சிவப்பை மறைத்துக்கொள்ள ...டியாமல் அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்: 'இல்லை, குமார்! அவசரப்பட்டு எதுவும் ...ங்கண்ணா கிட்ட சொல்லிடாதே. இது சட்னு ...தில் சொல்லிடக் கூடிய விஷயமில்லை, குமார்! ...யாசிக்க வேண்டியது நிறைய இருக்கு.''

''இதிலே யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு, ...ாணி? பிடிச்சிருந்தா உடனே சரின்னு சொல்லிட ...வேண்டியதுதானே?''

''அப்படி இல்லை, குமார்! நீங்களோ ...ணக்காரா. நாங்க ஏழைகள். உங்கண்ணாவுக்கு ...ான் நீன்னு பெரிய பெரிய இடங்கள்லேருந்து ...பொண்ணு கொடுக்கப் போட்டி போட்டுண்டு ...றையப் பேரு வருவா. அதனால இந்தச்சம்பந்தம் ...ங்க அப்பா அம்மாவுக்குப் பிடிக்காம இருக்கலாம். 'இருக்கலாம்' என்ன? இருக்கும்! அதனால வீண் ...ிரச்னைகள் கிளம்பும். உங்க அப்பா அம்மாவுடைய ...ஆட்சேபணைகளையெல்லாம் எதிர்த்து என்னை ...னக்காக மட்டுமே கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு ...இருக்க வேண்டிய தைரியமும் உறுதியும் ...ங்கண்ணாவுக்கு இருக்குமான்னு தெரியலையே, ...மார்! இதையெல்லாம் சரியாத் தெரிஞ்சுக்காம ...ரின்னு எப்படிச் சொல்றது?''

''பேசி முடிச்சுட்டியா?.. இப்ப நான் பேசறேன். ...ங்கண்ணா கெட்டிக்காரன். இதையெல்லாம் ...யாசிக்காம இல்லை. அவன் எங்கப்பா ...ம்மாவோட பேசி முதல்ல சம்மதம் வாங்கிட்டான். ...போனவாரம் அவனோட கல்யாணப்பேச்சை ...ங்கம்மா எடுத்தப்ப பிசிறே இல்லாத குரல்ல ...ளிச்னு சொல்லிட்டான் 'வாணியை எனக்கு ...ரொம்பப் பிடிச்சிருக்கும்மா. அவளோட அப்பா ...ம்மா கிட்ட கேளு' அப்படின்னு!''

''அதுக்கு உங்கம்மா என்ன சொன்னா? அப்ப ...ங்கப்பா பக்கத்துல இருந்தாளா?''

''எங்கப்பாவும் பக்கத்துலதான் இருந்தா.''

''என்ன சொன்னா அவா ரெண்டு பேரும்?''

''அம்மாவுக்கு இந்த விஷயம் ரொம்ப ஆச்சரிய ...ாயிருந்ததுன்னு நினைக்கறேன். ஒரு நிமிஷம் எதுவுமே சொல்லாம கண்ணை அகட்டிண்டு அவனை ஒரு பார்வை பார்த்தா. அப்பாவுந்தான். ஆனா அடுத்த நிமிஷமே சுதாரிச்சுண்டுட்டா. 'சரிப்பா! உன் கல்யாணம் உன்னோட இஷ்டம். இதுக்கு நாங்க குறுக்கே நிற்கலை. வாணியும் நல்ல பொண்ணு. நன்னாப் பாடறா. அவா ஏழைகள். அதனால எதுவும் வரும்படி இருக்காது. அதைப் பத்தி எங்களுக்குப் பரவாயில்லை. உனக்குப் பிடிச்சிருந்தா சரி. ...' அப்படின்னு அம்மா பளிச்னு சொல்லிட்டா. அந்த விஷயத்துல அப்பாவோட அபிப்பிராயம் என்னவா யிருக்கும்கிறதைத் தெரிஞ்சுண்ட பிற்பாடு அவனுக்குப் பதில் சொல்லணும்னு கூட அம்மா காத்துண்டிருக்கல்லை.''

வாணி சிரித்தாள். ''ஒருவேளை, உங்கப்பா எப்படியும் ஆட்சேபணை பண்ணுவார்; பிள்ளைகிட்ட அவர் வாங்கிக்கட்டும் கெட்ட பேரை அப்படின்னு உங்கம்மா நினைச்சிருக் களாலோல்லியோ!''

குமாரும் சிரித்தான். ''இல்லை. எங்கப்பாவோட வார்த்தைகளைக் கேட்டா நீ இன்னும் ஆச்சரியப்பட்டுப் போவே... அம்மா சொல்லி முடிச்சதுமே, 'சரியாச்சொன்னே, பார்வதி! நீ சொல்ற மாதிரி அவா கிட்ட சல்லிக்காசு கூட இருக்கும்னு எனக்குத் தோணலை. ஒரு கோயில்ல வச்சு சிம்ப்பிளாக் கல்யாணத்தை நடத்திடலாம். அந்தச் செலவையே கூட நாமே ஏத்துண்டாலும் போச்சு' அப்படின்னு பச்சைக் கொடியே காட்டிட்டார் எங்கப்பா!''

வாணிக்குக் கண்கள், கலங்கின.

'எப்பேர்ப்பட்ட பெற்றோர்! எவ்வளவு மனிதாபிமானம் அவர்களுக்குத்தான்! அந்தக் குடும்பத்தைச் சென்றடைந்த பிறகு அவர்கள் மனம் கோணாதபடி நடந்து கொள்ளவேண்டும்.'

''என்ன வாணி, கண்ணெல்லாம் கலங்கிடுத்து?''

''உங்கப்பாவும் அம்மாவும் எவ்வளவு நல்லவான்னு நினைச்சேன். மற்றபடி வேற ஒண்ணுமில்லை... அது சரி, நீயும் அப்ப பக்கத்துலதான் இருந்தியா?''



"ஆமா. எனக்கும் ஒரே சந்தோஷம். எங்கப்பா அம்மா நல்லவான்னு எனக்கு ஏற்கெனவே தெரியும். ஆனா இந்த அளவுக்கு நல்லவாளா யிருப்பாங்கிறது அன்னைக்குத்தான் தெரிஞ்சுது! இப்போ சொல்லு, வாணி! எங்கண்ணாகிட்டவும் மத்தவாகிட்டவும் நீ சம்மதிச்சுட்டேன்னு சொல்லிடலாமில்லையா?"

வாணியின் கூச்சம் பெருமளவுக்குப் போயிருந்தது. ஒரு தம்பியிடம் பேசுவதற்குரிய சகஜம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

"உங்கண்ணா எப்படிப்பட்ட ஆளு, குமார்?"

குமார் சிரித்தான். "ரொம்ப கெட்டிக்காரன் இல்லைன்னா எல்லாரையும் போல உங்கிட்ட முதல்ல அசட்டு பிசட்டுனு பேசி உன் சம்மதத்தை வாங்கிண்டு,அதுக்கு அப்புறம் அப்பா அம்மாகிட்ட சண்டை போட்டு ரகளை பண்ணிண்டு, அவா சம்மதிக்கலைன்னா உங்கிட்ட வந்து ஸாரி என்னை மறந்துடுன்னெல்லாம் சினிமாவில வர்றாப்ல உளறியிருப்பானே! ஆனா அப்படியெல்லாம் பண்ணாம எவ்வளவு புத்திசாலித்தனமா நடந்துண்டிருக்கான் பாரு! வீட்டில லைன் க்ளியர்னு தெரிஞ்சுண்ட பிற்பாடு, தான்விரும்பற பொண்ணுகிட்ட தன் மனசை வெளிப்படுத்தறதும் ஒரு புத்திசாலித்தனம்தானே!"

"நான் ஒத்துக்க மாட்டேன். நீ சொல்றது எப்படி இருக்குன்னா, ஜாதகத்துல நம்பிக்கை இருக்கிறவா, ஜாதகப் பொருத்தம் இருக்கான்னு தெரிஞ்சுண்ட பிற்பாடு ஒரு பொண்ணை ல பண்றாப்ல! இதுக்குப் பேரு லவ்வா? லவ் பண் பொண்ணை எந்த எதிர்ப்பையும் சமாளிச்சு கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு உறுதி இருக்கிறவன்தான் ஆம்பளை!"

"ஓ! அப்படி வர்றியா நீ? நீ சொல்றதும் சரிதான். எப்படி இருந்தா என்ன வாணி? உனக்கு அவனை பிடிச்சிருக்கில்லையா?"

"உங்கண்ணா எப்படி ஏதுன்னு தெரியாம நான் எப்படி சரின்னு சொல்றது? நல்லவர்தானே?...நான் பார்த்த வரையில கொயட்டா, ரிசர்வ்டா இருக்கிறவர்ங்கிறதைத் தவிர வேறு எதுவுமே எனக்கு அவரைப் பத்தித் தெரியாதில்லையா? அதான் கேக்கறேன்."

"எங்கண்ணா கொயட்டாவும் ரிசர்வ்டாவும் இருக்கிறது அவனோட சுபாவம். எனக்குத் தெரிஞ்சு அவன் நல்லவன். எந்தக் கெட்ட பழக்க வழக்கமும் இல்லாதவன். நல்ல ரசிகன். கிட்டத்தட்ட நாத்தம்பது ராகங்கள் கண்டுபிடிக்கத் தெரியும்... முக்கியமா உன்னோட பாட்டுக்கு ரசிகன். அதைப்பாரு முதல்ல! உன்னோட முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டான். இன்னும் என்ன வேணுமாம்?"

வாணி தலையைக் குனிந்து கொண்டாள். துவரை இல்லாத நாட்டம் அவளுக்கு ரவியின் து வந்தது. தன்னைத் தேடி வருகிற காதல் யர்வானது என்கிற எண்ணமும் ஏற்பட, அவனை ற்கும் தீர்மானத்துக்கும் அவள் உடனே ந்துவிட்டாள்.

"சரி, குமார்! எனக்குச் சம்மதம்தான். ஆனா ன் சம்மதத்துக்குப் பாதிக் காரணம் உன்னோட பாரிசுதான்! அதாவது ஃபிஃப்டி பெர்சன்ட் தான் ன்னோட ஈடுபாடு..."

"அப்படியெல்லாம் சொல்லப்படாது. முழு டுபாட்டோடு சரின்னு சொல்லணும்!"

"சரி! முழு ஈடுபாடுதான். ஆனா அதுல அம்பது சவீதம் உன்னோட சிபாரிசினால ஏற்பட்டதுன்னு சால்றேன்."

"சரி. எப்படியோ! நீ சரின்னு சொல்லிட்டே... ப்பவே ரவியை டெலிபோன்ல கூப்பிட்டுச் சால்லிடட்டுமா?"

"அசடு மாதிரி பேசாதே, குமார்! எங்க அப்பா, ம்மாவுக்கெல்லாம் சொல்ல வேண்டாமா?"

"அவா என்ன வேண்டாம்னா சொல்லப் போறா? துக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? அவன் ரே ஆவலா – கவலையாவும் – இருப்பான். ப்பிட்டுச் சொல்லிடறேன்.."

வாணி முகம் சிவக்க மவுனமானாள். குமார் தாலைபேசியில் ரவிச்சந்திரனை அழைத்தான்.

"ரவி! வாணி சம்மதிச்சுட்டா! மிஸஸ் ஜார்ஜ் ட்டிலேருந்து பேசறேன். இங்கதான் பக்கத்துல ருக்கா. பேசறியா? நான் வாசலுக்குப் பாயிடறேன். அதனால தயங்காம என்ன ணும்னாலும் கேளு!"

குமார் அவளிடம் ஒலிவாங்கியை நீட்ட, "சும்மா ரு, குமார்! டெலிபோன்ல எல்லாம் என்னால ச முடியாது!" என்றாள் வாணி.

"டெலிபோன்ல எல்லாம் பேசமாட்டாளாம் என் ங்கால மன்னி! நேர்ல பேசினாத்தான் க்குமாம்!"

"ஏதாவது உளறிண்டிருக்காதே, குமார்!"

"என்னை வையறா வாணி. நான் உளர்றேனாம். சரி. நான் வெச்சுடறேன். நீயே நேர்ல பார்த்து உளறிக்கோ. நான் பேசறதெல்லாம் இப்போ உளறலாத்தான் இருக்கும்!" என்று சிரித்துவிட்டு அவன் தொலைபேசி இணைப்பை வெட்டினான்.

வெளியே போயிருந்த மேரி ஜார்ஜும் மைக்கேலும் அப்போது திரும்பினார்கள்.

இருவரும் சிரித்த முகங்களுடன் இருந்ததைப் பார்த்ததும் மேரி ஜார்ஜ் குமாருக்குத் தெரியாமல் வாணியைப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டு உள்ளே போனாள்.

ஒரு நிமிடத்துக்கெல்லாம் சமையற்கட்டிலிருந்து வாணியை அவள் அழைத்தாள்.

அவள் போய்ச் சிரிப்பும் வெட்கமுமாக நின்றதும், "என்ன, என் அன்பான குழந்தையே! நான் சொன்னபடியே சரி என்று சொல்லி விட்டாயா? உன் முகம் எனக்கு அப்படித்தான் சொல்லுகிறது!" என்று மேரி ஜார்ஜ் சிரித்தாள்.

வாணி வெட்கத்துடன், "குமார் என்னை அணுகியது தன் அண்ணனின் சார்பில், மிஸஸ் ஜார்ஜ்! அவருக்கு என்னை மிகவும் பிடித்திருக்கிறதாம். கேட்கச் சொல்லிக் குமாரை அனுப்பியிருக்கிறார்," என்றவள் மற்றவற்றையும் அவளுக்குச் சொன்னாள்.

மேரி ஜார்ஜ் அவள் வழக்கப்படி பாய்ந்து வாணியை முத்தமிட்டு, "கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்டும், என் அன்பான குழந்தாய்!" என்றாள்.

.. பிறகு மூவரும் கூடத்து மேசையருகே அமர்ந்து தேநீர் அருந்தினார்கள்.

மேரி ஜார்ஜ் தனது தேநீரைப் பருகிய வண்ணம், "அப்படியானால் கூடிய விரைவில் உன் இடத்தில் நான் இன்னொரு பெண்ணுக்கு விளம்பரம் கொடுக்கும்படி நேரும்!" என்று போலியான சோகத்துடன் குறிப்பிட வாணி தலையைக் குனிந்துகொண்டாள்.

குமாரும் சிரித்துவிட்டு, "வாணி! இன்னிக்கே நான் உங்கப்பா அம்மாகிட்ட இந்த விஷயத்தைச் சொல்லிடட்டுமா?" என்று கேட்டான்.

வாணி பதில் சொல்லுமுன், மேரி ஜார்ஜ் குறுக்கிட்டாள்: "வேண்டாம், வேண்டாம்!

அவசரப்படாதே , என் அன்பு மகனே! அவசரப்படாதே. முதலில் அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசவேண்டும். ஒருவருக்கொருவர் தங்கள் இதயங்களிலுள்ள எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளவேண்டும். பேச்சுவார்த்தையின் போது புதிதாக ஏதேனும் விஷயங்கள் கிளம்பக் கூடும். அதற்குள் யாரிடமும் எதுவும் பேசாதே..''

''அதுவும் சரிதான்! நீங்கள் பெரியவர்கள். அனுபவசாலி! அதனால் உங்கள் அறிவுரைப்படியே செய்கிறேன்!'' என்றான் குமார், குறும்புத்தனம் விழிகளில் பளிச்சிட.

பிறகு, ''உங்கள் திருமணம் காதல் திருமணந்தானே?'' என்றான்.


''பின்னே? முன் பின் தெரியாதவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டு வாழ்க்கை முழுவதும் அல்லாடமாட்டோம் நாங்கள்!''

''ஓ! அப்படியானால் நன்கு பழகி அறிந்தவனைத் திருமணம் செய்துகொண்டு அதன்பிறகுதான் அல்லாடுவீர்களாக்கும்!''

மேரிஜார்ஜ் கை நீட்டி அவன் தலை செல்லமாக ஒரு குட்டு வைத்துவிட்டுச் சிரித்தா ''ஒரு விதத்தில் சரியாகவே சொன்னாய், மக தெரிந்தவனாக இருந்தாலும் சரி, தெரியாதவன இருந்தாலும் சரி. மணவாழ்க்கை அமை மட்டும் அவரவர் தலையெழுத்துப்படியேத இருக்கும்!''


''அப்படியென்றால் காதல் திருமணங்கள் எ வகையில் பெற்றோர் நடத்திவைக் திருமணத்தை விட மேன்மையானவை? பெற்ற நடத்திவைக்கும் முறையான திருமணங்க இங்கிலீஷ்காரர்களும் உங்களைப்போ ஆங்கிலோ – இந்தியர்களும் ஏன் செய்கிறீர்கள்?''

''காதல் திருமணங்களே கூடத் தோல்வி முடியும்போது, ஏற்பாடுசெய்து நடத்தப்ப திருமணங்கள் இன்னும் அதிகத் தோல்வி தானே முடியும், என் மகனே! அதை யோசித் பார். முன்பின் துளியும் அறிமுகமே இல்ல ஒருவனுடன் வாழ்க்கையைப் பகிர்



இனங்களைப் பிரித்திடும் சான்றிதழ்
இதயமே இல்லாச் சடங்குகள்
படிப்புக்கும் விலை யொன்று வைத்தது
பாரத தேசத்தில் பார்த்ததா?

காட்டுக்குள் ராஜ்ஜியம் நடப்பதும்
சந்தன மரங்களைக் கடத்தலும்
மாநிலங்கள் இரண்டின் திணறலும்
மாற்றான் ஆட்சியில் இருந்ததா?



கொடியங் குளத்தில் நடந்ததும்
கொள்ளையர் பல உயிர் குடிப்பதும்
குண்டு வெடிப்பில் ரயில் சிதைவதும்
வெள்ளையர் ஆட்சியில் நடந்ததா?

விடியலில் பெண்சிசு மடிவதும்
வீட்டிற்குள் கல்லறை எழுவதும்
பள்ளிச் சிறாரைக் கடத்தலும்
பரங்கியர் ஆட்சியில் பார்த்ததா?

பார்க்கும் பார்வையில் கொலை வெறி
பகுத்தறி வில்லா மதவெறி
இனக் கலவரத் தேரோட்டி
ஊர்வலங்கள் அன்று நடந்ததா?

கருணை இல்லங்கள் மிகுந்ததும்
கபட முனிகளின் பெருக்கமும்
குப்பைத் தொட்டிகளின் முனகலும்
தொன்று தொட்டே வளர்ந்ததா?

மருந்தில் அடங்காப் பிணிகளும்
மனைகள் வயல்வெளி எழுவதும்
மாற்றான் மொழிவழிக் கல்வியும்
அடிமை ஆட்சியில் இருந்ததா?

என்று விடியுமென்று ஏங்கினோம்
விடியலில் ஏனோ தூங்கினோம்
தேச மடிதலுக்கறிகுறி இவை என
கண்டு விழித்திடு நண்பனே!

காள்ளுவது புத்திசாலித்தனமாகுமா? தனால்தான் இந்தியாவில் பெண்களுக்கு மட்டும் பாறுமையைப் போதித்து வந்துள்ளார்கள். பண்கள் பொறுமையாக இருந்து விட்டால் எந்தத் ருமணமும் வெற்றியடையுமல்லவா? அதாவது ணுக்கு அது வெற்றி! பெண்ணைப் பற்றி ந்தியா ஏதாவது யோசித்ததுண்டா? பெண் பாறுமையற்றுக் கேள்விகள் எழுப்பும்போது ந்தத் திருமணமும் தோல்வியையே அடையும், ன் மகனே! சந்தோஷமான இந்த நேரத்தில் ாம் தோல்வியைப் பற்றிப் பேசி வாணியை ச்சுறுத்தலாகாது என்று நினைக்கிறேன். தனால் நாம் நல்லவிதமாகப் பேசுவோம். ன்னுடைய திருமணம் காதல் திருமணந்தான். வற்றிதான். ஏன்? வாணியின் பெற்றோருடையது ட வெற்றித் திருமணம் என்றுதான் தான்றுகிறது. இல்லையா?''

''ஆமாம். எங்கள் பெற்றோர் சண்டை போட்டு ங்கள் பார்த்ததே இல்லை.''

''உன் பெற்றோர் எப்படி, குமார்?''

''ஒரே மாதிரியான சிந்தனையுடைவர்கள். துதான் இப்போது தெரிந்துகொண்டீர்களே — ன் அம்மா என் அண்ணனின் திருமணத்துக்குப் ச்சைக்கொடி காட்டியதை அப்படியே என் ப்பாவும் ஆதரித்துவிட்டாரே! பிறகென்ன? னால் இப்படி ஒற்றுமையான தம்பதியைப் ார்ப்பது அரிதுதான்.''

''அதுதான் நானும் சொன்னேன். சரி. முதலில் ன் அண்ணனும் வாணியும் சந்தித்துப் பேச ற்பாடு செய்!''

''நானென்ன ஏற்பாடு செய்வது? இனி அவர்கள் டு!''

மேலும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு மார் புறப்பட்டுப் போனான்.

அவன் போன பிறகு, ''வாணி! கணவனைத் ர்ந்தெடுப்பதில் பெண்கள் ரொம்பவும் கவனம் ட்ட வேண்டும். அதிலும் வாழ்க்கையில் ஏதேனும் றிக்கோள் வைத்திருப்பவர்கள் அதிகமான ச்கிரதையுடன் நடக்க வேண்டும். வெறும் ங்களின் அடிப்படையிலான நம்பிக்கைகளுடன் சம்மதித்துவிட்டு நாளைக்கு ஏமாந்து, மனமுடைந்து போகக் கூடாது, மகளே! நான் உன்னை அச்சுறுத்தவில்லை.. நீ பெரிய பாடகியாக வேண்டுமென்கிற குறிக்கோள் கொண்டவள் தானே?' என்றாள் மேரி ஜார்ஜ்.

''ஆமாம், மிஸஸ் ஜார்ஜ்! இசைத்துறையில் முன்னேறி எப்போதும் பாடிக்கொண்டே இருக்கவேண்டுமென்பதே எனது குறிக்கோள். இந்த எனது குறிக்கோளுக்கு அந்த வீட்டில் யாருமே தடைசொல்ல மாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.''

''நினைக்காதே, என் அன்பு மகளே! கேட்டுத் தெரிந்து கொள். அதுதான் நல்லது.''

''கேட்டுத் தெரிந்து கொள்ளுவதால் மட்டுமென்ன லாபம்? இப்போது சரி என்று சொல்லிவிட்டு நாளை பின்வாங்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?''

''ஒன்றுமே கேட்டு வைத்துக்கொள்ளாத போது அந்த அபாயம் இன்னும் அதிகமாகும் என் மகளே..''

சில நொடிகளுக்கு வாணி மவுனமாக இருந்தாள். பிறகு, ''அப்படியானால் திருமணத்துக்குப் பிறகு இசைப்பயிற்சியைத் தொடரவும் தேர்ச்சி பெற்ற பின் மேடைக் கச்சேரிகள், ரேடியோவில் பாடுவது போன்ற வற்றையும் அனுமதிப்பீர்களா என்று கேட்டுத் தெரிந்துகொண்டுவிட வேண்டுமென்கிறீர்களா?'

''உனக்கு அவற்றில் உயிருக்குயிரான ஆர்வம் இருப்பின் கேள். இவற்றை விடவும் திருமணம் பெரிது, குடும்பவாழ்க்கை மட்டுமே போதுமானது என்று நினைப்பவளாயின் — இசை இரண்டாம் பட்சமே என்பதே உன் கருத்தாயின் — கேட்க வேண்டாம்.''

''அய்யோ! இசை என் மூச்சுக்காற்று, மிஸஸ் ஜார்ஜ்! மூச்சுவிடாமலாவது இருப்பேன். பாடாமல் இருக்க என்னாலாகாது!''

''அப்படியானால் கேட்டுவிடு! அதுசரி, அவனை எப்படி, எங்கு சந்திப்பதாக இருக்கிறாய்?''

''எனக்கு எப்படித் தெரியும், மிஸஸ் ஜார்ஜ்? குமார்தான் தெரிந்துகொண்டு வந்து

சொல்லவேண்டும்.''

"உன் குறிக்கோளும் நிறைவேறவேண்டும். உன் திருமணமும் இனிதே நடைபெறவேண்டும். என் வாழ்த்துகள்!" என்ற மேரி ஜார்ஜ், வாணியின் நெற்றியில் தன் உதடுகளை மென்மையாகப் பதித்தாள்.

... தாமதம் இன்றி அவர்களது சந்திப்பு மறுநாளே நிகழ்ந்தது. பாட்டு வகுப்புக்குப் போவதாய்ச் சொல்லிக் கிளம்பிய வாணி ரவிச்சந்திரனை அவனது அலுவலகத்தில் குமாரின் துணையோடு சந்தித்தாள். குமார் விடைபெற்றபிறகு ரவிச்சந்திரன் அவளை ஓர் ஓட்டலுக்கு அழைத்துப் போனான். கிராமத்துப் பெண்ணான வாணிக்கு வியர்க்கத் தொடங்கியது. தான் ஏதோ தவற்றைச் செய்துகொண்டிருப்பது போல் குற்ற உணர்வு அவள் உடம்பு முழுவதும் படர்ந்தது. இருப்பினும் சமாளித்தவாறு அவனுக்கு எதிரே தலைகுனிந்து உட்கார்ந்தாள்.

ரவிச்சந்திரனின் முகமும் சிவந்துதான் இருந்தது. உட்கார்ந்து கொண்டதும், "ஸ்வீட் சாப்பிடலாம் முதலில்! பாஸந்தி பிடிக்குமா?" என்றான் அவன்.

அவள் எச்சில் விழுங்கித் தலையாட்டினாள். பாஸந்திக்கும் போண்டாவுக்கும் பணித்தபிறகு அவன் அவளை நோக்கி முறுவலித்தான்.

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?''

அவள் தலை குனிந்தபடியே இருந்தாள். விரலால் மேசைமீது கோடு கிழித்துக் கொண்டிருந்தாள்.


"மேசைமேல விரலால் எழுதிக் காட்டுறயா என்ன?" என்று அவன் சிரித்தான். அவளுக்கு சிரிப்பு வந்தது.

"அம்மாடி! வந்ததிலேருந்து ஏதோ பேய்பிசாசைக் கண்டு பிரண்டுபோன மாதிரி முகத்தோட இருந்தே. முதன் முதலா சிரிக்கிறே!

அவள் குனிந்த தலை குனிந்தபடியே இருந்தாள். அவன் கேலி செய்ததால் மேசை மீது கிறுக்குவது மட்டும் நின்றிருந்தது.

→

"ஆ'ர்ட் வார்க்" (Art Wark) இது றும்புதின்னி இனத்தைச் சேர்ந்த விலங்கு. இதன் உறைவிடம் தென்னாப்பிரிக்கக் காடுகள், ஸஹாராப் பாலைவன எல்லைப் பிரதேசங்கள். இவை ஒவ்வொன்றும் ஒரு நாளைக்கு 50 முதல் 60 கிலோ எடையுள்ள றும்புகளைத் தின்கின்றன. இவை இரவில் மண்ணில் பெரிய குழிகள் தோண்டிப் படுத்துறங்குகின்றன. ஆப்பிரிக்க நாட்டினர் இவ்வினத்தை "நிலப்பன்றிகள்" ன்கின்றனர். - ஏழ்வரைக்கடியான்



"நான் கேட்டதுக்கு இன்னும் பதிலே லையே!"

அவள் கணநேரம் தலை உயர்த்தி அவனை ாக்கியபின், "பிடிக்கல்லைன்னா வந்திருப்பேனா ங்கே?" என்றாள்.

"ஒருவேளை என்னைப் பிடிக்கலைங்கிறதை ர்ல சொல்லிடறது தான் நல்லதுங்கிறதுக் கவும் வந்திருக்கலாமில்லையா?"

அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது. சிற்றுண்டி பிட்டங்கள் வந்தன.

"சாப்பிடு!.."

சிறு கரண்டியைப் பற்றியிருந்த அவள் விரல்கள் ங்கின. அவன் தன்னையே பார்த்துக் காண்டிருந்ததைக் கவனித்ததில் அவை ஆடவே ய்தன.

"உனக்குப் பாடத்தான் வரும்னு நினைச்சேன். காலால மட்டும் டான்சும் ஆடத் தெரியறதே!.. . பயப்படாம சாப்பிடு. அவசரமா முழுங்கி வக்காதே. பிறகு உடம்புக்கு ஆகாது. ஜீரணம் காது. பயப்படாதே, வாணி! உனக்குத் ரிஞ்சவன்தானே நான்? சரி. சாப்பிடலாம்.."

அதன் பிறகு இருவரும் மவுனமாகவே சாப்பிட்டு த்தார்கள். காப்பி வருவதற்கு இருந்த ரத்தில், "எங்கே மாட்டேன்னு சொல்லிடு யோன்னு பயந்து துடிச்சிண்டிருந்தேன். ன்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னியே, கிட்ட எந்த அம்சம் உனக்குப் பிடிச்சிருக்கு? உங்கிட்ட இருக்கிற அழகு, சங்கீதம் இரண்டும் எனக்குப் பிடிச்சிருக்கிற மாதிரி எங்கிட்ட ஓர் அம்சமாவது உனக்குப் பிடிச்சதா இருக்கணுமில்லையா? சொல்லு."

"இப்படியெல்லாம் கேட்டா நான் என்னன்னு சொல்றது? பிடிச்சிருக்கு. அவ்வளவுதான் சொல்லத் தெரியும்!"

"அன்னைக்கு பைரவியில 'யாரோ இவர் யாரோ'ன்னு பாடினியே, அப்ப என்னை ராமனாகவும் உன்னை சீதையாகவும் நான் கற்பனை பண்ணிண்டேன். உனக்குத் தெரியாது. அன்னைக்குத்தான் முதன் முதலா உன்மேல எனக்கு அப்படி ஓர் எண்ணம் வந்தது. அதாவது கல்யாணம் பண்ணிக்கிற எண்ணம்!"

அவளது கூச்சம் சற்றே குறைந்திருந்தது. அவள் ஆர்வத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தபின் மறுபடியும் தலை கவிழ்ந்தாள்.

"இது முதல் சந்திப்புத்தானே! போகப் போகச் சரியாயிடும்!"

"இல்லை. இனிமே நான் இப்படியெல்லாம் வரமாட்டேன். நாலு பேர் கண்ணுல பட்டா வீண் வம்பு!"

அவள் இவ்வாறு சொன்ன கணத்தில் அவளையும் அவனையும் ஒரு ஜோடி விழிகள் கவனித்து வியந்துகொண்டிருந்தன.

(தொடரும்)

வினை தீர்க்கும் விருட்ச சாஸ்திரம்

ஜெயரதன்

பாகவதத்தில் ஒரு வாக்கியம் உண்டு, "இந்த அண்டத்தின் ஏதாவது ஓரிடத்தில் சிறு சலனத்தை உண்டு பண்ணாமல், நமது பூவுலகில் ஒரு புல்லைக்கூடக் கிள்ள முடியாது" என்பதுதான் அந்த வாக்கியம். இதனுடைய உட்கருத்து என்ன வென்றால் இவ்வண்டத்தில் தனித் தனியாகத் தெரியும் கோளங்களுக்குள் ஒன்றுக்கொன்று ஓர் ஈர்ப்பு உண்டு, தொடர்பு உண்டு என்பது தான். செல்லுலார் டெலிபோனும், கார்டுலெஸ் டெலிபோனும் வந்திருக்கும் இந்த நாளில் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளச் சிரமமாயிருக்காது.

விஞ்ஞானம் பயிலும் மாணவர் களிடத்தில் ஒரு கேள்வி கேட்கப்படுவதுண்டு. பூமி, தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. சென்னையை விட்டுக் கிளம்பும் விமானம் அமெரிக்கா போவதாக வைத்துக் கொள்வோம். விண்ணில் 700, 800 மைல் வேகத்தில் சென்று 24 மணி நேரம் பயணம் செய்து அமெரிக்கா செல்வதைவிட, விமானத்தைச் சென்னைக்கு மேலேயே நிலையாக நிறுத்தி வைத்தால், உலகம் சுழன்று அமெரிக்கா வந்து விடுமே, அப்போது விமானத்தைக் கீழே இறக்கிட முடியுமா? ஏன் அனாவசியமாகப் பறக்க வேண்டும்? என்று கேட்பார்கள். மாணவர்கள் பொருத்தமாய் பதில் சொல்வார்கள். பூமியைவிட்டு மேலே எழுந்தாலும், பூமியின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டுத்தான் செயல்படமுடியும் என்று பள்ளிப்பிள்ளைகள் சொல்வார்கள்.

இந்த ஈர்ப்புச் சக்தியை ஒவ்வொரு கிரகமும் மற்றதன் மீது செலுத்துகிறது. அதன் விளைவாகவே இந்த அண்டம் இயங்குகிறது. கிரகங்களும், உபகிரகங்களும் சுழன்று நியதிக்கு உட்பட்டுச் செயல்படுகின்றன.

இந்த ஈர்ப்புச் சக்திகளைப் பல்விதமாக உணர்ந்து அளந்து வரையறுத்து நமது ரிஷிகள் நமக்கு ஜோதிட சாஸ்திரமாக வகுத்துக் கொடுத்தார்கள். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு குணம், ஒரு சக்தி என்று வரையறுத்தார்கள். இதனைக் கூறியவர்கள் சுயநலம் கருதாத ரிஷிகள். விளம்பரத்திற்காகவோ, தமது சுய லாபத்திற்காகவோ இதனை அவர்கள் கூறவில்லை. நாம் எந்த நோக்கத்திற்காக, இந்த சாஸ்திரத்தைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொருத்தே, அதன் வெற்றி அமையும். கத்தியை வைத்துக் கொண்டு பழத்தையும் நறுக்கலாம். கழுத்தையும் நறுக்கலாம். கத்தி என்ன செய்யும்?

'சோதிடம் தனை இகழ்' என்று பாரதி சொன்னாரே என்று பலர் பேசக் கேட்டிருக்கிறேன். ஏதோ பாரதி கூறிய அனைத்தையும் எல்லாரும் கடைப்பிடித்துவிட்டது மாதிரியும், இது ஒன்றைத்தான் ஏற்க மறுப்பது போலவும் பேசுவார்கள். பாரதியின் புதிய ஆத்திசூடி அடிமையாகக் கிடந்த அந்தக் காலத்து மக்களை உசுப்பிவிடுவதற்காகவே கூறப்பட்டது என்றுதான் தோன்றுகிறது. 'இது நமது விதி. இதெல்லாம் கிரக பலன்' என்று துவண்டு செயலற்றுக் கிடந்த மக்களை 'ஜோதிடத்தின் பெயரைச் சொல்லி செயலற்று இராதே. ஜோதிடமெல்லாம் வேண்டாம். எல்லாரும் எழுந்து, சோம்பலை உதறிப் போராடுங்கள்' என்று உசுப்பி விடத்தான் 'சோதிடம் தனை இகழ்' என்றான் பாரதி. 'சாந்தி, சாந்தி, சாந்தி' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்காராதீர்கள் என்று தான் 'ரௌத்ரம் பழகு' என்று அவன் முழங்கினான். 'நையப்புடை' என்றான். புதிய ஆத்திசூடி ஒரு மருந்து. உணவன்று.

'க்ஷதம்' என்றால் சம்ஸ்கிருதத்தில் குறைவு என்று அர்த்தம். 'அக்ஷதம்' என்றால் குறைவில்லாதது என்று அர்த்தம். நுனி உடையாது குறையில்லாமல் இருக்கும் அரிசிதான் அக்ஷதை. இதைத்தான் நம் பெரியவர்கள் பயன்படுத்துவா மஞ்சள் குங்குமம் க 'மந்த்ராக்ஷதை' என்று சொல்வா காஞ்சிப்பெரியவர், சிருங் சந்நிதானம் ஆகியோரைத் தரி செல்லும்போது அவர்கள் இத்த அக்ஷதையைக் கொடுப்பா அதற்கு என்ன அர்த்தம் தெரி தாமிரக் கம்பி மின்சாரத்தைக் கட என்று நமக்குத் தெரியும். அதைப் நமது எண்ணத்தை எது கட 'தீர்க்காயுசாய் இரு' 'தீர்க்க சுமங்க இரு' என்று அவர்களது எண்ண இந்த அக்ஷதை அப்படியே இடம செய்கிறது. நம்மிடம் செலுத்து நாம் அதனைச் சிரஸில் போ கொள்வோம்.

இதையெல்லாம் எத சொல்கிறேன் என்றால், நம் மேம்போக்காகப் புரிந்துகொ முடியாத விஷயங்களில் சூட்சுமங்கள் இருக்கின்றன.

இந்த மரங்களும் அப்படித் மருந்தாகவும், உணவாகவும் ம நாம் பயன்படுத்துகிறோம். நாற் கட்டில் என்று செய்து ஏறி உட்கா கொள்கிறோம். இல்லாவிட் வெட்டி அடுப்பில் வைக்கிறே மரஞ்செடிகொடிகளின் ஆன் சிறப்புகளை நாம் தெ கொள்ளவில்லை. அதனாலே அவற்றை உதாசீனமாய்ப் பார்க்கிறே

ஒரு சிறிய அனுபவத்தைப் பகி கொள்ள விரும்புகிறேன். எ சொந்த அனுபவம். 25 ஆண்டுகளு முன்னால் நான் கண்ணால் பா விஷயம். நாம் சர்வசாதாரண நினைக்கிற தர்ப்பைப் சம்பந்தப்பட்ட விஷயம். திருச் அருகே ஆதிகுடி என்னும் கிராம நடந்த விஷயம்.

கல்யாணம் ஆகவேண்டிய அவளுக்கு நல்ல திடகாத்திரமான ஆனால் திடீரென்று சிரிப் பயங்கரமாக அலறுவாள். நடு இ வீட்டைப் படுவேகமாக வருவாள். அவளுக்குப் பிடித்திருக்கிறது என்று ஊரில் அனைவரும் பயந்தனர். பே விரட்டுவதற்கு என் தாய் பாட்டனாரிடம் அழைத்து வந்தா

தேருக்கும் மோருக்கும்

"வடம்கட்டி இழுபடும் குடமிருந்து நீர் பெறும்
இடம்தோறும் நின்று நின்று ஏற்றி இறக்கும் வழியெலாம்
வீதிஉலா வருவதால், உறியடியில் முடிவதால்
ஆதிமுதல் தேரதுவும் மோரதுவும் நேர்.

பார்த்தால் ஒரே பாட்டு. பொருளோ இரண்டு. சிலேடை என்று சொல்கிறோம். நெய்வேலி எழுத்தாளர் திருமதி. வேதாத்மா நமக்குச் சிலேடைப் பாடல்களை வழங்குகிறார்.

பாடல் வரிகள்	தேருக்கு	மோருக்கு
வடம் கட்டி இழுபடும்	தேரை வடம்கட்டி இழுப்பர்	கம்பத்தில் கடைவான் கயிறு கட்டி மோர் சிலுப்புவர்.
குடமிருந்து நீர்பெறும்	தேர் ஓடும் முன்சாலைகளில் குடம் குடமாக நீர்கொட்டுவர்	குடத்தினின்று நீரைக் கொட்டி மோர் செய்வர்.
இடம் தோறும் நின்று நின்று ஏற்றி இறக்கும்	தேரை அங்கங்கே நிறுத்தி கற்பூரம் ஏற்றி சுற்றி இறக்கிவைப்பர்	மோர் விற்பதற்கு வீடுதோறும் தலையில் இருக்கும் மோர்க் குடத்தை இறக்கிவைத்து, பிறகு கம்மாட்டில் ஏற்றுவர்
வழியெலாம் வீதி உலா வருதலால்	வழிகளில் உலாவருகிறது	மோர்விற்க வீதியில் வருகிறது.
உறியடியில் முடிவதால்	உறியடி என்னும் உற்சவம் கடைசி நாள் எனக்கருதப்பட்டு தேர்த் திருவிழா முடிகிறது	வீட்டில் உறிகட்டி வைத்து அதில் மிஞ்சிய மோரை வைப்பர்
ஆதிமுதல்	பழங்காலந் தொட்டு	பழம்காலந்தொட்டு

தேரதுவும் மோரதுவும் நேர் – தேரும், மோர்ப் பானையும் சமமாகிறது.

...அறையில் ஓர் ஓரத்தில் அவர் ...து கொண்டார். தன்னைச் சுற்றி ...பைப் புற்களை அரணாக ...ந்துக் கொண்டார். பேய் ...தவளை அவர் எதிரில் அமர ...தார்கள். அவர் மந்திரங்கள் ...லச் சொல்ல அவள் ஆவேசமாக ...தொடங்கினாள். எதிரில் இருந்த ...க் கொன்று விடுகிற அளவிற்கு ...நக்குள் வெறி வந்து எழுந்து ...தாள். ஆனால் தர்ப்பைப் ...த் தாண்டி அவளால் ஒன்றுமே ...முடியவில்லை. அவர் ஓயாமல் ...ல் ஓத அவளைப் பிடித்திருந்த ...அவளை விட்டு ஓடியே விட்டது. பிறகு அவள் சுகமானாள்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் நாம் அலட்சியமாய் நினைக்கிற தர்ப்பைப்புல்லுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை நினைவுபடுத்தவே கூறினேன்.

'வினைதீர்க்கும் விருட்ச சாஸ்திரம்' என்ற இந்தப்புத்தகத்தில் பல அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. மரங்கள் பல தீமைகளை, தோஷங்களை, அகற்றவல்ல சக்தி படைத்தவை என்பதை ஆசிரியர், மதிப்பிற்குரிய பெரியவர் கண்ணன் பட்டாச்சார்யா அவர்கள் விவரமாய் விளக்கியிருக்கிறார்கள். தொழிலில் வெற்றிபெற, செய்யும் செயலில் மேன்மைபெற, நோயிலிருந்து விடுபட என்று அனைத்துப் பிரச்னைகளுக்கும் சில மரங்களைப் பயிரிடுவதன் மூலம் பயன் பெறலாம் என்கிறார்.

'அட்சரலட்சம்' கூறுவார்கள். அட்சரம் இல்லாவிட்டாலும், இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் லட்சம் பெறும். அவ்வளவு அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ●

வெளியீடு :
காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட்.,
2, ஜெயசங்கர் தெரு.
சென்னை - 600 033.
விலை ரூ.20/-

இரத்தல் ஈதல் இன்பமே!

'ஐயமிட்டு உண்' என்றும் 'பிச்சை புகினும் கற்கை நன்றே, கற்கை நன்றே' என்றும் 'இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே' என்றும் கூறும் நீதி நூல்கள் இரத்தல் தீது என்று கூறவில்லை.

ஆனால் 'நல்லாறு எனினும் கொளல் தீது' அதாவது யாசித்தல் நல்ல வழி என்றாலும் தீமையான தென்றும் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்" அதாவது உலகில் ஒருவன் யாசித்து தான் உயிர் வாழ வேண்டுமென்றிருந்தால் அவன் தலையில் ஆண்டவன் அவ்வாறு எழுதியிருந்தால்—அவ்வாறு எழுதிய இறைவன் பிச்சை எடுப்பவனைப் போல் எங்கும் அலைந்து கெடுவான் – என்றும் எரிந்து விழுந்து வசை பாடுகிறார் வள்ளுவர்.

மேலும்

'ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்ததுஇல்" (1066)

அதாவது தாகத்தில் தவித்து 'ம்மா—ம்மா' என்று தண்ணீருக்காகக் கதறும் பசுவிற்குத் தண்ணீர் வேண்டுமென்று யாசித்தாலும் கூட அது (நாவிற்கு) ஒருவர்க்கு இழிவானது என்று இரப்பதை இகழ்ந்து ஏசுகிறார்.

ஆனால் அதே வள்ளுவர்

'இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாவரின்" (1052)

அதாவது யாசகமாகக் கேட்கப்பட்ட பொருள் எளிதில், துன்பமில்லாமல் கிடைக்குமானால் அவ்வாறு இரத்தல் இன்பம் தருமென்றும்,

மு.துரைராசன்

'கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்பு மோரேஎர் உடைத்து' (1053)

அதாவது யாசிக்கப்பட்ட பொருளை ஒளிக்காத, மறைக்காத உள்ளம் உடையவர் மற்றும் 'இரந்தோர்க்கு ஈவதும் உடையார் கடன்' என்பதை உணர்பவர் முன்நின்று யாசிப்பது ஓர் அழகு என்று வலியுறுத்திப் பெருமையாகப் பேசுகிறார் வள்ளுவர்.

என்ன இது! முன்னுக்குப் பின் முரணாகப் பேசியுள்ளோமே என்று எண்ணிப் பார்க்கிறார். அ
மனக்கண்முன் காட்சிகள் தோ
மறைகின்றன.

கொடுப்பவர், இரப்பவ
அவமதித்து அவர் மீது இடி
விழுந்து, கடிந்து தகாதவற்
ஏசிப்பேசி பொறுமை இழந்து அவ
விரட்டும் சாதாரணமாக நடைபெ
காட்சி முதலில் தோன்றுகிறது. உட
அடுத்து ஒருவர் யாசிக்க வந்தவ
வரவேற்று, உபசரித்து யாசித்
கேட்ட பொருளை ஒளிக்காம
மறைக்காமல் மனமுவந்து, முகமலர்
அகங்குளிர்ந்து, மகிழ்
இனிமையாகப் பேசிக் கொடுக்
அபூர்வ காட்சி.

வெவ்வேறு விதமான காட்சி
முற்றிலும் மாறுவதைப் போல
வள்ளுவர் உள்ளமும் மாறுகிற

உடனே பிறக்கின்றன. பின்னர் கூ
ஈரடிகள், இரண்டும். அத்து
நிற்கவில்லை. அவர் யாச
கேட்கப்படும் பொருள் துன்பமி
எளிதாகக் கிடைக்கும் காட்சி அ
உள்ளத்தைத் துள்ளிக் குதி
வைக்கிறது. தொடர்ந்து இரத்த
இன்பங்களை இயம்புகிற
வரிசையாக.

"இரத்தலும் ஈதலே போலும்
கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு
(1054)

சொப்பனத்திலும் கூட உள்ள
ஒளித்து மறைத்து, இல்லை எ
கூறும் தன்மை இல்லாதவரிடத்
யாசிப்பது பிறர்க்குக் கொடுப்
போலாகும்.

கரப்பிடும்பை இல்லாரைக் காண
நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். (1056

...உள்ளதை ஒளித்து மறைக்கும் ...ன்பநிலை இல்லாதவரைக் கண்டால் ...ரப்பவருக்கு வறுமையால் வரும் ...ன்பங்கள் எல்லாம் ஒருமிக்க ஒழியும், ...ழியும், கெடும்.

...கழ்ந்தெள்ளாது ஈவாரைக்
காணின் மகிழ்ந்துள்ளம்
...ள்ளுள் உவப்பது உடைத்து (1057)

இகழ்ந்து ஏசிப் பேசாமல், கடிந்து விழாமல் இரப்பவர்க்கு இரந்து கேட்கப்படும் பொருளை மகிழ்ந்து கொடுப்பாரைக் கண்டாலே போதும், இரப்பவரின் உள்ளத்தில் உவகை' பொங்கும்.

முற்றிலும் மாறான ஒரு கருத்தைக் கூறிவிட்டு அக்கருத்தும் சரியானதே என்பதை நிரூபிக்க, வள்ளுவர் எடுத்துக் கூறும் அழுத்தமான, ஆணித்தரமான ஆதாரங்கள் மிகத் திருப்தியானவை என்பது வியப்பூட்டுகிறது.

பண்பு

பூவை அமுதன்



சிறப்பான நன்மைகளைப் போற்றும் நல்ல
சிந்தையினை வளர்ப்பதுவே செம்மைப் பண்பு!
மறுக்காமல் மற்றவரின் கொள்கை கேட்டு
மதிப்பிடு காண்பதுவே மதியின் ஏற்றம்!
துறக்காமல் முழுவதுமாய்த் தன்ன லத்தில்
தோய்ந்திடுவோர் வளமையினை வையம் தூற்றும்!
அறுக்காத நாவியங்கள் முதிர்ந்து கொட்டும்
அரிவாளைப் பின்எடுத்தால் என்ன கிட்டும்?

முதுமையதன் முத்திரையை மறைத்து விட்டால்
முகப்பொலிவுக் கூடுமெனப் போலித் தன்மை
எதுவுமதன் இயல்புவழி ஏற்கும் நோக்கே
இதயவழி! ஒப்பனைகள் நிலைப்ப தில்லை!
பொதுவாகப் போலிக்குக் கவர்ச்சி யுண்டு
போக்கிரியின் ஆர்ப்பரிப்பும் கூட்டம் சேர்க்கும்
மெதுவாகப் பேசிடுவோர் பயந்தோர் அல்லர்
மென்மைஉள்ள உரை.செயலால் நிலைக்கும் மேன்மை!

சரிவதற்குச் சந்தர்ப்பம் சரியாய் வாய்க்கச்
சபலத்தைக் கொல்வோன்தான் சால்பில் மேலோன்
உரிமைக்காய்ப் போராடித் தோல்வி கண்டும்
உடையாத உள்ளந்தான் உயர்ந்த வீரன்!
புரியாத தொன்றில்லை எனச்செ ருக்கிப்
பொய்ம்புகழாம் போதையினை விழைவான் பேதை!
நீர்த்திட்ட பாலுக்கு நிறத்தைக் கூட்டித்
தித்திப்பைச் சேர்த்ததனைப் பருகல் நன்றோ?

முறையாக முயன்றிட்டால் பெறுவா னாலும்
முன்னேற்றம் நிச்சயமாய்ச் சான்றாய் நிற்கும்
விரைவாக வளருமென உரக்கி டங்கில்
விதைவிட்டால் பயனின்றி விளைவ துண்டோ?
நிறைவான அறிவறிவும் நிரந்தின் மேன்மை
நிழல்தரும் எழில்வண்ணம் எதுவா னாலும்
கறைப்பவன்தான் சிற்பிகளின் சிறிய கல்லும்
கொண்டிடுமே பெரும்புகழைச் சிலையாய் நின்றே!

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள்
சங்கத்தின் கவியரங்கில் முதற்பரிசு பெற்ற கவிதை.



24.12.97 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் கவிமாமணி மதிவண்ணனுக்குத் தமிழக அரசின் முதல் பாரதி விருதை தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் வழங்குகிறார்.



கமலவேலன் நூல்

வெளியீட்டு விழா

அனைத்திந்திய தமிழ்
தாளர்கள் சங்கத்தின் நீண்ட
உறுப்பினரும், முப்பது ஆ
காலமாக நமது அமுதசுரபி இ
சிறுகதைகள் படைத்து
வருமான திரு. கமலவே
அவர்களின் நூல்கள் வெளி
விழா சிறப்பாகத் திண்டு
எம்.எம்.பி. சோலைநாடார் நி
மேனிலைப் பள்ளிக் கலையர
9.1.1998 ஆம் நாள் வெள்ளிக்கி
மாலை 5.00 மணிக்கு நடைபெ

விழாவிற்குப் பள்ளித் தாள
தேசிய நல்லாசிரியர் திரு.
இரத்தினபாண்டியன் அவ
தலைமை தாங்கினார்.

தமிழாகரர் முனைவர் திரு.
சுப்பிரமணியன் (இயக்குநர்,
தமிழ்க் கல்வி இயக்கம், தம
அவர்கள், பாரத இரத்தின
படிக்காத பாடம் - ஆகிய
நூல்களை வெளியிட்டார்
பள்ளித் தலைமை ஆசிரியர் தி
அதிசயநாதன் அவர்கள்
படிகளைப் பெற்றுக் கொண்ட

பதிப்புச் செம்மல், தமிழ
முனைவர் திரு. ச. மெய்ய
(மணிவாசகர் பதிப்பகம், சிதம்
அவர்கள் கமலவேலன் க
குடியரசுத் தலைவர் கே.
நாராயணன் - ஆகிய நூல்
வெளியிட்டார்கள். திண்டுக்கல்
என். கலைக் கல்லூரித் த
பேராசிரியர் திரு. ஆர். அழக
அவர்கள் முதற்படிகளைப் பெ
கொண்டார்கள்.

தமிழ்ச் சான்றோர்
படைப்பாளிகள் வாழ்த்
வழங்கிட விழா இ
நிறைவுற்றது.

இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு

'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' என்ற இந்த விருட்சத்திற்கு எது அல்லது யாரால் எப்போது என்னுள் அந்த வீரிய விதை விதைக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரியாவிடினும், சரியான மண்வளம், நீர், உரம் கிட்டியதில் இந்த விதை ஆரோக்கியமாக முளைத்து வளர்ந்து, கிளைகளைப் பரப்பிய மாபெரும் மரமாகத் தழைத்து விட்டதும், அதன் நிழல் தரும் சுகத்தையும், பூக்களின் மணத்தையும், கனிகளின் ருசியையும், மரத்தில் கூடுகட்டி வாழும் பறவைகளின் சங்கீதத்தையும் நான் மட்டும் அனுபவிக்க நினைக்காமல், என் நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ள விழைவதும் நிஜம்.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் எட்டாம் பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதினெட்டு மொழிகளிலிருந்தும் சில எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் வழியே அந்தந்த மாநில மக்களின் கலாசாரம், வரலாறு, இலக்கியத்தை மற்ற இந்தியர்களுக்கு அறிமுகப் படுத்துவதுதான் இத்திட்டத்தின் தலையாய நோக்கம். அந்தந்த பிராந்தியத்திலுள்ள மொழிகளில் ஆய்வு செய்து, தெற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு என்று நான்கு தொகுதிகளாக இறுதியில் வெளியிட எண்ணம்.

சொந்தக் கற்பனையில் ஈடுபட்டு, எழுதுவதைத் தொடர்ந்தால் கவனம் திசை திரும்பிவிடும் என்கிற நிலையில் இலக்கியம் மூலம் இந்திய இணைப்புத் திட்டத்தைத் துவக்கிய காலமாய் கதைகள் எழுதுவதை நிறுத்தி வைத்து இருக்கிறேன். இது குறித்து எனக்கு எந்த வருத்தமுமில்லை. ஏனென்றால் இந்த நான்கு வருஷங்களில், பத்து மொழிகளில் எழுத்தாளர்களைச் சந்தித்து பேட்டியெடுத்து, அந்தந்த மாநிலங்களில் முடிந்த வரையில் பயணித்து, மக்களை, அவரவர் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டிருப்பது எனக்குள் உண்டாக்கியிருக்கும் விழிப்புணர்வை எண்ணிப் பார்க்கையில் ஒருவித பிரமிப்புக்கு நான் வாஸ்தவமாக உள்ளாகிறேன். என்னபேறு செய்தேன் இத்தகைய மகத்தான அனுபவங்களைப் பெற என்று நெகிழ்ந்து போகிறேன். முடிந்த வரையில் எனக்குக் கிட்டிய அறிவை, ஞானத்தை, உணர்ச்சியை, சீக்கிரமே என் பாரத நாட்டு மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற பரபரப்பு என்னை ஆக்கிரமிப்பதை உணர்கிறேன்.

'சரி - இப்படி நான்கு தொகுதிகளை வெளியிடுவதன் மூலம் இந்திய ஒற்றுமை குறைவின்றி தழைத்துவிடும் என்று வாஸ்தவமாக நினைக்கிறாளா?' - என்ற சந்தேகம் பலருக்கு எழலாம். இல்லை. அப்படியொரு அசாதாரண எதிர்பார்ப்பு கண்டிப்பாக என்னிடம் இல்லை. 'போய்ச் சேர வேண்டிய தூரம் அதிகம். இதில் முதல் சில அடிகளை எடுத்து வைக்க இந்த முயற்சி உதவ வேண்டும்' - என்பதுதான் என் விருப்பம்.

(சிவசங்கரி எழுதிய "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்ற நூலின் என்னுரையிலிருந்து ...)



அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னையின் எழுத்தாளர் சந்திப்பு / கவியரங்க நிகழ்ச்சியில் கயல் தினகரன், கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன், சா.கணேசன், சங்கத் தலைவர் கலைமாமணி விக்கிரமன்.

வெள்ளை யானை

கவிஞர். முருகுசுந்தரம்

அறிமுக முன்னுரை

'அகல்யா' என்ற சொல்லுக்குக் 'குறைவற்ற அழகி' என்பது பொருள். வால்மீகி இராமாயணத்தில் இருந்து தான் அகலிகை வரலாறு தொடங்குகிறது. அது பல கவிஞர்கள், கலைஞர்களின் கைபட்டுப் புதுப்புதுப் பிறவி எடுத்துள்ளது. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரும், ச.து.சு. யோகியாரும் அகலிகையைக் காவியமாக்கினர்; புதுமைப்பித்தன் சிந்தனைக்குரிய சிறுகதையாக்கினார்; கோவை ஞானி புரட்சிகரமான புதுக்கவிதை ஆக்கினார்.

டாக்டர் ஃப்ராய்டின் ஆழ்மனத் தத்துவம் (Psycho-Analysis) உலகக்கலை, இலக்கியங்களை வெகுவாகப் பாதித்தது. அந்தப் பாதிப்பின் விளைவாக எழுந்தது தான் மீமெய்ம்மை இலக்கியம் (Surrealistic Literature) அகலிகையின் ஆழ்மனக் கூறுபாடுகளும் அவற்றின் விளைவுகளுமே இக்காப்பியத்தின் கரு.

Surrealism: A movement in French art and literature, from about 1919 on, that aimed at drawing upon the subconscious and escaping the control of reason or any preconceptions.

- Chamber's Dictionary

1

பாலகாண்டம்

கங்கைக் கரையில்
ஒரு மாலைப் பொழுது..
யாருமறியாமல்
புதுவெள்ளத்தில்
அவள் -
நிர்வாணமாகக் குளிப்பது போல்
செக்கர்வான் வெள்ளத்தில்
செங்கதிர்க் குளியல்...
பாதி உடம்பு தெரிய.



தர்ப்பை அறுக்கும்
சின்ன அரிவாளாக
வானில் ஒட்டிக் கொண்டிருந்த
மூன்றாம் பிறை,

அவள் கண்ணெதிரில் நழுவி
ஆற்று வெள்ளத்தில் விழ
ஆவலோடு
அதையே
பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.



பூப்படைந்த கணத்தில்
உள்ளத்திலும்
உடலிலும் ஏற்பட்ட
அதே அதிர்ச்சி கலந்த
குறுகுறுப்பு அவளுக்கு!

ஓமகுண்டத்தில்
குங்கிலியத்தைக்
கொட்டியது போல்
குப்பென்ற மணம்.




திரும்பிப்
பார்த்தாள்.
சுற்றியிருந்த
புதர்களும் மரங்களும்
பூத்துக் குலுங்கின.

எதிரில் ஒருபுள்ளி
கோடாகிக் கொம்பாகி
வெள்ளி ஓடமாக மாற,

நடுவில் -
வண்ணத்துப்பூச்சியின்
இறக்கையே பாயாக
நீண்ட சிப்பித் துடுப்பசைத்து,

உடம்புக்கும்
உடுப்புக்கும் வேறுபாடு தெரியாத
தேவ கன்னியர்
அவளை நோக்கி வந்தனர்.


இதற்கு முன் கேட்டிராத
ஒரு தேவகானம் -
ஒரு கந்தர்வ இசை வரவேற்க
அகலிகை -
அப்படகில் ஏறினாள்.



அனுபவித்திராத
ஓர் உணர்ச்சி வெள்ளம்

லையலையாகப் பரவி
ல்லிய அதிர்வுகளாக
வளுள் இறங்கியது.

டம்பே உயிராக மாற
த்தில் புலப்படாத
தா ஒன்று
வளையும்
ப்படகையும்
ழுத்துச் செல்வதை
ணர்ந்தாள்.



ணுக்கெட்டிய தூரத்தில்
டம்பெல்லாம் வாயாகப்
னகைக்கும் கந்தர்வன் ஒருவன்
வளைக்
காட்டி அழைக்கிறான்.
கு நெருங்க நெருங்க
வன் தொலைவில்
ாய்க் கொண்டே இருக்கிறான்
வள் -
டிய கைகளோடு நிற்கிறாள்.

ப்போது -
னையின் கழுத்துமணியாகக்
லுங்கிச் சிரிக்கும்
பாவனத்துச் சேடியர்...!
கலிகை!
 அகல்யா!'
றழைக்கும்
வர்கள் ஆரவாரக்குரல்!

கலிகை...
மனின்
டலைக் கனவுகள்
வன் கற்பனையையும் மீறித்
ளாக விழுந்த
தஷ்டி அதிசயம்

ம்பையர்
ளிவகுப்பின் மீது விழுந்த
நேரடித் தாக்குதல்.

தவசிகளின் சலனம்;
தபோவனத்தின்
கண்தாகம்.
பற்றற்றார் பற்று;

சுற்றியெரியும்
ஓமகுண்டத்தின் உச்சியில்
மெல்லிய அசைந்தாடும்
நீலநிறத் தீக்கொழுந்து.
மூவுலகிற்கும்
ஆவலூட்டும்
காம... தேனு.


அவள்தான் அகலிகை;
முக்தல முனிவரின்
முற்றிய தவப்பயன்.

ஆசிரமத்தைத் தேடி
எத்தனையோ
அதிதிகள் வருவதுண்டு.

இந்திரனின் ஐராவதத்தையும்
சந்திரனின் ஒளிவட்டத்தையும்
ததீசியின் கூன் முதுகையும்
துர்வாசரின் முரட்டுத் தாடியையும்
குழந்தையின்
குறுகுறுப்போடு பார்ப்பாள் அவள்.

காமதேனு
கற்பகத்தரு
சங்கநிதி
பதுமநிதி வரிசையில்
இடம்பெற வேண்டிய
ஏதோ ஒன்று,

தவறிப்போய்
இடம் மாறி
தபோவனப் புழுதியில்
கிடப்பதாக
இந்திரன் கணிப்பு.
அவன் மனத்திலும்
ஒரு சிணுக்கு...
அவிழ்க்க முடியாதபடி.



தோழிகளின்
ஆரவாரக் குரல்
அகல்யாவின்
பிரமையைக் கலைத்தது.

'அகலிகை!
உன் காதுக்குக்
கரும்பான சேதி!
நாளை -
உனக்குச் சுயம்வரம்'' -
என்றனர் தோழியர்.



2

சுயம்வர காண்டம்

முக்தல முனிவர்
ஆசிரமத்தில்
விழாக் கோலம்.

ஒருபக்கம்
இறுமாப்பு -
இந்திராதி தேவர்கள்.

மறுபக்கம்
பரபரப்பு -
மண்ணை ஆளும்
மாநில வேந்தர்கள்.

இன்னுமொரு பக்கம்
ஏக்கப்பெருமூச்சு -
காவி, குறுந்தாடியோடு
கமண்டலக் கூட்டம்.

ஆம்...
இதுவொரு
மும்முனைப் போட்டி!

சேடிகள் புடைசூழ
வசந்த விழாக் காணும்
மன்மதத் தேராக
அகலிகையின் அணிவகுப்பு

உடனே -
அந்த அதிசய மலர்மீது
ஆயிரம் வண்டுகள்
மொய்த்தன.

அவள் கண்வண்டுகளோ
ஆவலோடு
தேவராஜன் பக்கம்.



"உலகை
யார் முதலில்
வலம் வருகின்றாரோ
அவருக்கே உரியவள்
எனது -
தளிர்மேனித்
தங்கப் பதக்கம்" - என்று
முக்தல முனிவன்
முன்னறிவிப்புச் செய்தான்.

ஒரு பெண்ணின்
காதல் சுதந்தரம்
பந்தயப் பொருளாக
மாற்றப் பட்டது.

வெள்ளை யானை மீதேறி
வேகமாகப் பறந்தான் இந்திரன்.

பசுவை வலம்வந்து
பரிசுக்குக் கைநீட்டினான்
கௌதம முனிவன்.

பதக்கத்தின்
விருப்பத்தைக் கேட்டா
பரிசளிப்பு நடைபெறுகிறது?
ஓட்டப்பந்தயங்களை
ஒழுங்காக வென்றவர்
எவருமில்லை.

அன்று -
கணபதி,



*ஆர்கொனாட்ஸ்.
இன்று
கௌதமன்.

குறுக்கு வழியில் வென்ற
இந்தப்
பெருந்தாடிப் **பென் ஜான்சனைத்
தகுதி நீக்கம் செய்ய
யாருக்கும் துணிச்சல் இல்லை.

தந்தை தாரை வார்க்கத்
தலை நிமிர்ந்த
கோலமயில் எதிரில்,
தலைவிரித்துக்
குலைசரிந்த ஈந்தாகச்
சடாமுடியோடு
தாடிக் கௌதமன்.

அவன் அடிமனத்தில்
அவிழ்க்க முடியாத
அநேக முடிச்சுகள்!

■✻■

3

ஆரண்ய காண்டம்

சேவர்க் கோழிகளின்
ஓசையைத் தவிர
வேறெதுவும் கேட்காத
அடக்கமான அமைதி...

ஒதுக்கக் கைநீட்டும்
அடர்த்தியான கருக்கிருட்டு...

நடிசையின் மாடத்தில்
அணைந்து விடுமோ என்று
அஞ்சும்படி
மெலிதாக எரியும்
அகல் விளக்கு.



அவன் மார்க்கச்சைபோல்
போதியும் போதாதது மான,
மான்தோல் விரித்த
மூங்கில் கட்டில்.

அதன் மீது
அண்டை வீட்டு
ரிஷிபத்தினிகள்
கொண்டு வந்து சிதறிய
காட்டுப் பூக்கள்.

அவளே பாரமாகி
அவளையே அழுத்தும்
பிரமை!

கூரையில்
ஒரு சிலந்திக் கூடு.
அவள் மனச்சிக்கல்போல்
அதுவும்
பெரிதாகிப் படர,
அதன் நடுவில்
ஒட்டிக் கொண்டிருந்த
சில்ந்தியும்
உருண்டு திரண்டு
ஒரு ராட்சதச் சிலந்தியாக வளர
தான் ஓர் ஈயாக மாறி
வலையில் சிக்கிக் கொள்ள,

சிலந்தியின் வளைந்த
இடுக்கிப் பற்கள்
தன்னை நெருங்கிவர
அவள் -
பரிதாபமான இசிப்போடு கதறி
மயங்கி விழுகிறாள்.

சில்லென்று
குளிர்ந்த நீர்
முகத்தில் விழக்
கண் திறந்து



பார்க்கிறாள் அகல்யா.
அவள் முகத்தின் அருகில்
கௌதமன் முகம்.
ஆம்...
இன்று அவர்களுக்கு
முதலிரவு!

○●○

உடம்பு வலியும்
அசதியும் தாலாட்டக்
காலை நேரக்
கங்கை வெள்ளத்தில்
நீண்ட நேரம்
கண்மூடிக் கிடந்தாள்
அகல்யா.


கொள்ளிக் கட்டையைக்
கீழே இழுத்ததும்
கொதிநிலை
குறைவது போல
கொஞ்சங் கொஞ்சமாக
அவளும். -
அமைதி நிலைக்கு வந்தாள்

கதிரவன்
கிழக்கில் கண்விழித்ததும்,
பனி மூட்டத்தோடு
இவள்
மனமூட்டமும் விலகியது.

ரிஷிபத்தினியின்
கடமைகள்
குலுக்கிப்போட்ட சோழிகளா
மல்லாந்து விழுந்து
இவளெதிரில் சிரித்தன.

அவசர அவசரமாய்ப்
பூசைக்கு வேண்டிய
சமித்தும் தர்ப்பையும்
மலரும்
சேகரம் செய்து கொண்டு,

உடம்போடு ஒட்டிய
ஈரப் புடைவையின் சரசரப்பு



* அட்லாண்டா என்ற அதிவேக வீராங்கனையைத் தங்க ஆப்பிள்களை வீசி ஏமாற்றி, ஓட்டப்பந்தயத்தில் வென்றவன்.


** ஒலிம்பிக்கில் போதைப் பொருளை உட்கொண்டு, ஓட்டப்பந்தயத்தில் வென்று, பின் தகுதி நீக்கம் செய்யப்பட்டவன்.

காலைத் தபோவனத்தின்
கவனத்தைக் கலைக்க,


காயத்ரி மந்திரத்தை
முணுமுணுத்த வண்ணம்
நடந்து வந்தாள் அகலிகை.

காலைக் கடன்களையும்
கதிரவன் வணக்கத்தையும்
முடித்துக் கொண்டு
கமண்டல தாரியாய்ப்
பர்ணசாலையின் முகப்பில்
திரிவிக்கிரமனைப்போல் நின்ற
கௌதமன் முன்னால்
மண்டியிட்டு வணங்கினாள்.

'தீர்க்க சுமங்கலி பவ!'
என்று கௌதமன் வாழ்த்த
'என் பாக்கியம் சாமி'
என்று
பணிவோடு சொன்னாள் அகலிகை.



ஓமகுண்டம்
நாம சங்கீர்த்தனம்
அதிதி உபசாரம்
ஆன்மிக விசாரம்
கந்தமூலம்
காய்கனி கிழங்கு... என்று
அகல்யாவின்
அன்றாட வாழ்க்கை
ஓடிக் கொண்டிருந்தது.



அவளது மனப் பூ மட்டும்
மகிழ்ச்சி மணமிழந்து
நாளும்... நாளும்
வாடிக் கொண்டிருந்தது.


அத்தி பூத்தாற்போல்
ஏதேனும் ஓர் இரவில்
அவளுடைய
விருப்பு வெறுப்புகளைப்
பொருட்படுத்தாமல்
அவர்கள் உடல்கள்
சங்கமிப்ப துண்டு.

காமவேள்வியில்
கௌதமன் சொரியும்
அவிர்ப்பாகத்தை
அவளும் -
அமைதியாக ஏற்றுக் கொள்வாள்.

■*■


4

யுத்த காண்டம்



ஆசிரமப் பணியில்
தன்னை
முழுமையாகக்
கரைத்துக் கொண்ட
அகலிகையின் உள்ளம்
பகலில்
சலனமற்ற தெளிந்த நீரோடை.

ஆனால்....
இருள் கவிந்தபிறகு
அவள் அடிமனத்தில்
நிஜம் விழித்துக் கொண்டு
ஆழத்தில் அமுக்கப்பட்ட
சுரைக்குடுவையாக
மேலே எம்பிக் குதிக்கும்.
சில சமயம்
பாலாகக் கொதித்துப்
பொங்கி வழியும்.



காற்று மண்டலத்தைக்
கடந்தவன்
கனமிழந்து தவிப்பது போல,
அவளுக்குத்
தன்னைமிழந்த தவிப்பு.

●●●

ஒருநாள் -
காட்டில்
சமித்துகள்
பொறுக்கிக் கொண்டிருந்தபோது
வானத்தில்
சிறகு முளைத்த
வெள்ளை யானையொன்று
பறந்து வரக் கண்டாள்.

கவையாகப் பிரிந்த
நவமணிப் பூணிழைத்த
நான்கு கொம்புகள்.
ஒவ்வோர் அசைவிலும்
கம்பீரமான
ஆண்மையின் மதர்ப்பு.
அவளையும் அறியாமல்
அகலிகை
ஒரு பிடியாக*
மாறிக் கொண்டிருந்தாள்.

கவுள்களில்
நாணம் வழியக்
குனிந்த தலையோடு
குடைராட்டினமாகத்
தன்னைத்தானே சுற்றிக் கெ
வெள்ளை யானை
அவளைச் சுற்றிப் பறந்து

**கவந்தன் கால்களாக
நெடிதுயர்ந்த மரச்சந்தில்
அவள் மாட்டிக் கொள்ள,
வெள்ளைக் களிறு
அவள் மீது
வேகமாகப் பாய்ந்து
பின்னால் நெருக்கியது.

அவஸ்தை தாளாமல்
அகலிகைப்பிடி அலறியது
அருகில் படுத்திருந்த கெ
அவளைத் தட்டியெழுப்ப
அச்சத்தோடு
அவன்மீது
அப்பிக் கொண்டாள்.

"என்ன?"
என்றான் கௌதமன்.
"யானை!
வெள்...ளானை!"
என்று குழறினாள் அகலி

---

* பிடி – பெண்யானை

** வயிற்றில் தலையும், நீண்ட கை
கால்களும் கொண்ட
அரக்கன்.

"எங்கே?"
என்றான் அவன்.

"பின்னால்!"
என்றாள் இவள்.

குழந்தையாக அணைத்துத்
தோளில்
தட்டிக் கொடுத்தான் அவன்.

அவன் தாடி
மூக்கிலும் வாயிலும் நுழையத்
திரும்பிப் படுத்துக் கொண்டாள்
இவள்!

○●○

அன்றிலிருந்து
சுகம் கலந்த
*ஓர் யானைப்பயம்
அவளைத்
துரத்திக் கொண்டிருந்தது.



அவளுக்குள்ளேயே
அடிக்கடி
யானைப் பிளிறல்.

காட்டுக்குள்
யானைக் காலடியில்
சுள்ளிகள் முறியும் சத்தம்.

வானத்தில்
வெள்ளிமேகங்கள்
வெள்ளை யானைகளாக
ஊர்வலம்.


இரவில்,
கௌதமன்
நெருங்கும் போதெல்லாம்
தும்பிக்கைப் பயம்.

ஒருநாள் -
மாலை மயங்கும் நேரம்.

* Elephant Phobia

இணை சேர்ந்த
இரண்டு தும்பிகள்
கை கோத்தபடி
*'பாலே' நடனமாடுவதுபோல்
எதிரில் பறக்க,

அந்த வேடிக்கையைக்
கண் கொட்டாமல்
கண்டு களித்த அகலிகை,
உள்ளத்தில்
பிள்ளைப்பூச்சி ஊர
உடம்பைக்
குப்புறக் கிடத்திப்
படுத்துறங்குவ தாகப்
பாவனை செய்தாள்.



இமைகள் மூடிய
பூரண விழிப்பு!
உள்ளத்தையும் உடலையும்
சுட்டெரிக்கும் யானைத்தீ!

யாரோ
மேலே விழுந்து
தட்டியெழுப்புவது போல,
வெளியே
கொண்டைச் சேவலின் கூவல்.

கௌதமன் எழுந்து
காலைக்கடன் முடிக்கக்
கங்கைக் கரைக்குப்
புறப்பட்டான்.
ஆனால் -
சென்ற சிறிது நேரத்தில்
திரும்பி வந்தான்.

வேதனை விழிப்பில்
புரண்டு கொண்டிருந்த
அகலிகை
வியப்போடு பார்த்தாள்.

"அகல்யா!
கரையுடைக்கும் வெள்ளம்
கால நேரம் பார்ப்பதில்லை!"

* ஒருவகை ருசிய நடனம்

என்று சொல்லி
அவளைத் தொட்டான் அவன்.

கணவன் கைபட்டால்
கட்டையாகக் கிடக்கும்
அவளுடம்பு
இன்று -
நாணை வளைத்துவிட்ட
வில்லாக
அதிர்ந்து நிமிர்ந்தது.

முறுக்கேற்றப்பட்ட
வீணை நரம்புகள் மீது,
விரல்
தவறி விழும்போது
ஏற்படும் அபசுரமாக
அவளுக்குள் கொந்தளிப்பு.

வந்த அந்தக் 'கௌதமன்'
மெதுவாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு....!
இடியுடன் கூடிய மின்வெட்டாக
அவள் -
நினைவில் பளிச்சிட்டது,

'இந்திரன்!
ஐராவதத்தை
ஆரோகணிக்கும்
இந்திரன்...!
அமரர் தலைவனே
என்னைத் தேடி...!!'




அவள் -
பேரழகுப் பெருமிதம்
கொக்கரித்து மேலெழும்ப,
நீண்ட நேரம்
புகைந்து கொண்டிருந்த
அவள் ஓமகுண்டத்தில்
இந்திரன் -
நெய்யாக இறங்கினான்!
குப்பென்ற ஜுவாலை!

தான் ஓர்
அருவியாக மாறி,


பாறையில் மோதி,
சுழலில் சிக்கி,
கற்களைப் புரட்டிக் கொண்டு
அதல பாதாளத்தில்
தலைகுப்புற விழுவதாகவும்,

கைதேர்ந்த போர்வீரன்
தன்மீது சவாரி செய்யக்,
கடிவாளம் இல்லாத குதிரையாய்க்
காற்றெனப் பறப்பதாகவும்,
அவள் உணர்ந்தாள்.



கடல் வயிற்றி லிருந்து
புறப்பட்ட அலை
நுரைத்துப் பொங்கிக் கிளம்பி
மலையாக உருண்டு
கரையில் -
மோதிமோதி உடைவதைப் போல
அவளுக்குள்ளும்
அடுக்கடுக்காய்
ஆனந்த அலைகள்!

மழை ஓய்ந்து
சிறு தூறலாக...
பர்ணசாலைக்கு வெளியே
பாதக் குறட்டுச் சத்தம்.



நெருப்புச் சூடு
பட்டது போல
நிலைக்குத் திரும்பினர்
இருவரும்!

'வானவர் தலைவா!
வந்து விட்டார் கௌதமர்;
தப்பிப் பிழைத்துக் கொள்!' - என்று
தவித்தாள் அகலிகை.

யானையாக வந்தவன்
பூனையாகிப் புறப்பட்டான்.

மலையுச்சியிலிருந்து
வேகமாகப்
புரண்டு உருண்டுவரும்
பாறாங் கல்லாக,
இறங்கி யோடி வரும்
எரிமலைக் குழம்பாக
எதிரில் வந்தான் கௌதமன்!

"எந்த உறுப்பின்
தினவுக்கு
அடிமையானாயோ,
அந்த உறுப்பை
இழப்பதோடு,
எதைத்தேடி வந்தாயோ
அதுவே உன் உடம்பாக...!" என்று
இந்திரனைச் சபித்தான்.

வச்சிரப் படையொடுங்கி
வானவர் கோன்
கொச்சைப் பட்டு நின்றான்.
அவன் ஆண்ட
தேவருலகம் நொறுங்கி
அவன் தலைமீதே
விழுந்த அதிர்ச்சி.

எல்லா உலகின் கண்கள்
அவனுடைய
நிர்வாணக் கோலத்தை
உற்றுப் பார்ப்பதைக் க
கூசி நடுங்கினான்.

அக்கினிக் கண்களால்
அகலிகையைப் பார்த்து
"வாயு ப்க்ஷா நிராஹாரா
தப்யந்தீ பஸ்மசாயினி"
தொடங்கினான்
கௌதமன்.

அகலிகை
குறுக்கிட்டாள்.

"சுவாமி!
கொஞ்சம் பொறுங்கள்!
என் தவறு
இச்சை கலந்த
அனிச்சைச் செயல்:
திருமணம் ஆன
நாளிலிருந்து
என்னையும் அறியாமல்
இரண்டு வாழ்க்கை
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
இந்த விலாங்கு வாழ்க்கை
எனக்கு வேண்டாம்.

உங்கள் கையில்
இதுநாள் வரை
நான் கல்தானே?
இப்போதும்
நான் கல்லாக
அனுக்கிரகம் செய்யுங்கள்"
என்று வேண்டினாள்.
அகலிகை
கல்லானாள்!

■❋■

5

உத்தர காண்டம்

'மரத்துப்போன என்னுள்
மீண்டும்
உணர்ச்சிக் கீற்றுகள்!

என் தலைமீதிருப்பது
யாருடைட பாதம்?
என் கல்நித்திரை
ஏன் கலைகிறது?

திருவடிகளாலே
என்னை
ஆசீர்வதிக்கும்
இத் தேவமகன் யார்?
என் சாபத்தைக் கரைக்கும்
இந்த வரதன் யார்?

இந்த
அமுதன் தீண்டியதும்
மீண்டும் என்
இதயம் துடிக்கிறது!
நரம்பு அதிர்கிறது!
நாளங்கள்
குருதியோட்டத்தால்
விம்முகின்றனவே!'' - என்று
புரியாமல்
வியக்கிறாள் அகலிகை.


'தீர்க்க சுமங்கலிபவ!'
என்ற வாழ்த்தொலி கேட்டுத்
திடுக்கிட்டுத்
திரும்புகிறாள் அகலிகை.



படத்தைச் சுருக்கிய
நல்ல பாம்பாய்ச்
சினத்தை மறைத்த
விசுவாமித்திரன்...!

தவக்கோலத்தைக் கண்டவுடன்
காய்ச்சிய இரும்பை
மிதித்துவிட்ட மிரட்சி அவளுக்கு.

அவளுக்குள்
விட்டு விட்டு அலறும்
குழந்தையின் குரல்.




கசங்கிய மலராகக்
கைக்குழந்தையை ஏந்திய
மேனகை,
ஏக்கத்தோடு பார்க்க,
கடற்குதிரையாக
முகத்தைத் திரும்பிக் கொண்ட
விசுவாமித்திர முனி
அவள் நெஞ்சை
அடைத்துக் கொண்டு நின்றான்.

'தாடிக்குக் கொடுக்கும்
மரியாதையைக் கூட
தர்மபத்தினிக்குக் கொடுக்காத
தவசிரேஷ்டர்கள்' - என்று
அவள் வாய் முணு முணுத்தது.

என்றாலும்
முனிவர் முன்னால்
மண்டியிட்டு வணங்கினாள்.
"அகல்யா!
உனக்குச்
சாபவி மோசனம்
வந்து விட்டது.

உன் கற்பின் மீது
படிந்திருந்த களங்கம்
காலத்தால்
காய்ந்து உதிர்ந்து விட்டது.
நீ -
மீண்டும்
தளிர்க்கப் போகிறாய்"
என்றார் விசுவாமித்திரர்.

அகல்யாவின்
உதட்டில்
உலர்ந்த புன்னகை.



"நான் -
என் வாழ்நாளில்
ஒரே ஓர்
ஆடவனைத்தான்
உள்ளத்தால் வரித்து
ஆராதனை செய்கிறேன்.
என் கற்பின்மீது
களங்கம் படிவது
எப்படி சுவாமி?" என்று
அமைதியாக....
ஆனால்.... உறுதியாகக்
கேட்டாள் அகலிகை.

'யார் அந்த ஆடவன்?"
என்றார் முனிவர்.

'இந்திரன்' -
என்றாள் அகலிகை.

'தேவர் முனிவர் சாட்சியாக
நீ கைப்பிடித்த கௌதமன் ?'-
பதற்றத்தோடு கேட்டார்
விசுவாமித்திரர்.

கைப்பிடித்தவர்
கௌதமர்!
ான் வெறும் தர்ப்பை;
இரவில் அவர்
துங்கி மூட்டும்
மகுண்டத்தில்
டித்துப் போடப்படும்
மித்து.

ான் அதில்
டிக்கடி
ாம்பலாகிக் கொண்டிருந்தேன்
ன்பதுதான் உண்மை.

ன்னைப் போன்ற பெண்கள்
றிப்பதற்கு முன்
ாய்திறக்கும் மலர்கள்.
றித்தபின்
ணத்திற்குச் சூட்டினாலும்
மனவித்து மரிப்பவர்கள்.

தங்கள்
பாத தூளியைப்பற்றிப்
பெருமைப்படும்
முனி சிரேஷ்டர்கள்,
பர்ணசாலைப் படிகளைக்
கேட்டு விட்டா மிதிக்கிறார்கள்?"
என்றுகுமுறினாள் அகலிகை.

"அகல்யா!
கௌதமன் உன்னை
மீண்டும்
ஏற்றுக் கொள்ளத்
தயாராமிருக்கிறான்"
என்றார் விசுவாமித்திரர்.

"என்னைப் பொருத்தவரையில்
அது சோர வாழ்க்கை சுவாமி!
மீண்டும்,
அது எனக்கு வேண்டாம்"
என்றாள் அகலிகை.

"அகல்யா!
உன் முடிவுதான் என்ன?"
என்றார் விசுவாமித்திரர்.

"சுவாமி!
நீர் சர்வ வல்லமை படைத்தவர்.
என்னை -
ஒரு பெண்யானை யாக்கி

அமராபதியின்
கற்பகச் சோலையில்
விட்டு விடுங்கள்!"
என்று கூறிவிட்டுத்
தலைகுனிந்தாள் அகலிகை.

❀❀❀



பத்ரகாளியா பலியிடக் கேட்டாள்?

கவிஞர் இளம்பூரணன்

ஆருயிரைத் தந்துபுரந்(து) அருள்பொழியும்
    காளித்தாய் அருள்கள் மாறிச்
சிருயர்தன் சந்நிதியில் சிற்றுயிரைப்
    பலியிடவே செப்பல் உண்டோ!
தெருமறி வில்லாதார் தெய்வமதன்
    பேர்சொல்லிப் பலிகள் இட்டுப்
பாரறியத் தின்னுமிந்தப் பாவமிரு
    பழிச்செயல்தான் மாறி டாதோ!

மணப்பாறைக் கருகினிலே வயங்குமட்டப்
    பாறையிலே பத்ர காளி
அணைதருசீர்க் கோயிலதன் சந்நிதியில்
    அருவருக்கும் நிலையில் ஆங்கே
பணைத்துயர்ந்த சிற்றுயிர்கள் பதைபதைக்கப்
    பலியிட்டுத் தம்வ யிற்றில்
திணித்து மகிழ்ந் திட்டார்தம் தீயசெயல்
    கேட்டுமனம் திகைப்பர் நல்லோர்.

மாடுகள் ஆ யிரம் அதனுக் கைந்துமடங்(கு)
    ஆடுகளாம் கோழி மட்டும்
நாடிடில்நா லாயிரமாம் அவ்வளவும்
    நாடறியப் பத்ர காளி
பாடுயரும் சந்நிதியில் பதைபதைக்கப்
    பலியிட்டுப் பாவம் எண்ணார்
வீடுகளில் இறைச்சியினை வேகவைத்துத்
    தின்றனராம் விரைவில் தீயர்.

கன்றிழந்த ஆன்சொரிந்த கண்ணீரைக்
    கண்டுருகிக் கண்ணே போன்ற
தன்மகனைத் தேர்க்காலில் மடிவித்த
    மனுவாண்ட தமிழர் நாட்டில்
இன்றுதெய்வப் பேராலே ஈனமிகும்
    உயிர்க்கொலைகள் இவைபோல் நாளும்
நின்றுயர்தல் நாகரிகம் நிலைகுலையச்
    செயுமன்றோ! நினைப்பீர் அன்பீர்!

விருந்தாளி

ஜன்னலில் கூடுதலாக ஒரு தலை தோன்றியதும் பணிக்கர் உஷாரானார்.

ஓடிக்கொண்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை ஓரக் கண்ணால் கவனித்தார். சத்தமிடாமல் எழுந்தார். சுவரோடு சுவராக ஒட்டி, அப்படியே பம்மிப் பம்மி நடந்து ... நடந்து .. ஜன்னலருகில் வந்ததும் அந்தத் தலையை - கேசத்தை - கொத்தாக அள்ளினார் ... உலுக்கினார்.

" .. ஏடா ... உங்க அப்பன் வீட்டு டி.வி.யா ...? ஒசியிலே பார்க்க? எடுறா ரூபாயை ... பட்டி ..."

... படபடவென்று பொரிந்து தள்ளினார். வசவுகள். பிடிபட்டவன் இன்னும் திகைப்பிலிருந்து விடுபட வில்லை. .. முகம் வேதனையைக் காட்டிற்று, கண்களில் நீர் தளும்ப, தலையை விடுவித்துக் கொள்ள எல்லா முயற்சிகளையும் செய்தான். ... ஒரு வார்த்தை வாயிலிருந்து வரவில்லை ..

" ... யார்றா இவன் ..? .. புதுசா இருக்கு ..?" வெளியில் நின்றிருந்த மற்றவனிடம் கேட்டார்.

" .. எங்க பக்கம் தான் ... சாமி .. மதுரை .. இன்னிக்கு காலையிலேதான் ஊரிலேர்ந்து வந்திருக்கான் .. ரெண்டு மூணு நாள் எங்கேயாவது வேலை வெட்டி செஞ்சாப் பணம் கிடைக்கும் .. கிட்டேயிருந்து, நானே வாங்கி உங்ககிட்டே கொண்டு வந்து கொடுத்துடறேன் .. நம்ப பையன் .. பாவம் .. சின்ன வயசு .. ஏதோ ஆசைப்பட்டு சினிமா பார்க்க வந்துட்டான் .. ச்சு .. போயிட்டுப் போறான் .." கூட இருந்தவன் அவனுக்காகக் கெஞ்சினான்.

" .. எலே .. காசில்லாதவனுக்கு எதுக்குடா சினிமா ஆசை ..? அப்படியாவது ஜன்னல் வழியா பார்க்கணுமா என்ன ..? தியேட்டர்ல கொடுக்கிறதுலே நாலிலே ஒண்ணுதானே நான் வாங்கறேன்? அதற்குக் கூட விதியத்துப் போனா . போடா இங்கேயிருந்து .."

சிரமப்பட்டு அவன் தன் தலையை விடுவித்துக் கொண்டான். .. ஒருமுறை பணிக்கரை ஏற இறங்கப் பார்த்தான் .. முகத்தில் கோபம் இருந்தது .. ஆற்றாமையும் தெரிந்தது. .. சற்று நகர்ந்து சென்று .. லுங்கியை ஒதுக்கி .. பையில் கை விட்டுத் துழாவினான் .. கையில் கிடைத்த சில்லறையை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

ஒரு வெற்றிப் புன்னகையோடு பணிக்கர் வந்து உட்கார்ந்தார். முகத்தில் திருப்தி பரவியிருந்தது. கண்களில் ஒரு கர்வம் பளபளத்தது. அந்தக் கர்வத்தோடு ஜன்னல் முகங்களைப் பார்த்தார் .. ம் .. 'உங்களைப் போல் ஆயிரம் ஆயிரம் பேருக்கு நாங்கள் புகலிடம் தந்திருக்கிறோம்' என்றது அந்தப் புன்னகை .. கர்வம் .. இங்கே இருக்கிற நீர்வளம் உங்க ஊரில் இருக்கிறதா..? மண்வளம் இருக்கிறதா ..? செழிப்பு இருக்கிறதா ..? எங்களை அண்டிப் பிழைக்க வந்தால் ..? நாங்கள் வைப்பதுதான் சட்டம் .. தெரிகிறதா?

நெஞ்சமெல்லாம் பூரிப்பாக மீண்டும் சினிமா பார்க்கத் தொடங்கினார்.

காலையில் எழுந்து
துலக்கியபடி தோட்டத்தைச்
வந்தவர், சட்டென்று மூக்
பொத்திக் கொண்டார். இது எ
நாற்றம் ..? சகிக்க முடியாமல்
இரண்டு நாள் மழையில் ஏதா
அடைத்துக் கொண்டு விட்டதா

தெருவுக்கு வந்தார் .. சற்று நி
பார்த்தார். தொலைவில், மடி
கட்டிய வேட்டியும், வெற்றுடம்பு
ஒருவன் வந்து கொண்டிருந்தா
முதல் பார்வையிலேயே வெளி
காரன் என்பது புரிந்தது.

"..ஏடோ .. இவ்விடம் வரு.."

கை தட்டினார்.. கூப்பிட்
அவன் வரும் வரை காத்திருந்த

"..இந்த.. செப்டிக் டாங்க்..
நாற்றமா நாறுது.. கொஞ்சம் ப
சுத்தம் பண்ணிக் கொடுத்துப்
போ.."

" வேறே வேலை இருக்கு
இன்னிக்கு முடியாது.. கஷ்டம்.."

"அது என்ன அவ்வளவு அ
வேலை..? ஏண்டா.. நீ எந்த ஊ
தமிழ்நாடா..? பொழைக்க
இடத்திலே நாலு பேர் வே
சொன்னா, செய்யத்தான் வே
முடியாதுன்னு சொல்லக்கூடாது..

"..வேற இடத்திலே ஒத்துக்கி
இருக்கேனே.."

"..அதுக்காக இது இப்பபடி
நாறிக்கிட்டுதான் கிடக்கணுமா..?"

ஜி.நாராயண

"..அவங்க.. தினமும் வேலை
ாடுக்கிறவங்க.. நாளைக்
லையிலே வர்றேன்.."

..அதுவரைக்கும் இந்த நாற்றத்தை
ா பொறுத்துக்கிட்டுத் தான்
க்கணுமா..? தம்பி .. ரெண்டு
லே என் பொண்ணு மாப்பிள்ளை
வியூரிலேர்ந்து வராங்க..
ணாலேதான்.." குரல் கொஞ்சம்
ங்கியது. "ச்சு.. நீ.. எங்கே
யிருக்கே..?"

"..பக்கத்திலேதான்.. கொச்சின்
ல்வே லைனோட ஒட்டின..
ட்டகையிலேதான்.."

"..என்னோட கொட்டகையிலா
க்கே..? .. பார்த்த மாதிரி
யலையே..?"

"இல்லைங்க.. வேற.."

அவன் யோசிப்பது தெரிந்தது.. ணிக்கரை மறுத்து விட்டுப் கமுடியும் என்று தோன்றவில்லை.. முடிவுக்கு வந்து, முண்டாசை கக் கட்டினான்.. கடப்பாரை டுத்து நெம்பி.. கான்கிரீட் கைகளை அகற்றி.. 'குப்'பென்று த்த நாற்றத்தைப் போக்க ஒரு யைப் பற்ற வைத்து இழுத்து தான்..

இரண்டு மணி நேரம் கழித்து ணிக்கர் வந்தபோது அவன் த்தம் வழிய நின்றிருந்தான்.. ாயடியில் உட்கார்ந்து குளித்தான்.. ணை எடுத்து உடம்பை நன்கு த்துக் கொண்டான்.. ஈரத்துண்டின் னைகளைத் தலைக்கு மேலே கிப் பிடித்து.. மறுமுனைகளைக் தில் 'படபட'வென்று த்துக்கொள்ள.. காயப்போட்டபடி திருந்தான்.

"..இந்தா.."

"..என்னங்க இது.. பத்து ருவா டுக்கிறீங்க..? ..போட்டுக் ங்க."

"..எல்லாம் போதும்.. போடா.."

"..இதுவே உங்க நாட்டுக்காரனா இருந்தா.. இப்படி பேசமுடியுமா..? அம்பது ருபாய்க்குக் கொறஞ்சு வாங்குவானா அவன்? ஏதாவது பேசினா... யூனியன் கிட்டே போயிருப்பான்.. நாங்க ஏழை பாழைங்கன்னா.. என்ன வேணா கொடுக்கிறதா..? பேசறதா..?"

"..ஏய்.. சட்டம் பேசுறியா? கொடுக்கிறதை வாங்கிக்க.. பிழைக்க வந்த பயலுக்கு இதற்கு மேலே என்ன..?"

"..இது நியாயமா..?"

"நியாயம்தான்..."

பணிக்கரை அவன் பார்த்த பார்வையில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.. "..ச்சு.. வேண்டாம்.. நீயே வைச்சுக்க.. பேரப்பிள்ளைக்கு மிட்டாய் வாங்கிக் கொடு.."

மண்வெட்டியைத் தோளில் சாய்த்தபடி, அவன் 'விடுவிடு'வென்று நடக்க முனைந்தான். ஒரு கணம் அவர் செயலற்றுப் போனார்.. அவன் ஏதாவது கெஞ்சுவான்.. குத்துகிற மாதிரி இன்னும் ஏதாவது சொல்லலாம் என்று இவர் நினைத் திருந்தார்.. "..வேண்டாமா..? ..போடா.. போ.. " என்று இங்கிருந்தே கத்தினார்.. "இந்தப் பயல்களுக்கு எது இருக்கோ இல்லையோ.. திமிர் மட்டும் நிறைய இருக்கு.."

*வீ*ட்டில் புதிய கலகலப்பு வந்துவிட்டது. மஞ்சுவும் அவள் கணவனும் உள்ளே நுழைந்ததும், இந்தச் சிரிப்பும் கும்மாளமும் கூடவே வந்து விட்டன.

எத்தனை நாள்களுக்குப் பிறகு இந்தக் குதூகலம்! மகிழ்ச்சி! கல்யாணமான கையோடு கணவ னோடு போனவள், மூன்று வருடம் கழித்து இப்பொழுதுதான் பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள். பெட்டி பெட்டியாக துணிமணிகள். சாமான்கள்.. இரண்டுமாதமோ.. மூன்று மாதமோ..? திரும்பவும் அவள் கிளம்பிப் போய்விடுவாள்.. அப்புறம் வெறுமைதான்..

"சாமி.."

"ஆறானு.." வெளியில் வந்தார். வாசலில் பரிச்சயமான முகம். தமிழரசி நின்று கொண்டிருந்தாள். "எங்கே வந்தே..?" என்று இவர் முகம் கேட்டது.

"ரேஷன் கார்டுக்கு மனு எழுதிக் கொடுத்திருக்கேன்.. உங்க கொட்டகை யில்தான் குடியிருக்கேன்கிறதுக்கு அத்தாட்சி வேணும்னு கேட்கிறாங்க.. பணிக்கர் ஐயாகிட்ட கடுதாசு வாங்கிட்டு வான்னு சொல்றாங்க.. கொஞ்சம் பெரிய மனசு வச்சு எழுதிக் கொடுத்தா.. உதவும். அதான்.."


"முடியாது.. போ.. வேற வேலை இல்லை.. ரேஷன் வேற போடணுமா உங்களுக்கெல்லாம்.."

"ஓட்டு போடறதுக்குப் பேர் இருக்குங்க.."

"அது வேற விஷயம்.."

"எத்தனை வருஷமாக் குடி யிருக்கோம்? பந்தல் மாதிரி கொட்டகை.. மழை பெஞ்சா, ஒரு கையகலம் இடம் விடாம ஒழுகுது.. தரையெல்லாம் ஈரமாகி.. ச்சு.. காலையிலே பொம்பளைங்க ஒதுங்கணும்னா ரயில்வே லைன் பக்கம் போகவேண்டியிருக்கு.. ஏதாவது சண்டை போட்டோமா..? கேட்டோமா..?"

"கொட்டகை ஒழுகுதுன்னா.. காலி பண்ணிட்டுப் போ.. வேண்டாம்னு நானா கையைப் பிடிச்சுத் தடுத்தேன்..? உங்க ஊர்ல மரத்தடியிலே குடித்தனம் பண்ணுவீங்க.. இங்கே..? சொகுசு கேட்குதோ..?"



''கோவிச்சுக்காதீங்க சாமி.. அரிசியும் மண்ணெண்ணெயும் அநியாய விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கு.. கார்டுக்கு அலையிற அலைச்சல் சொல்ல முடியலை.. இப்பத்தான் ஆபீசர் வந்து கேட்கிறாரு.. கொஞ்சம் தயவு செய்து கொடுத்தீங்கன்னா.."

"தயவா..? நிறையச் செய்தாச்சு.. இருநூறு மைலுக்கு அப்பால இருந்து வந்தவங்களுக்கு வேலை கொடுத்து.. இடம் கொடுத்து.. இதுவே பெரிய தயவுதான்.. போ... போ..."

சற்று நேரம் அவள் அங்கேயே நின்றிருந்தாள். பணிக்கர் மனம் மாறலாம் என்ற நப்பாசை. காத்திருந்தாள்.. காத்திருந்ததுதான் மிச்சம்... பிறகு ஏமாற்றத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள்.

பணிக்கர் உள்ளே திரும்பினார்.. எதிரே மஞ்சு நின்றிருந்தாள்.

"அவளுக்கு ஒரு கையெழுத்து போட்டுக் கொடுத்தா என்னப்பா..? குறைஞ்சா போயிடுவீங்க..? பாவம். ஏழை.. ரேஷன் கார்டு அவளுக்கு கிடைக்கும்னா நாம ஏன் தடுக்கணும்?'

''உனக்குத் தெரியாதும்மா. எல்லாப் பயல்களுக்கும் ரேஷன் கார்டு கிடைச்சுட்டா.. அப்புறம் நம்ப மளிகைக் கடையிலே எவன் அரிசி வாங்குவான்? சாமான் வாங்குவான்? நம்ம வியாபாரம் குறைஞ்சு போகும்.."

மஞ்சு சிரித்தாள்.. சிரித்து சிரித்து. அந்தச் சிரிப்பின் சாயம் மெல்ல மெல்ல முகத்திலிருந்து தேய் மறைய.. ஒரு வேதனையின் வ வெளிப்பட.....

"மஞ்சு.. என்னாச்சு உனக் திடீர்னு.. என்னமோ மாதிரி.. உட சரியில்லையா..?"

"பாவம்.. இந்தப் பெண்.." என்

க. "இவளோட நிலைமை
னை நாள் வரையிலும் எனக்குத்
யலை.. இப்பத்தான் புரியுது..
விஷயத்திலே உலகம் முழுக்க
ணாத்தான் இருக்கு.. அதுவும்
பது..'' சொல்லிவிட்டு ஒரு
முச்சு விட்டாள் "கிட்டத்தட்ட
ப் பெண் மாதிரிதான் நாங்களும்
கே வாழவேண்டியிருக்கு.. அயல்
டில்.. சொல்லப் போனால்
னும் மோசம்.."

என்னம்மா சொல்றே..?"

ஒரு நாட்டுக்குள்ளேயே..
விட்டு இடம் பெயர்ந்தவன்
வளவு கோபத்தையும்
ப்பையும் சந்திக்க நேருகிற
.. அங்கே.. நாங்கள் உழைக்க
வர்கள்... இரண்டாயிரம் மைல்
து பிழைக்க வந்தவர்கள்..
ணெய் வளம் இருப்பதால்
கே கர்வம்.. அவர்கள்
ாளிகள். நாங்கள்.. அழையா
க்குள் நுழைந்தவர்கள்..
ளுக்கு என்ன மரியாதை
க்கும்..? வரவேற்பு இருக்கும்..
சம்பளத்தில் வேறுபாடு..
கையில் வேறுபாடு..
டாந்தரக் குடிமகனாக.."

இதெல்லாம் நீயா நினைச்
து.."

இல்லைப்பா.. கிணற்றுத்
ளையா நாம் இருக்கோம்..
ரியில் போனால்தான் உலகம்
கிறது.. எத்தனை பேரால் இப்படி
ியில் போகமுடிகிறது..? பார்க்க
றது..? சுதந்தரம் வந்து ஐம்பது
ம் ஆகியும். இந்தியா என்கிற
ஒரே குடும்பம்னு யாரும்
ைக்கிறதில்லை.. அண்டை
க்காரனையே அந்நியனா
க்கிறோம்.. விட்டுக் கொடுக்கிற
ான்மை இல்லை.. அவன் வேறு
வேறுன்னுதான்.. ச்சு.. நம்ப
க் கொடிகளும் அடுத்த வீட்டில்
படர்ந்திருக்குன்னு யாரும் ஒரு நிமிஷம் எண்ணிப் பார்க்கறதில்லை.. நம்ப வீட்டுக்கு வந்து நமக்காக வேலை செய்யறவனை விரோதியா எண்ணக்கூடாது.. விருந்தாளியா நினைக்கணும்.. நமக்கு ஒரு நாட்டுக்குள்ளேயே இந்த மனப்பாங்கு இன்னும் வரலை.. வரணும்... நாளாகும்.. இங்கேயே இப்படின்னா .. நாடுவிட்டு நாடு போனவங்க நிலைமை எப்படி..? உலகமே ஒரு வீடா நினைக்கிற எண்ணம் வரணும்.. வரலை. அதுவரை.. மோசம்தான்.. ரொம்ப மோசம் தான்.. எங்க நிலைமை.."

''ஏய்.. ஏய்.. மஞ்சு.. நீ விளையாடறே.. உள்ளாக்கட்டி.. அதானே? அப்பா கிட்டே பொய் சொல்றே.. பொய்தானே..? பொய்தானே...?"

அரை நம்பிக்கையுடன் கேட்டார்.. கேட்ட குரல் வலுவிழந்து நோஞ்சானாக ஒலிப்பது அவருக்கே தெரிந்தது.. உண்மைதான்.. உண்மைதான்.. என்று அந்த முகமும் கண்களும்.. நிதர்சனமாக்கின..

பணிக்கர் கண்களை மூடினார். நம்ப முடியவில்லை.. இது எப்படி ஆயிற்று..? அவர் கண்டிருந்த கனவு என்ன? ஜோர் என்ன? மஞ்சு.. அங்கே.. எட்டாக்கையில்.. தொலைதூர நாட்டில் .. ஒரு தமிழரசியாக.. ரேஷன் கார்டுக்கு அலைகிற மாதிரி ஒரு காட்சி கண்முன் விரிய.. சே.. என்ன கொடுமை..? பயங்கரம்.. என் மகளுக்கா..? அவளுக்கா இப்படி..?

படம் ஓடிக்கொண்டிருந்தது..

சுஜாதாவிடமிருந்து வில்லன் குழந்தையைப் பறிக்கிறான்.. காரில் திணித்து.. கதவை மூடி.. வேகம் எடுக்க, "ஐயோ.. என் குழந்தை.. என் குழந்தை.. என் குழந்தை...'' அலறியபடியே காருக்குப் பின்னால் ஓட.. தடுக்கி விழ.. எழுந்திருந்து மீண்டும் துரத்த.. அந்த அலறல் ஓயாமல்..

'என் குழந்தைக்கு என்று வரும்போது தான் என்னால் உணரமுடிகிறதோ..? நியாயங்கள் புரிகிறதோ..? தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரிகிற மாதிரி..'


''ஒரே புழுக்கமா இருக்கு.. ஜன்னலைத் திற.. காற்று வரட்டும்" என்றார் பணிக்கர் மனைவியிடம்..

அவள் கதவைத் திறந்தாள்.. அங்கே ஜன்னல் கம்பிகளில் கன்னம் அமுந்த, நாலைந்து முகங்கள் தெரிந்தன.. பார்த்தன.

"அவனுங்க சினிமா பார்த்துக்கிட்டு இருக்கானுங்க.. காசு வாங்க வேண்டாமா..?"

பணிக்கர் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தார்.. நெட்டுக்குத்தலாகப் பார்த்துக் கொண்டே இருந்தார்.. எதுவும் பேசவில்லை.. சொல்ல வில்லை.. ச்சு .. என்று ஒரு சுள் கொட்டினதோடு சரி.. ஒரு பெருமூச்சு விட்டார்.. மீண்டும் சினிமா பார்க்கத் தொடங்கி விட்டார்..

வில்லனைக் கீழே போட்டு மம்முட்டி துவைத்துக் கொண் டிருந்தார். ●



நீண்ட தண்டுகள் உடைய பூக்களை வைக்க, பெண்களின் கால்களைப் போன்ற "ஃப்ளவர்-வாஸ்" குப்பிகள் செய்து அதில் வைக்கின்றனர். இந்த ஃப்ளவர் வாஸ் அலங்காரம் எங்கே என்று கேட்கிறீர்களா? ஸ்பெயின் நாட்டில். - ஏர்வாரைக்கடியான்



தார் சொல்லும் கதை

மோகன்.

செதுவாலைக் கிராமத்து விவசாயக் கூலியின் ஒரே மகன்.

இப்போது வயது நாற்பத்திரண்டு.

புகையிலும், தாரிலும், தூசியிலும், புழுதியிலும், வெயிலிலும் புதைந்து புதைந்து மாநிறம் மாறி இருள் நிறமாகிப் போன அவன் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவன்.

மேலும் படிக்க வசதியில்லாத நிலையில் அப்பன், ஆத்தாளோடு விவசாயக் கூலியாய் ஐக்கியமானவன்.

அவன் 'சலவைக் கூலி'க்கே, அவனின் 'விவசாயக் கூலி' போதவில்லை.

அவ்வளவு 'டிரிம்'மாக இருக்கப் பழகிக் கொண்ட மோகன், ஒரு நாள் நண்பனின் சைக்கிளில் டவுனுக்கு வந்தான்.

சேர்த்து வைத்திருந்த சிறு தொகையில் . சினிமா பார்த்தான். சிற்றுண்டி சாப்பிட்டான்; நண்பனோடுதான். தலையைப் படியச் சீவ நவீனக் கைப்பிடி கொண்ட 'சீப்பு; இடையில் கட்ட தங்கநிற 'பெல்ட்' வாங்கினான்.

இருட்டுவதற்குள் இருந்த காசுகளைச் செலவழித்த அவனை நண்பன் கேட்டான்;

"மோகன்! பல நாள் குருவியா சேர்த்த பணத்தெக் குந்தி எழற நேரத்திலே செலவழிச்சிட்டே. ஏதாவது வேலெ கெடைக்குதான்னு முயன்று பார்க்கத்தானே டவுனுக்கு

வந்தே? ஜாலிக்கா வந்
இந்தியாவின் இளைஞர்கள் இப்
உன்னை மாதிரி இருந்தா சரிப்பட
வரும்? இந்தியாவின் இத
கிராமம்ன்றாங்க. கிராமமே இப்ப
சீரழியலாமா மோகன்?"

நண்பனைப் பின்னால் உட்கா
செய்து சைக்கிளை மிதிக்
தொடங்கின மோகன், நண்பன
இடித்துரையைத் தன்
படித்துப் படித்துப் பார்த்
கொண்டான்.

எப்படி செதுவாலை வ
குழிப்பள்ளங்களிலும், குண்
கற்கள் மலிந்த பாதையி
சைக்கிளை மிதித்தான் என்ப
அவனுக்குத் தெரியாது.

நண்பன் கூட அதிசயமுற்றா

'மறுநாள் -

மூன்றாம் ஜாமத்திலே
அப்பனும், ஆத்தாளும் 'நெற்க
அடிக்கப் போய்விட்டனர்.

விடியும் பொழுதில் சோம்
முறித்து எழுந்த மோகன், எதி
வானத்திலிருந்து சன்னம
நூலிழைகளாய் இறங்கும் மார்க
பின்பனியில் சைக்கிளைத் தள்
கொண்டே வரும் அவனுடை
நண்பனைப் பார்த்தான்.

காலைக் கடன் முடி
நண்பனோடு சைக்கிளில் பு
பட்டான் அவன்.

டவுனுக்குள் பிரவேசிக்
போது -

நீலவ

காலைச் சூரியனின் 'சுள்' த்தைக் கிள்ளியது.

நெடுஞ்சாலையோரத்தில் பெரும் மாய் அந்தக் கருங்கல் லிகளை அரைக்கும் ரோடு ாடும் மிஷின் மட்டுமன்றி, களில் கோணிப் பைகள் சுற்றி, கை மூடி, தலையில் ாப்பியணிந்த, முகமெல்லாம் பொடியின் வெண்மை அப்பிய தனின்... மனிதர்களின் ழப்பைச் சிறிது நேரம் சற்றே த்தில், சைக்கிளிலிருந்து இறங்கி ரு கவனித்தான்.

மிஷினின் மீளாத சப்தத்தில் னாய்' வேலை செய்த ஒரு ாழிலாளியை நெருங்கினான்.

ஓரிரு நிமிடங்கள் தொழிலாளி ாடு பேசினான். அவனுடைய ச்சில், செய்கைகளில் ஆர்வம் ழயோடியது.

ரோடு போடும் தொழிலாளியாய் னான்.

இருபத்தைந்து ஆண்டுகள் -

மோகனின் வாழ்க்கை ாதிக்கும் தாரோடும், ஜல்லிக் களோடும், வாளியோடும், மண் ட்டியோடும், இரும்புப் களாலான துடைப்பத்தோடும், வண்டியோடும், மில்லரோடும், லோடும், தண்ணீரோடும்தான் ற்றுக் கழிந்தன.

தினமும் அதிகாலையிலேயே ந்து செதுவாலையையொட்டி ம் பாலாற்று ஊற்றுக் குழிகளில் ல் தேய்த்துக் குளித்து, வனுக்குத் தெரிந்து பல்லாண்டு ாக அரசமரத்தடியில் இருக்கும் ளையாரைக் கும்பிட்டு, வீடு ால் அலுமினியப் பாத்திரத்தில் னவி ஆசைவேணி கரைத்து வைத்திருக்கும் 'பழையதை' மூக்கு வழியே தெறிக்கும் வரை மகிழ்ச்சி மேலிடச் சாப்பிட்டு விட்டு, சைக்கிளின் காரியரில் கீழே நழுவாமல் கெட்டியாய்க் கோங்குக் கயிற்றால் பிணைக்கப்பட்ட மத்தியானத்திற்கான குழம்புச் சோற்று டிபன்பாக்ஸை ஒருமுறை சரிபார்த்து, மனைவி ஆசை வேணியையும், பதினெட்டு நிரம்பி கல்யாணச் சந்தையில் விலைபோகத் தயார் நிலையிலிருக்கும் மூத்த மகள் லதாவையும், எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் மகன் வெங்கடேசனையும், ஏழாவது படிக்கும் கடைசி மகன் கதிர்வேலுவையும் பார்த்து, இரண்டு மகன்களின் மூலமாவது தனக்கு விடுதலை கிடைக்குமா என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திவிட்டு சைக்கிளை வலிக்கத் தொடங்கு வான்.

முக்கால் அங்குல ஜல்லிக் கற்களையும், அரை அங்குல ஜல்லிக் கற்களையும் கை வண்டியில் தள்ளிக் கொண்டு வந்து கலவை மில்லரில் கொட்டுவான் மோகன். அது மில்லரில் நன்கு அரைபடும். அப்போது வெண்தூசு வஞ்சனை யின்றிப் பறக்கும். அது தாக்காம லிருக்க மூக்கிற்குத் துண்டுத் துணி கட்டிக் கொள்வான்; தலைக்கும் கூட.

அரைபட்ட ஜல்லிக் கற்களை மற்றொரு ரோலரில் கொட்டி அதில் கொதிக்கும் வாளியில் நிரப்பிய தாரைக் கொட்டிக் கலக்குவான்.

சிறிது நேரத்தில் தார் கலந்த கலவை தயார்.

கூர்மையாய் இரும்பாலான துடைப்பத்தால் ரோடைக் கீறி சிறிது ஆழம் செய்வான். தார் கலந்த கலவை தரையில் நன்கு பதியும் வசதியை உண்டாக்குவான். தென்னந் துடைப்பத்தாலும் சீர் செய்வான்.

கொதிக்கும் தாரை வாளியில் சுமந்து வந்து சுத்தமாக்கப்பட்ட தரை மீது ஊற்றுவான்.

பிறகு --

ஒவ்வொரு கைவண்டியிலும் சுமார் இருநூற்றைம்பது கிலோ எடையுள்ள கலவையை மில்லரி லிருந்து கொண்டு வருவான். கலவையை ஒரே சீராகக் கொட்டிப் பரப்புவான்.

சிறிது நேரம் சற்றே ஆறவிட்டு-

சலிக்கப்பட்ட சன்னமான மணலை அதன் மீது லேசாய்த் தூவுவான். பின்னர் சலிக்காத மணலை அடர்த்தியாய்த் தூவுவான்.

முக்காலும் காலுமான கருங்கல் ஜல்லிக் கற்கள் கலவை மில்லரில் தாரோடு சரசமாடிக் கூடுகையில் வெளிப்படுகின்ற ஒரு வித்தியாச மான மூக்கை முட்டும் நாற்றமும், புகையும் அன்றாடம் காலை எட்டு மணியிலிருந்து மாலை ஐந்தரை மணிவரை மோகனை ஆக்கிரமிக் கின்றன.

அதற்கும் அடுத்து -

அடர்த்தி மணல் தூவப்பட்ட ரோடு மீது ரோலரை மேடு பள்ளமில்லாமல் சமமாகும் வரை ஓட்டுவான். அவனுக்கு டிரைவிங்கும் தெரியும்.

இதுபோன்ற எல்லாப் பணிகளிலும் மோகன் மட்டுமன்றி, அவனைப் போன்ற மற்ற தொழிலாளிகளும் ஈடுபடுவர்.

ஆபத்தான, அதே சமயம் அதிகமான கடின உழைப்பை உறிஞ்சுகின்ற, அந்தக் கலவைக் காற்றைத் தொடர்ந்து சுவாசித்தால் 'ஆஸ்துமா' போன்ற வியாதிகளின் தாக்குதல் நிகழலாமென்று

செந்தமிழ்ப் பாட்டு

முத்தமிழும் முத்தமிடும் முகவரியே பாட்டு
முக்கனியில் தேன்சுவையும் கலந்ததிந்தப் பாட்டு!
சத்தமிடும் சந்தத்திலும் தவழ்ந்துவரும் பாட்டு
சங்கீதத் தென்றலிலே இசைந்துவரும் பாட்டு!

எத்திசைக்கும் புகழ்மணக்கும் செந்தமிழே பாட்டு
எந்நாளும் கவலைகளை மறக்கச் செய்யும் பாட்டு!
புத்தன், காந்தி கொள்கைகளை வாழ்வில் நிலைநாட்டு
பொங்கிவரும் புதுவெள்ளமே புதுமையான பாட்டு!

மழலைதூங்கத் தாய்பாடும் தாலாட்டுப் பாட்டு
மலர்முகமும் உறங்குதம்மா தாலாட்டைக் கேட்டு!
குழலூதும் கண்ணனின் வேணுகானம் பாட்டு
குதுகலமாய் ஆடுதம்மா கோலாட்டம் போட்டு!

பழனிமலை முருகனுக்குப் பைந்தமிழில் பாட்டு
பக்திப் பரவசம் ஊட்டுகின்ற ஆன்மிகப் பாட்டு!
உழுகின்ற உழவனுக்கு ஏரோட்டப் பாட்டு
உயிர்ப்பசியைப் போக்கிடும் உன்னதப் பாட்டு!

எழுகின்ற உணர்வுக்கோர் சுதந்தரப் பாட்டு
எந்நாளும் அடிமையெனும் எண்ணத்தை நீஓட்டு!
வழிவழியாய் வந்ததைய்யா நாட்டுப்பற்றுப் பாட்டு
வாழவைக்கும் கடப்பாடே நம்பிக்கையின் கூட்டு!

எழுதிடுவோம் பாரதியின் வரலாற்றுப் பாட்டு
ஏற்றமிகு எழுச்சிகளை நல்லுரமாய்ப் போட்டு!
தொழுதிடுவோம் பராசக்தியிடம் காணிநிலம் கேட்டு
தொன்றுதொட்டு அவளளிப்பாள் செந்தமிழ்ப் பாட்டு!



நங்கை பூவரசு

...ச்சுறுத்து கின்ற 'ரோடு போடும்'
...தொழிலைச் செய்கின்ற மோகன்.

ஒரே பெண் லதாவுக்கு ஒரு ...ல்ல உழைப்பாளி வரனைத் தேடி ...ணம் முடித்து விட வேண்டு ...மென்பதில் குறியாயிருக்கும் மனைவி ...ஆசைவேணி, அன்றாடக் கூலிக்குப் போய்ச் சிறிது சிறிதாய்ச் சேர்ப்பதில் ...னாலும் முழுதுமாய் உதவுகிறாள்.

அவன் பிடிப்பதில்லை'; ...டிப்பதில்லை'.

ஒரு காலத்தில் 'டிரிம்'மாய் உடுத்திய மோகனா இந்த மோகன்..? என்று இப்போது கூட செதுவாலைப் பெரிசுகள் வியந்து 'கரி'யாய்க் காணப்படும் அவனை ஆழமாய்ப் பார்க்கின்றனர்.

விடியலிலேயே கூலி ஏர் உழப் போய்ச் சம்பாதித்து, ரோடு போடும் வேலையில் முடிந்த வரை உடலொடிய உழைத்துச் சம்பாதித்து மக்கள் வெங்கடேசனும், கதிர்வேலுவும் பொறியியல் பட்டதாரிகளாய்ப் பின்னாளில் விளங்க வேண்டுமென்று நினைக்கும் மோகன், ஒரு மெழுகுவர்த்தியைவிட மேலானவன் என்றால் அது மிகச் சரிதானே!

போட்டோ :
பேபி ஸ்டுடியோ
சாயிநாதபுரம்

இவரி ஒடக்

ஸரோஜா

தபால்காரர் கோவிந்தசாமி நாளையிலிருந்து வேலையினின்றும் ஓய்வு பெறப் போகிறார். இருபத்தி எட்டு வருஷத்திற்கும் மேலாய் காக்கி உடையில் அமர்த்தலாய் சைக்கிளின் மீது உட்கார்ந்து பெருமாள் பேட்டை முழுவதும் உலா வந்தவருக்கு நாளையிலிருந்து கட்டாய ஓய்வு. பெருமாள் பேட்டையில் எல்லாக் குடித்தனக்காரர்களின் குடும்பங்களும் அவருக்கு நன்கு பரிச்சயம். அத்தனை முகங்களையும் நாளையிலிருந்து அடிக்கடி பார்க்க முடியாது என்று நினைத்த போதே கோவிந்தசாமிக்கு நெஞ்சு கனத்தது. அன்பின் சுமைகளை ஏற்பதும் ஓர் அலாதியான சுகம்தான். சுமைகளையெல்லாம் தாங்கிச் செல்வாரே தவிர, அதற்குக் கூலி பெற்றுக் கொள்வதை மறுத்து வந்தார்.

''கோவிந்தசாமி! என் மகன் சங்கருக்கு இண்டர்வ்யூ கடிதத்தை உன் கையால் கொடுத்த நேரம், அவனுக்கு நல்ல வேலை கிடைத்து, நாளைக்குப் பம்பாய் புறப் படுகிறான்..'' என்று ஐந்து வருஷம் முன்பு வாத்தியார் மகாதேவன் கூறியபோது, கோவிந்தசாமி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. முதல் இரண்டு பெண்களுக்கும் திருமணம் முடித்து விட்டு மிக்வும் நொடித்துப் போன நிலையில் இருந்தவருக்கு மகனின் முன்னேற்றம் மனத்திற்கு நிறைவான ஒன்றல்லவா?

ஆனந்த நெகிழ்ச்சியில் நிற்கும் தன் முன் வாத்தியார் நூறு ரூபாய்த் தாள் ஒன்றை நீட்டியதும் கோவிந்த சாமிக்குப் பொங்கி வந்த பாலில் நீரைத் தெளித்தது போல சட்டென மகிழ்ச்சி வடிந்து வேதனை பொங்கியது.

அவர் முக மாறுதலைக் கண்ட மகாதேவனும், ''வாங்கிக் கொள் கோவிந்தசாமி! நான் ஒன்றும் இதை வாத்தியார் மகாதேவனாய் உனக்குக் கொடுக்கவில்லை, உன்னுடன் பள்ளியில் படித்த நண்பன் மகாதேவனாகத் தான் கொடுக்கிறேன் .. மறுக்காதே ...'' என்று வற்புறுத்தினார்.

"அதே பழைய நண்பனாய் நானும் கேட்கிறேன், மகாதேவா! பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்கு லஞ்சம் வாங்கக் கூடாது என்று போதிக்கும் நீயே எனக்கு இப்படி நூறு ரூபாய் தரலாமா?'' கோவிந்தசாமியும் கோபித்துக் கொள்வது போல கேட்டார்.

"அடடே .. இது லஞ்சம் இல்ல கோவிந்தசாமி! என் அன்பளிப் மகனுக்கு வேலை கிடைத் மகிழ்ச்சியைக் கொண்டாடு விதத்தில் அதில் உனக்கும் பங் உண்டு என நினைத்து நா மனமுவந்து தரும் சிறு பரிசு!"

"உன் மகன் சங்கர் நன்கு படித் உழைத்துத் தேறி முன்னுக்கு வந்தி உடலளவிலோ, பொருளளவிலோ எ பங்கு எதுவுமே கிடையாது இண்டர்வியூ கடிதத்தைக் கொடுத்த தொழிலுக்குரிய என் கடமை".

''அப்படியானால் இந் அன்பளிப்பை நீ வாங்கிக் கொள்ள மாட்டாயா, கோவிந்தசாமி?"

"அன்பளிப்பைப் பெற்றுக் கொள் ஒரு நேரம் வராமல் போகாது. நா ரிடையர் ஆகும் நேரத்தில் என் ஒ பெண் இராஜேஸ்வரிக்குத்திருமண செய்வதாக இருக்கிறேன். அந்த திருமணத்திற்கு உன் அன்பளிப் நீ தருவதும், நான் ஏற்று கொள்வதும் தான் முறை. இப்போ நீ இந்த நூறு ரூபாயை முதலி உள்ளே கொண்டு வைத்து விடு.."

மகாதேவன் வேறு வழியின்றி பணத்தை உள்ளே கொண்டு போ வைத்து விட்டு வந்ததும் தா கோவிந்தசாமி, சாந்தசாமியானார்!

மகாதேவன் மட்டுமன்ற பெருமாள் பேட்டையில் யாரிடமு அவர் காசு வாங்க மாட்டார். மண ஆர்டர் பெற்றுக் கொண்டவர்க மனமிரங்கித் தரும் சிறு தொகை யையும் நாசூக்காய் மறுத்து விடுவா இத்தனைக்கும் அவருடைய குடும்ப மிகவும் ஏழைமை நிலையில் தா இருக்கிறது. வயதான பெற்றோர் வாழாவெட்டியாகி வீட்டோடு ப வருஷமாய்க் கிடக்கும் தமக்கை சித்த சுவாதீனம் சரியில்லாத நிலையில் தம்பி என்று, மனைவி மகளைத் தவிர அவருடைய சொற்

ம்பளத்தில் ஜீவனம் நடத்தும் நான்கு ஜீவன்கள். இருந்தாலும் குறை ஒன்றும் இல்லாத கோவிந்த சாமியாகத் தான் அவர் வளைய வருவார்.

மகாதேவனுக்கு அவர் குடும்பநிலை எல்லாமே தெரியும். தன்னுடன் பள்ளி இறுதி வரை படித்த கோவிந்த்சாமி அந்தப் பதினாறு வயதிலேயே குடும்பத்தைக் காப்பாற்ற மளிகைக்கடையில் பொட்டலம் கட்டப் புறப்பட்டவன். அப்புறம் ஜவுளிக் கடையில் சில காலம் கணக்கெழுதி, பிறகு சொந்த முயற்சியில் தபால்கார உத்தி யோகத்தைத் தேடிக் கொண்டார். வறுமையின் எந்த நிலையிலும் அவர் யாரிடமும் யாசகம் கேட்டதில்லை.

கோவிந்தசாமியின் பணி ஒய்வு பற்றிப் பெருமாள் பேட்டையில் ஒரு வாரமாகவே பேச்சு தொடங்கி அனைவரும் அவரிடம் விசாரிக்கத் தொடங்கினார்.

"கோவிந்தசாமி! 'தபால்'னு கூவிவிட்டு, சைக்கிள் மணியை அடித்தபடி நீ வருவதை எங்க குடும்பமே ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும். இனிமேல் உன் இடத்துக்கு யார் வரப் போறாங்களோ?"

"உன்னைப் போல பொறுப்பான தபால்காரரை இனிமேல் பார்ப்பதும் கஷ்டம் தான்".

"கோவிந்தசாமி! உன் பணியை இன்னும் சில காலத்திற்கு நீடிக்கக் கூடாதா?"

அத்தனை பேருக்கும் அடக்கத் துடன் பதில்கூறி விடைபெற்று மனைக்கு வந்தார் கோவிந்தசாமி. கடைசி நாள் என்பதாலோ என்னவோ 'தபால்' என்னும் போதே குரல் தேம்பியது. சைக்கிளின் மணிகூட தீனமாய் ஒலித்தது.

கோவிந்தசாமிக்கு இவற்றால் நெஞ்சு கனத்துப்போவதை விடவும், வேறு ஒரு விஷயம் தான் நீண்ட நாள்களாகவே உறுத்திக் கொண்டி ருந்தது. அது, மகாதேவனின் மகன் சங்கர் கடந்த ஒன்பது மாதங்களாக அவருக்கு வழக்கமாக அனுப்பும் மணியார்டர் தொகையை அனுப்பாம லிருப்பது. ஐந்து வருட பம்பாய் வாசத்தில் அவன் மாதா மாதம் அனுப்பும் ருபாய் ஆயிரத்தை, சரியாக ஒன்பது மாதங்களாய் நிறுத்தி விட்டான். இதுபற்றி நேரிடையாகக் கேட்கத் தயங்கிய கோவிந்தசாமி ஒருநாள் மகாதேவனிடம் பூடகமாகக் கேட்டுப் பார்த்தார்.

"மகாதேவா! சங்கர் பம்பாயில் நன்கு சௌக்கியமாகத் தானே இருக்கிறான்?"

"நல்ல சௌக்யம் கோவிந்தசாமி! கூடிய விரைவில் வெளிநாட்டுக்கும் கூட அனுப்பப் போகிறார்களாம், நேற்று நீ கொடுத்த தபாலில் சங்கர் எழுதியிருந்தான் .."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். சங்கர் இப்போது உனக்குப் பணம் பாங்கிற்கே அனுப்பி விடுகி றானாக்கும்?"

"இல்லை கோவிந்தசாமி! உண்மையில் எனக்கு எந்த பாங்கிலும் அக்கவுண்ட் கிடையாது. என்னைப் போலவே வாத்தியாராயிருந்து செத்துப் போன என் அப்பா, கைவசம் எப்போதும் வீட்டில் பணம் வைத்திருந்து, யார் வந்து கேட்டாலும் உடனே உதவி செய்ய வேண்டும் என்று அடிக்கடி சொல்வார். அதனால் பாங்க் வழக்கம் என்னிடம் இல்லை.."

மகாதேவன் இப்படிக் கூறியதும் மேற்கொண்டு அவரது குடும்ப விவகாரத்தில் தலையிட கோவிந்த சாமிக்கும் தயக்கமாயிருந்தது. நல்ல நட்பிற்கு இலக்கணமே, நயம்படப் பழகுதல்தானே?

தபால் எதுவும் மகாதேவனுக்கு வரவில்லையெனினும், அவரிடம் பேச்சுக் கொடுக்க ஒரு வாய்ப்பாய் நினைத்து, தனது பதவி ஒய்வு பற்றி சொல்லிக் கொள்வது போல அவர் வீட்டு வாசலுக்கு வந்து சைக்கிளை நிறுத்தினார்.

சைக்கிளை அவர் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தும் சத்தம் கேட்டதும் உள்ளிருந்து ஓடிவந்தார் மகாதேவன்.

"வா.. வா.. கோவிந்தசாமி .. நானே உன்னைப் பார்க்க வரணும்னு நினைச்சேன் .. வீட்ல அவளுக்கு உடம்பு சரியில்லை ... ஆஸ்பத்திரியில், சேர்த்திருக்கிறேன் .." என்றார்.

"எ.. என் .. என்ன ஆச்சு மகாதேவா? .. உன் மனைவி நல்ல ஆரோக்யமாகத் தானே இருந்தாங்க?" என்று பதற்றத்துடன் கேட்டார் கோவிந்தசாமி. ஏனெனில் பத்து மாதங்கள் முன்பு அவர் தன் மகள் இராஜேஸ்வரிக்கு நிச்சயதாம்பூலம் செய்த போது, நிகழ்ச்சி முழுமைக்கும் உடனிருந்து கலந்து கொண்ட மகாதேவனின் மனைவி சொர்ணம் அப்போது விடுமுறையில் வந்திருந்த மகன் சங்கரையும் விடவில்லை.

"டேய் சங்கரா, இது உன் சொந்தத் தங்கையின் நிச்சயதார்த்தம் என்று நினைத்துக் கொண்டு, பொறுப்பாக எல்லாம் செய்து முடி உன் அப்பாவும், தபால்காரரும் உடன் பிறந்தவர்கள் மாதிரிப் பழகும் போது நீயும் ராஜேஸ்வரியைத் தங்கையாய் நினைத்து அந்த நிச்சயதாம்பூலத் தட்டை ஆசிர்வாதம் செய்து கொடு"

சங்கர் என்றைக்குப் பெற்றோர் சொல்லை மீறி இருக்கிறான்?

அன்று அந்த நிச்சயதாம்பூல விழாவை அமர்க்களப்படுத்தி விட்டான். பம்பாயில் குஜராத்தி குடும்பங்களில் நிச்சய தாம்பூல தினத்தன்று மணமகளின் கை,கால் களில் மருதோன்றியிட்டு 'கர்பா'

நடனம் என்று அவர்கள் வழக்கப்படி கும்மியடிப்பார்களாம். சங்கர் தன் கையால் இராஜேஸ்வரிக்கு மரு தோன்றியிட்டு, அவளை உட்கார வைத்து, சுற்றி வந்து கும்மியடித்து கிண்டலாய்ப் பாடினான். "இரு, இரு.. உன் கல்யாணத்திற்கும் முன்கூட்டியே வந்து இதைவிட அதிகம் கிண்டலாகப் பாடப் போகிறேன் பார்" என்று அன்று அவன் இராஜேஸ்வரியிடம் கூறி அவளை வெட்கப் படவைத்ததைக் கண்டு பூரித்து நின்ற அந்தத் தாய்க்கு இன்று என்ன ஆயிற்று?

கோவிந்தசாமி குழப்பமும், வேதனையுமாய் மகாதேவனைப் பார்த்தார்.

''இரண்டு மாசம் முன்னாடி இப்படித்தான் உடம்பு சரியில்லாமல் டாக்டரிடம் போனதில் 'டயாலிஸிஸ்' செய்ய வேண்டி வந்தது. அப்புறம் நல்லபடியாகத் தான் இருந்தாள். ஆஸ்பத்திரி, மருந்து, மாத்திரை என்பதெல்லாம் பிடிக்காதாம். கை வைத்தியமாய் ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் நேற்றைக்கு திடீர் வயிறு முகம் எல்லாம் வீங்கிப் போய் மூச்சு திணற நேர்ந்ததும் இரண்டு பேருமே பயந்து போயிட்டோம். உடனே ஆட்டோவில் அவளை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போனேன். பரிசோதனை செய்த டாக்டர், அவளுக்கு சிறுநீரகம் பழுதாகி விட்டதாயும், அறுவை சிகிச்சை செய்து மாற்று சிறுநீரக பொருத்தணும் என்றும் சொல் விட்டார்"

''அப்படியா? எல்லா நல்லபடியாய் முடியணும். மகாதேவ சங்கருக்கு விஷயம் தெரியப்படுத் விட்டாயா?"

''அவன் வெளிநாட்டுக்கு போயிருக்கிறான். அடுத்த வாரம்தா இந்தியாவுக்கு வருவான் .."

''மகாதேவா! 'டயாலிஸின் செய்யவே நிறையச் செலவாகும்



ன்னும் சிறுநீரக மாற்று அறுவை கிச்சை என்றால் எப்படி சமாளிக்கப் பாகிறாய்? எனக்குக் கவலையாய் ருக்கிறது".

"சொர்ணத்திற்குக் கூடப் றந்தவர்கள் ஐந்து பேர். ரொம்ப ற்றுமையான குடும்பம். அதனால் வர்களில் யாராவது சிறுநீரகம் காடுத்து உதவி விடுவார்கள். னக்கு அதுபற்றிக் கவலை ல்லை.."

'ஆனால் பணத்திற்குத் தான் வழி தெரியவில்லை..' என்பதை மகா தேவன் வாய்விட்டுச் சொல்லா விட்டாலும் கோவிந்தசாமி யூகித்துக் கொண்டார். தன்னைவிடச் சில மாதங்கள் மூத்தவரான மகாதேவன் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் சில மாதங்கள் தான் ஆகின்றன. வாத்தியாருக்கு என்ன பிரமாத பென்ஷன் வந்து விடப் போகிறது? சங்கரும் ஒன்பது மாதமாய் அவருக்குப் பணம் அனுப்புவதை நிறுத்தி விட்டான். இந்த நிலையில் மகாதேவன், மனைவியின் வைத்தியச் செலவுக்கு என்ன செய்யப் போகிறார்?

கேள்வி நெஞ்சைக் குடைய, கோவிந்தசாமி வீட்டிற்கு வந்தார்.

அன்று. இரவு முழுவதும் கோவிந்தசாமியின் குடும்பம் தூங்கவேயில்லை. அந்தச் சிறு ஓட்டு வீட்டின் கூடத்தில் குழுமி உட்கார்ந்தவர்கள், ஆளுக்கு ஆள் யோசனை கூறினார்கள்.

"எலேய் கோவிந்தசாமி, ஒரு காலத்தில் நான் மகாதேவன் வீட்டுக்குப் பால் ஊத்திக்கிட்டு இருந்தேன் .. அவங்க அப்பாரு என்னிக்கூட வாத்தியாரு. அவருதான் என்கிட்ட அடிக்கடி, 'டேய் மாடசாமி, என்னை மாதிரி உன் மகன் கோவிந்தசாமியையும் மாடு மேய்க்க அனுப்பிடாதே.. என் மகன் மகாதேவனுடன் அவனையும் படிக்கறதுக்கு அனுப்பி வை. படிப்புச் செலவை நான் ஏத்துக்கறேன் .. கல்வி தான் ஒருத்தனுக்கு உயர்ந்த சொத்து'ன்னு சொல்வாரு. அந்த நல்ல மனுஷன் இன்னிக்கு இல்லைன்னாலும் அவரு வீட்ல ஒரு துன்பம் வந்தா, அதை நாமதான் எப்பாடு பட்டாவது தீர்க்கணும் .." என்றார் கோவிந்த சாமியின் தந்தை.

"ஆமாம்ப்பா .. அந்த சொர்ணம், மகாலட்சுமி மாதிரி இருக்கும். சதா சிரித்த முகம். அதுக்கு இப்ப உடம்பு சுகவீனம்னா நாம நிச்சயம் உதவி செய்யணும். என் சிறுநீரகம் பொருத்தமாயிருக்கும்னா நான் கொடுக்கறேன், கோவிந்தசாமி .. " என்று கண்கலங்கினாள் தாயார்.

"தம்பி கோவிந்தா! வாழா வெட்டியான என் கழுத்துல இந்த ஒரு பவுனு செயின் இனிமே தேவையில்லை. இதை விற்று வருகிற பணத்தை அந்த அம்மாவின் ஆபரேஷன் செலவுக்குக் கொண்டு கொடு .."

அக்கா தன் கழுத்திலிருந்து உருவித் தந்த சங்கிலியை கண் பனிக்க ஏறிட்டார், கோவிந்தசாமி.

"அண்ணே! அண்ணே! என்கிட்டே ஒத்த ருவா இருக்குது .. உனக்கு வேணுமா?" ஓர் அழுக்கு ஒரு ருபாய் நோட்டை விரித்தபடி சிரித்துக் கொண்டு வந்து நின்றான் சித்த சுவாதீனம் இழந்த தம்பி.

அடுத்து இராஜேஸ்வரி என்ன சொல்லப் போகிறாள் என அவளை நோக்கித் திரும்பியவர், அழுகை வெடிக்க அவள் வாய்திறந்ததைத் திகைப்புடன் பார்த்தார்.

"அப்பா! அடுத்த மாசம் நடக்கப் போற என் கல்யாணத்தை முதல்ல நிறுத்துங்க .. அதுக்கு செலவு செய்ய இருந்த பணத்தை அப்படியே வாத்தியார் வீட்டு அம்மாவுக்குக் கொடுத்துடலாம் .. வாத்தியாரைய்யா வாய் திறந்து எதுவும் கேக்க மாட்டாரு .. கொடுத்துத் தேய்ந்த குடும்பம். இந்த நேரத்துல நாம கொடுக்கப் போகிற பணம், வாத்தியார் வீட்டம்மாவின் வைத்தியச் செலவுக்கு உதவி யாயிருக்கும். அதனால தான் மறுபடியும் சொல்றேன், என் கல்யாணத்தை நிறுத்திடுங்கப்பா "

கோவிந்தசாமிக்குத் தன் குடும்பத்தினரைப் பார்த்துக் கை குவிக்க வேண்டும் போலிருந்தது.

அதுவரை எதுவும் பேசாமலிருந்த அவர் மனைவி சட்டென சமைய லறைக்குள் நுழைந்தவள், அங்கு அலமாரியின் மேல் தட்டிலிருந்த சுவாமி படங்களைப் பார்த்து கன்னத்தில் கைவிரல்களால் போட்டுக் கொண்டாள். "சாமி! அந்தம்மாவுக்கு ஒரு குறையும் வரக்கூடாது. இது என் பிரார்த்தனை இல்லை, கட்டளை" என்று உரக்கக் கூறினாள். பிறகு மறுபடியும் கூடத்திற்கு வந்தவள், "நாளைக்கு ஒரு பத்தாயிரம் ரூபா பணத்தையாவது தயார் செய்து வாத்தியாருக்கு முன் செலவுக்குக் கையில் கொடுத்துட்டு வாங்க .. அவரை எப்படியாவது உங்க வழிக்குக் கொண்டு வந்து பணத்தை வாங்கிக்க வைக்க வேண்டியது உங்க பொறுப்பு .." என்றாள்.

பொறுப்பையும், பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் சுமந்து கொண்டு மறுநாள் கோவிந்தசாமி புறப்பட்டார்.

சைக்கிளை மகாதேவனின் வீட்டு வாசலில் அவர் நிறுத்தவும் 'சர்' என 'பிரேக்' போட்டு ஒரு டாக்ஸி வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

கார்க் கதவைத் திறந்துகொண்டு இறங்கிய நபரைப் பார்த்ததும் கோவிந்தசாமி திகைப்புடன் "ச ..

சங்கர்?" என்று தடுமாறிக் கொண்டே அழைத்தார்.

பெட்டி, படுக்கையுடன் இறங்கிய சங்கர், "போஸ்ட்மேன் அங்கிள், சௌக்கியமா? உங்க பொண்ணு இராஜேஸ்வரி சௌக்யமா? உங்க பொண்ணு இராஜேஸ்வரி கல்யாணத் துக்காக ஒரு மாதம் முன்னாடியே வந்து விட்டேன்" என்றான்.

கோவிந்தசாமி குழப்பத்துடன், "சங்கர், விஷயம் தெரிந்து தானே நீ வந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

சங்கர் பெரிதாய்ச் சிரித்துவிட்டு, "கல்யாணத்தேதிதானே? அதுதான் ஒன்பது மாதம் முன்பு நிச்சய தாம்பூலத்தின் போதே தெரிந்து விட்டதே? நல்ல வேளையாய் ஆபீஸ் விஷயமாய் ஜப்பான் சென்றவன், குறிப்பிட்ட பத்து நாள் முன்பே இந்தியா திரும்ப நேரவும் உடனே லீவு போட்டு ஊருக்குப் புறப்பட்டு வந்துட்டேன். அங்கிள்! உண்மையில் என் அப்பா, அம்மாவிற்குக்கூட என் வருகைபற்றி ஒரு தந்தி கொடுக்காமல், ஸர்ப்ரைஸாக இருக்கட்டும் என்று வந்துட்டேன் .." என்று முடித்தான்.

"சங்கர்! விஷயம் தெரிந்து தானே நீ வந்திருப்பதாய் நான் கேட்பது, இராஜேஸ்வரியின் கல்யாணத் தேதியையில்லை .."

"பிறகு என்ன அங்கிள்?"

கோவிந்தசாமி தட்டுத் தடுமாறி அவன் தாயாரின் உடல்நிலை பற்றிக் கூறிக் கொணடிருந்த போதே சங்கர் தலைதெறிக்க வீட்டிற்குள் ஓடினான்.

அடுத்த பத்தாவது நிமிஷம் சங்கர் வந்து இறங்கிய அதே டாக்ஸி, அவனுடன் மகாதேவன், கோவிந்த சாமியையும் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

அங்கு டாக்டரின் வாயால் தன் தாய்க்கு கவலைப்பட எதுவுமில்லை

பாரதப் பொன்விழா-பாரதி தமிழ் விழா



'அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை' - ராம் காஷ்யப் குரூப் நிறுவனங்கள் ஆதரவில், மகாகவி பாரதியாரின் 116ஆவது பிறந்த நாள் விழாவும், பாரதப் பொன்விழாவும் சென்னை, நாரத கான சபாவில் 26.1.98 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு நீதியரசர் மாண்புமிகு எம். கற்பக விநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். அமரர் வ.ரா. திருவுருவப் படத்தை வழக்கறிஞர் த. இராமலிங்கம் திறந்து வைத்தார். எண்பத்தாறு வயது நிறைந்த முது பெரும் எழுத்தாளரும், சிறந்த அறிஞருமான 'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன் அவர்களுக்கு ராம் காஷ்யப் நிதி நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. அ.வெங்கட்ரமணி பொற்கிழி வழங்கி 'பாரதி இலக்கியச் செல்வர்' என்ற பட்டத்தையும் வழங்கினார். பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவ - மாணவியருக்கு நடிகர் திரு.சிவகுமார் பரிசுகள் வழங்கினார்.

தொடர்ந்து 'புதுக்கவிதை காலத்தைக் கடந்து நிற்கும் இலக்கியம் ஆகுமா? ஆகாதா?' என்ற தலைப்பில் இலக்கியப் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு டாக்டர் இரா.மோகன் தலைமை வகித்தார்.

விழாவின் தொடக்கத்தில் டாக்டர் ராஜலட்சுமி ராதாகிருஷ்ணன் கடவுள் வாழ்த்துப் பாடினார். கவிமலர் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பிறகு திரு.பெ.சு.மணி பாரதியாரின் ஊழிக்கூத்தைப் பாடி விளக்கினார். அ.இ.த. எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் கலைமாமணி விக்கிரமன் அனைவரையும் வரவேற்றார்.

மாலை 6 மணிக்கு 'பிலிம் சேம்பர் அரங்கத்தில்' எழுத்தாளர் எஸ்.மல்லி கார்ஜுனன் தயாரித்து இயக்கிய பாரதி பற்றிய 'கொட்டு முரசே' என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 'பிரமிட்' இன்டர்நேஷனல் வீ.நடராஜன், ஐஏஎஸ் அதிகாரி ஞானராஜசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

என்றும் தாயின் சகோதரர் ஒருவரின் சிறுநீரகம் பொருத்தமாக உள்ளதால் விரைவில் அறுவை சிகிச்சை செய்து விடலாம் என்றும் கேட்டதும் தான் சங்கரின் முகம் சகஜ நிலைக்குத் திரும்பியது.

கோவிந்தசாமி அங்கு தாயின் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த சங்கரை ஏறிட்டார்.

'தாய் மீது இத்தனை பாசமும், பரிவும் வைத்திருக்கும் போது, ஒன்பது மாதங்களாய், பெற்றவர்களுக்குப் பணம் அனுப்ப மட்டும் மறந்து விட்டதா சங்கர்? பம்பாய் வாழ்க்கை உன்னைப் படிப் படியாய் மாற்றி விட்டதாப்பா?'

கோவிந்தசாமி தனது வீட்டில் முன் தினம் கடைசியாக மனைவி கூறியதை நினைவு படுத்திக் கொண்டு தான் பேச ஆயத்தமானார்.

அதற்குள் மகாதேவனின் மனைவி சொர்ணம், "தபால்காரர் வீட்டில் கல்யாண வேலைகளெல்லாம் தொடங்கியாச்சா? இன்னும் ஒரு மாதம் தானே கல்யாணத் தேதிக்கு அவகாசமிருக்கிறது?" என்று உடல் ஆயாசமான நிலையிலும் அக்கறையுடன் கேட்டாள்.

"அ .. அது வந்து .." என்று தயக்கமாய் இழுத்த கோவிந்தசாமி யோசித்தார். மகாதேவனிடம் நேரிடையாகத் தான் வைத்தியச் செலவுக்கு உதவுவதாகக் கூறினால் பெண் கல்யாணம் தான் முக்கியம் என்று மறுத்து விடுவார். ஆகவே சட்டென ஒரு பொய்யைச் சொல்ல முடிவெடுத்தார். நன்மை பயக்குமெனில் பொய் கூறலாம் என்று வள்ளுவரே கூறி இருப்பதை நினைவில் கொண்டவர், தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார்.

"என்ன கோவிந்தசாமி, ஏதோ சொல்ல வாயெடுத்து உடனே நிறுத்தி விட்டு யோசனையாய் நிற்கிறாயே?" மகாதேவன் கேட்டார்.

அவ்வளவுதான், உடனே கோவிந்தசாமி நா தழுதழுக்க, "மகா தேவா! நான் பாவி! மகா பாவி! ஒன்பது மாதமாய் உனக்கு சங்கர் அனுப்பியிருந்த மணி ஆர்டர் பணத்தையெல்லாம் நான் தான் எடுத்துக் கொண்டு விட்டேன். உனக்கும் உன் மனைவிக்கும் துரோகம் செய்து விட்டேன். நேற்று நீ மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாய்ச் சொன்னதும் செலவுக்குத் தவிப்பாயே என்று மனத்தில் குற்ற உணர்வு தாக்கியது. ஒன்பது மாத மணி ஆர்டர் பணத்துடன் வட்டி சேர்த்து பத்தாயிரமாய் இப்போது கொண்டு வந்திருக்கிறேன். இந்த ஏழையை மன்னித்து நீயும், உன் குடும்பமும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் .." என்று கூறி சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்தார். அதை மகாதேவனின் முன்பு கை நடுங்க நீட்டினார்.

ஒரு கணம் அங்கு மௌனம் சூழ்ந்து கொண்டது. பிறகு சட்டென மெல்லச் சிரிப்பு எழுந்தது. சங்கர் சிரித்தபடி கோவிந்தசாமியை நெருங்கி வந்து நின்றான். நடுங்கும் அவரது கரங்களை இறுகப் பற்றிக் கொண்டு சொன்னான்.

"அங்கிள்! உங்கள் அன்பிற்கு நன்றி, அம்மாவின் வைத்தியச் செலவுகளை எல்லாம் என் ஆபீஸ் ஏற்றுக் கொள்ளும். அதற்காக இந்த ஒன்பது மாதமும் நான் அனுப்பாத மணி ஆர்டர் பணத்தை, நான் அனுப்பியதாயும் நீங்கள் எடுத்துக் கொண்டதாயும் சொல்லி, இப்போது பணத்தோடு வந்து நிற்கும் உங்கள் பண்பிற்கு, ரொம்ப நன்றி. நண்பர்களான நீங்களும், என் அப்பாவும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய நினைப்பது என்னை நெகிழ வைக்கிறது. அங்கிள்! உண்மையில் நான் இராஜேஸ்வரி கல்யாணத்திற்கு ஒரு பத்தாயிரம் ரூபாயாவது அன்பளிப்பாய்த் தர வேண்டுமென அப்பா விரும்பினார். அதனால் தான் நிச்சயதாம்பூலத்திற்கு வந்த போதே என்னிடம் அவர் தனக்கு இனி மணியார்டர் செய்ய வேண்டாமெனவும், சேர்த்து வைத்து கல்யாண நாளில் அதை உங்களிடம் தந்துவிட வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருந்தார். நானும் அப்படியே எடுத்து வந்திருக்கிறேன். அங்கிள்! இது ஒன்றும் நீங்கள் மணி ஆர்டரில் பணம் கொடுத்ததும் நாங்கள் உங்களுக்குத் தரும் கமிஷன் இல்லை நீங்கள் மறுப்பதற்கு ... தங்கையின் கல்யாணத்துக்கு ஓர் அண்ணன் தரும் அன்புச் சீதனம் .." என்று சொல்லியபடியே தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து அவனும் ஒரு கவரை எடுத்தான். கோவிந்தசாமியின் கரங்களில் ஏற்கெனவே இருந்த அவருடைய பணக்கவரின் மீது இதையும் வைத்தான். →

Form IV (See rule 8)

REGISTRATION OF NEWS PAPERS (CENTRAL) RULES - 1956

Statement about ownership and other particulars about the

"AMUDHASURABI"

1. Place of Publication	A-7, II Floor, II Avenue, Anna Nagar East, Chennai - 600 102
2. Periodicity of the Publication	Monthly
3. Printer's Name	Mrs. Vathsala Srinivasan
Whether Citizen of India	Yes, Indian
Address	SAI SRIRAM PRINTERS, 5, Gangaiamman Koil North II Street, Vadapalani, Chennai - 600 026
4. Publisher's Name	A.V.S.RAJA
Whether Citizen of India	Yes, Indian
Address	A-7, II Floor, II Avenue, Anna Nagar East, Chennai - 600 102.
5. Editor's Name	VIKRAMAN
Whether Citizen of India	Yes, Indian
Address	2, Jayasankar Street, Chennai 600 033
6. Name and Address of individuals who own the news paper and partners or share holder holding more than one percent of total capital	Shriram Trust, A-7, II Floor, II Avenue, Anna Nagar East, Chennai - 600 102.

I, A.V.S. RAJA hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

on behalf of Shriram Trust

(sd.) A.V.S. RAJA
PUBLISHER

Date : 1.3.1998

ன் கலங்க அவர் மகாதேவனை
டார்.

காதேவன், கோவிந்தசாமியின்
ளைத் தட்டி, "இதை நீ வாங்கிக்
ாடே ஆகணும் .. மறுக்கக்
து .. ஏன் தெரியுமா? ஓர்
ணனுக்குத் தன் தங்கை
ணத்திற்குப் பொறுப்பு ஏற்றுச்
து உரிமையும், கடமையுமாகும்.
யும் கைநிறையச் சம்பாதிப்பதால்
மாய்த் தருகிறான். ஆனால்
என்னால் அந்த அளவு அன்பளிப்பாய்த் தர இயலாது .. முன்பு ஒரு தடவை நீ இன்டர்வியூ கடிதம் தந்த போது அதற்கு அன்பாய் நான் ஒரு நூறு ரூபாய் தந்ததை, பிறகு பெண் கல்யாண சமயம் பெற்றுக் கொள்வதாய்ச் சொன்னாயே, நினைவிருக்கிறதா? அதே நூறு ரூபாய் தான் உன் பெண் கல்யாணத்திற்கு என் மொய்ப் பணமாக வரப்போகிறது!" என்று சிரித்தபடி கூறி முடித்தார்.

கோவிந்தசாமியும் மறுப்பதற்கு மனமின்றி நண்பர் குடும்பத்தை நெஞ்சு நெகிழப் பார்த்துக் கரம் குவித்தார்.

'யாரை, யார் 'ஓவர்டேக்' செய்கிறார்கள்?' கேட்பது போல ஒரு விரலைக் கன்னத்தில் வைத்து, கண்களை உயர்த்திப் பார்த்தது ஆஸ்பத்திரியின் அந்தப் போஸ்டர் குழந்தை!

மனம் விட்டுப் பேசுவோம்

பா. சத்தியமோகன்,
நெய்வேலி - 607 801.

அரசியல் அநாகரிகத்தையும்,
லையும் கண்டு சகிக்க முடியாமல்
ஒவ்வோர் உள்ளமும், அன்னை
ரிபா போல சரிந்துதான் கண்மூடி
கிறது. ஆறுதலும், கண்ணீரும்,
கூற நமக்கொரு அன்னை மடி
வாய்க்குமா? ஜி.கே. மூர்த்தியின்
, மனத்தைக் கசிய வைத்தது.
வமான ஆனால் தெளிவு
ான தரிசனமும், யூகமும் நிறைந்த
ம். அமுதசுரபியை வாரி
க்கிறது.

பாரதி மகன்,
மாயனூர் - 639 108

ப்ரவரி 98' 'அமுதசுரபி'யின்
டப் படத்தைப் பார்த்ததுமே இரு
ளிலும் நீர்ப்பிரவாகம்.
ரையைப் படித்ததும், நாட்டுக்கும்
கும் உழைத்து, தீயிலே கலந்து
கஸ்தூரிபா குறித்து அறிந்து
ட என்னைப் போன்ற
களுக்கெல்லாம் பெருமை
ம். தன்னையே தந்துவிட்ட தியாக
ஸ்தூரிபா. காந்திஜி இரு சொட்டுக்
ர் விட்டார். எனக்கோ இரு
ளில் பெருகும் நீர் இன்னமும்
லை.

எஸ். சங்கரநாராயணன்,
அருப்புக்கோட்டை - 626 101

✎ 'காந்திஜியின் இரு சொட்டுக் கண்ணீர்' கட்டுரை படித்தேன். என் கண்களில் கண்ணீர் வழிந்தது. வாசகர்கள் அனைவரும் இதே நிலையில்தான் இருந்திருப்பார்கள் என்பது என் எண்ணம்.

அ. சம்பத்,
திருவரங்கம் - 620 006.

∴ 'சில சங்கீத நினைவுகள்' கட்டுரை படித்தேன். பாரத ரத்னா விருது பெறும் எம்.எஸ். அவர்களைக் கண்டு பாராட்ட திரு. சதாசிவம் அவர்கள் இல்லை என்றாலும் அவரது ஆத்மா நிச்சயம் கண்டு களித்திருக்கும். அமரர் சதாசிவம் ஆத்மா மேலும் மகிழ்வுடன் இருக்க எம்.எஸ். அவர்கள் சோகத்திற்கு விடையளித்து விட்டுத் தொடர்ந்து இசை உலகில் திளைத்து அனைவரையும் இன்புறச் செய்து தானும் மகிழ வேண்டும்.

தாமரைச் செல்வி சுந்தர்
திருபுவனம்

✎ 'கிழக்குக் கடற்கரைச் சாலை' கட்டுரையைப் படித்தபோது வீட்டிலிருந்தபடியே பல விஷயங்களை அள்ளித் தந்தது. யோகாவின் போட்டோக்கள் அதற்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

கே.ஆர். ரவீந்திரன்,
சென்னை - 600 001.

✎ ஜோதிடரின் ஜோரான அனுபவங்கள் உண்மையிலேயே சிந்திக்கவும், சிரிக்கவும் வைத்தன. 'மறக்கக் கூடாதவர்கள்' பகுதி மூலம் மனித சமுதாயம் உண்மையில் மறக்கக் கூடாத மாமனிதர்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களின் தொண்டு பற்றி புரிந்துக் கொள்ள முடிகிறது. இளைய சமுதாயத்துக்கு இவை நிச்சயம் பயன் தரும்.

திருமதி. பாக்யலட்சுமி சுகவனம்
செல்வி சுப்புலட்சுமி சுகவனம்
கோயமுத்தூர் - 10

✎ நாட்டில் எங்கும் கொலையும், குண்டு வெடிப்புமாக இருப்பதையும், அவை இல்லாமல் மீண்டும் அமைதி திரும்ப வேள்வி செய்ய வேண்டும் என்பதை "வேண்டும் ஒரு புது வேள்வி" கவிதை மூலம் விளக்கிய ஆசிரியர் ''வரத ராஜனுக்கு'' எங்களது பாராட்டுக்கள்.





ஈஸ்வர வருஷம், பங்குனி மாதத்திற்கு (15. 3. '98 முதல் 13. 4. '98 வரை

உங்கள் ராசி பலன்

ஜோதிஷ பூஷணம் வித்வான் வே. லட்சுமணன்

கிரக பாதசாரம்
சூரியன் - பூரட்டாதி 4
சந்திரன் - ஹஸ்தம் 4
செவ்வாய் - உத்திரட்டாதி 4
புதன் - ரேவதி 1
குரு - சதயம் 3
சுக்கிரன் - திருவோணம் 2
சனி - ரேவதி 3
ராகு - பூரம் 1
கேது - சதயம் 3.

சூரி செவ் புத சனி			
குரு கேது	இம்மாத கிரக நிலை		
சுக்			ராகு

கிரக மாறுதல்

27-3-1998 முதல் புதன்-வக்
ஆரம்பம்.

31-3-1998 முதல் கும்ப-சுக்கிர
4-4-1998 முதல் மேஷ-செவ்வ

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

லாப ஸ்தானத்தில் உள்ள கிரகங்கள் உங்கள் புத்தி சாலித்தனத்தை வெளிப்படுத்துவார்கள். பொருள்வரவு கூடும். ஆன்மிக மார்க்கத்தில் நாட்டம் அதிகரிக்கும். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவற்றைப் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். அலுவலகப்பணியாளர்களது நோக்கம் நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு பயன்படும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும். கூடிவரும். ராசிநாதன் விரயத்தில் இருப்பதால் எதிலும் சுலபமாக வெற்றியைக் காண இயலாமல் போகும். கடுமையாகப் பாடுபட வேண்டிவரும். சூரியன், சனி, புதன் ஆகியோர் அனுகூலமாக உலவாததால் ஸ்பெகுலேஷன் துறைகளில் அதிகம் ஆதாயத்தை எதிர்பார்க்க இயலாது. மக்களாலும், வேலையாட்களாலும், நண்பர்களாலும் சிறுசிறு சோதனைகள் தலைதூக்கும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. உடன் பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்துவேறு பாடுகள் கூடும்.

வீண்வம்பு, வழக்குகளைத் தவிர்ப்பது நல்லது. உஷ்ணாதிக்கத்திற்கு இடம் தரலாகாது. தொழிலாளர்கள், அரசியல்வாதிகள், பொதுநலப்பணியாளர்கள், இயந்திரப் பணியாளர்கள் ஆகியோர் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. *27*-ஆம் தேதி முதல் வியாபாரிகள் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். *31*-ஆம் தேதி முதல் சுக்கிரன் *11*-ஆம் இடம் மாறுவதால் பணநடமாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். வாழ்க்கைத் துணைநலம் சிறக்கும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள், மாதர்கள் ஆகியோர் மந்தநிலை அகலப் பெறுவார்கள். ஏப்ரல் *4*-ஆம் தேதி முதல் ராசிநாதன் விரயத்திலிருந்து இடம் மாறி, உங்கள் ஜன்ம ராசிக்கு வருவதால் சங்கடங்கள் என்பவை குறைய ஆரம்பிக்கு தேக ஆரோக்கியம் சீர்பெறும். மதிப்பும், அந்தஸ்தும் உய மார்ச் *16, 24, 29, 30*, ஏப்ரல் *1, 5* (இரவு), *8* (காலை), *10* தேதிகள் அனுகூலமானவை. வட கிழக்கு, வடமேற் திசைகள் நலம் தரும். கும்ப ராசிக்காரர்கள் உதவுவார் *3, 7* எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை *2*-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் *2*-ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் அனுகூலமாக உலவுவதாலும், சூரிய செவ்வாய், புதன், சனி, கேது ஆகியோரது பலம் கூடியிரு தாலும் உங்கள் ஆற்றல் வெளிப்படும். எதிரிகளின் வலுக்குறையும். எடுத்த காரியங்களில் வெற்றி கா சந்தர்ப்பம் சாதகமாக அமையும். கலைத்துறைகை சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். மாதர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். வழ விவகாரங்களில் வெற்றி கிட்டும். அரசியல்வாதிகள், அர பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். பெ நலப்பணியாளர்கள் புகழ் கூடப் பெறுவார்கள். பொறியி சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகள் ஆக் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் ஆதாயம் வாய்ப்புக் கூடிவரும். மாணவர்களது திறமை பளிச்சிடும்.

பெற்றோரால் அனுகூலம் பெற வாய்ப்புக்கூடிவ கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனு அனுகூலம் உண்டாகும். கூட்டுறவுத் துறைகளைச் சேர் வர்கள் சுபிட்சம் காண்பார்கள். பக்தி மார்க்கத்தில் நாட் கூடும். தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் தங் நிலை உயரப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றமான பா புலப்படும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு பயன்ப

ும் தேதி முதல் வியாபாரிகளுக்கு மந்தநிலை விலகும். ும் தேதி முதல் மாதர்கள், கலைஞர்கள் ஆகியோருக் லாம் சிறுசிறு பிரச்சினைகள் சூழும். ஏப்ரல் 4-ஆம் முதல் செவ்வாய் 12-ஆமிடம் மாறுவதால் வீண் வுகள், இழப்புக்கள் ஆகியவை ஏற்படும். கைப் ருளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. விவகாரங்களில் ஈடுபடாமல் இருப்பது அவசியமாகும். 16, 19, 27, 29, ஏப்ரல் 1, 5 (இரவு), 8 (காலை), 10, 13 கள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்கு, கிழக்குத் கள் அனுகூலமானவை. மகர, கும்ப, மீன ராசிக் ர்கள் உதவுவார்கள். 1, 6, 7, 8, 9 எண்கள் ஷ்டமானவை.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ஆம் பாதம் தல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)*

ரு 9-ல் அமர்ந்து, உங்கள் ராசியையும், 3, 5-ஆம் களையும் பார்ப்பதால் உங்கள் அறிவாற்றல், திறமை ஆகியவை வெளிப்படும். தேக ஆரோக்கியம் இருந்துவரும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். தெய்வப் களிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். ளால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் கூடும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி ாலாம். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். பலம் கூடியிருப்பதால் அரசு விவகாரங்கள் ஆக்கம் துணிச்சலான செயல்களில் ஈடுபாடு கூடும். எதிர்ப் அகலும். உடன்பிறந்தவர்களாலும், முக்கியஸ்தர் லும் அனுகூலம் பெற வாய்ப்புக் கூடிவரும். நிர்வாகத் களைச் சேர்ந்தவர்களுக்கு மதிப்பு உயரும். அரசியல் கள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்பு கூடப் வார்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி ப்புக்கள் அதிகரிக்கும்.

செவ்வாய் பலம் காரணமாக இயந்திரப்பணியாளர் க்கும். இஞ்சினீயர்களுக்கும் வெற்றி வாய்ப்புக்கள் . வழக்கு, விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் ாலாம். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். உடன் பிறந்த ளால் அனுகூலம் உண்டாகும். செந்நிறப் பொருட்கள் தரும். 3-ல் உள்ள ராகு வேற்று மொழி, மதக்காரர் ல் அனுகூலத்தை உண்டுபண்ணுவார். சுக்கிரன் மாதம் துமே நலம் தரக்கூடிய நிலையில் சஞ்சரிப்பதால் ஆர்வம் உள்ளவர்கள் புகழ் ஏணியில் ஏறுவார்கள். களுக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவிவரும். மனத் ிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். புதிய அணிமணிகள் சேரும். குடும்பத்தில் குதூகலம் டாகும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். 15, 16, 19, 27, 29, 30, ஏப்ரல் 1, 5 (இரவு), 8 (காலை), தேதிகள் அனுகூலமானவை. வடகிழக்கு, மேற்கு, கிழக்குத்திசைகள் சிறப்பானவை. கும்ப, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 4, 6, 8, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : *(புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)*

குரு 8-ல் அமர்ந்திருப்பதாலும், சனி 9-ல் சஞ்சரிப்பதாலும் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் குறையும். மனத்தில் தெளிவு இராது. பொருளாதாரநிலை சாதாரணமாகவே காணப்படும். கொடுக்கல்-வாங்கல் இனங்களில் எச்சரிக்கை தேவை. ஸ்பெகுலேஷன் துறைகளில் அதிகம் ஆதாயத்தை எதிர் பார்க்க இயலாது. முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் சூழும்; பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. கலைஞர்கள், மாதர்கள் ஆகியோர் பொறுப்புடன் செயல் படுவது அவசியமாகும். அலுவலகப்பணியாளர்கள் அகலக் கால் வைக்கலாகாது. மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது அவசியமாகும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. தெய்வப்பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மன அமைதி கிட்டும். தொலை தூரத் தொடர்பு அளவோடு பயன்படும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும்.

இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோர் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். 31-ஆம் தேதி முதல் சுக்கிரன் 8-ஆமிடம் மாறுவதால் கலைத்துறைகளைச் சேர்ந்த வர்களுக்கு செழிப்பான சூழ்நிலை உதயமாகும். மாதர்கள் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். நூதனமான பொருட்சேர்க்கை நிகழும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். ஏப்ரல் 4-ஆம் தேதி முதல் செவ்வாய் 10-ஆமிடம் மாறுவதால் துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். எதிர்ப்புக்கள் குறையும். மக்களாலும், உடன்பிறந்தவர்களாலும் ஓரிரு நன்மைகள் உண்டாகும். செந்நிறப்பொருட்கள் லாபம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். நிலபுலங்கள் லாபம் தரும். மார்ச் 15, 16, 19, 27 (பிற்பகல்), 29, 30 ஏப்ரல் 1, 5 (இரவு), 8 (காலை), 10, 13 தேதிகள் சிறப்பானவை. செந்நிறம் ராசியானது. மீன ராசிக் காரர்கள் உதவுவார்கள். 1, 9 எண்கள் அளவோடு நலம் தரும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய)*

குருபலம் காரணமாக உங்கள் புத்திசாலித்தனம் பளிச்சிடும். மனத்தில் உற்சாகம் கூடும். எடுத்த காரியங்களில் வெற்றி காணச் சந்தர்ப்பம் கூடிவரும். நல்லவர்கள் உங்களுக்கு நலம் புரிய முன்வருவார்கள். மருத்துவர்களது திறமை வெளிப்படும். அலுவலகப்பணியாளர்கள் தங்கள்

நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை பெறுவதற்குரிய சந்தர்ப்பம் கூடிவரும். அரசியல் ஈடுபாடு அளவோடு நலம் தரும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் திறமைக்குரிய பயன் கிடைத்துவரும். பண நடமாட்டம் திருப்தி தரும். கொடுக்கல்-வாங்கல் இனங்களால் ஆதாயம் கிடைத்துவரும். ஸ்பெகுலேஷன் துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் ஓரளவு லாபம் பெறுவார்கள். ராசி நாதன் சூரியன் *8*-ல் செவ்வாய், சனி ஆகியோருடன் கூடி உலவுவதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். எதிலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடு ஈடுபடுவது அவசியமாகும்.

வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. வீணவிவகாரங்களிலும், சண்டை, சச்சரவுகளிலும் ஈடுபடலாகாது. சுக்கிர பலம் குறைந்திருப்பதால் கலைஞர்கள், மாதர்கள் ஆகியோர் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது அவசியமாகும். எரிபொருட்கள், இயந்திரங்கள், மின்சாரம் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போதும், வாகனங்களில் செல்லும்போதும் எச்சரிக்கை தேவை. உடன்பிறந்தவர்களுக்கும் உங்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. தந்தை நலனில் அக்கறை தேவைப்படும். வியாபாரிகள், தொழிலாளர்கள், இயந்திரப்பணியாளர்கள் ஆகியோர் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியமாகும். ஏப்ரல் *4*-ஆம் தேதி முதல் நிலபுலங்களால் ஓரளவு ஆதாயம் கிடைத்துவரும். பெற்றோர் நலம் சீர்பெறும். தொலைதூரத் தொடர்பு பயன்படும். மார்ச் *15, 16, 19, 29* (பிற்பகல்), *30*, ஏப்ரல் *1, 5* (இரவு), *8* (காலை), *10, 13* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை நலம் தரும். துலா, கும்ப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். *3*-ஆம் எண் அதிர்ஷ்டமானது.

கன்னி: (உத்திரம் *2*-ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை *2*-ஆம் பாதம் முடிய)

சுக்கிரன், கேது ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் மனத்தில் உற்சாகம் கூடும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். மாதர்கள் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகள் ஆக்கம் தரும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். பணநடமாட்டம் சீராக இருந்துவரும். மக்களாலும், பெற்றோராலும் அளவோடு நலம் ஏற்படும். பேச்சில் இனிமையும், திறமையும் பளிச்சிடும். தொலைதூரத் தொடர்பால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் தெளிவு காணலாம். இதர கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் சிறுசிறு இடையூறுகளும் அவ்வப்போது ஏற்படவே செய்யும். பெரியவர்களது அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது அவசியமாகும். பணம் கொடுக்கல்-வாங்கல் இனங்களில் எச்சரிக்கை தேவை. வாழ்க்கைத்துணைநலனில் கவனம் தேவைப்படும்.

கணவன், மனைவியரிடையே சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்படும். பங்குதாரர்களிடம் சுமுகமாகப் பழகுவது ந[illegible] பயணத்தின்போது எச்சரிக்கை தேவை. தீயோர் தொ[illegible] விட்டு விலகுவது அவசியமாகும். அரசியல், நிர்[illegible] மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறை[illegible] சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்கலாகாது. தொழிலாள[illegible] உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கெல்லாம் சோதனை[illegible] தலைதூக்கும். வேலைப்பளு கூடும். அதற்கான வ[illegible] கிடைக்கத் தடையிருந்துவரும். எதிர்பாராத செல[illegible] ஏற்படும். சிக்கன நடவடிக்கையை மேற்கொள்வது ந[illegible] நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் அனுகூல[illegible] எதிர்பார்க்க இயலாமல் போகும். *31*-ஆம் தேதி [illegible] சுக்கிரபலம் குறைவதால் பிரச்சினைகள் சற்று [illegible] இறைவழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. மார்ச் *15, 16, 19, 2*[illegible] (முற்பகல்), ஏப்ரல் *1, 5* (இரவு), *8* (காலை), *10, 13* தே[illegible] சிறப்பானவை. வடமேற்குத்திசை நலம் தரும். மகர, [illegible] ராசிக்காரர்கள் உதவுவார்கள். *6, 7* எண்கள் அதி[illegible]மானவை.

துலாம்: (சித்திரை *3*-ஆம் பாத[illegible] முதல், சுவாதி, விசாகம் *3*-ஆ[illegible] பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாக உலவு[illegible] உங்கள் அபிலாஷைகள் இனிது நிறைவேறும். உற்சா[illegible] நடைபோடுவீர்கள். பொருள்வரவு திருப்தி தரும். எதிர்ப[illegible] திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். கேளி[illegible] உல்லாசங்களிலும்; விருந்து உபசாரங்களிலும் ஈடுபாடு க[illegible] நண்பர்கள், உற்றார், உறவினர்கள் ஆகியோரது தொ[illegible] மனமகிழ்ச்சியைக் கூட்டும். மக்களால் பெற்றோரு[illegible] பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்ட[illegible] அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வர[illegible] கூடப் பெறுவார்கள். நிர்வாகத்திறமை பளிச்சிடும். [illegible] சாலித்தனத்தால் செயற்கரிய சாதனைகளை ஆ[illegible] மற்றையோரது நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீ[illegible] எதிரிகள் ஓடி ஒளிவார்கள். போட்டிப் பந்தயங்களிலும், வ[illegible] வியாஜ்ஜியங்களிலும் வெற்றி கிட்டும்.

எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகள் ஆக்கம் [illegible] சமுதாய நலப்பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவா[illegible] இயந்திரப்பணியாளர்களுக்கும், இஞ்சினீயர்களுக்[illegible] முன்னேற்றமான பாதை புலப்படும். நிலபுலங்க[illegible] சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ பெற[illegible] கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரி[illegible] திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். திரு[illegible] ஆனவர்களுக்கு இல்வாழ்வு சிறக்கும். மகப்பேறு அ[illegible] மக்களால் பாக்கியம் பெறச் சந்தர்ப்பம் கனிந்துவரும். [illegible] *4*-ஆம் தேதி முதல் செவ்வாய் *7*-ஆமிடம் மாறுவது [illegible]பானதாகாது. கேதுப் பிரீதி செய்வது நல்லது. விநாய[illegible] வழிபடுவதன் மூலம் நலம் கூடப் பெறலாம். [illegible] *15, 16, 19, 27, 29, 30*, ஏப்ரல் *5* (இரவு), *8* (காலை), [illegible] தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழ[illegible] மேற்குத்திசைகள் அனுகூலமானவை. மகர, கும்ப,

ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 3, 4, 6, 8, 9* எண்கள் ர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

க்கிரன், ராகு ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் கள் வசீகரச் சக்தி வெளிப்படும். செய்தொழிலில் சீரான ர்ச்சி காணலாம். நூதனமானவர்களது தொடர்பு கிட்டும்; னால் பயனும் உண்டாகும். சினிமா, நாடகம், நாட்டியம், தம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு றி வாய்ப்புக்கள் கூடும். வாழ்க்கைத்துணை நலம் இருந்துவரும். மாதர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் வார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் வோடு நலம் உண்டாகும். அரசியல், நிர்வாகம், துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் ந்தவர்களுக்குத் திறமைக்குரிய பயன் கிடைத்துவரும். னமான விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ப்புப் பெறுவார்கள். மக்களால் அளவோடு நலம் டாகும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் . நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ள் நிலை உயரப் பெறுவார்கள்.

க்கள் நலனில் கவனம் தேவைப்படும். *31*-ஆம் தேதி ல் சுக்கிரன் *4*-ஆமிடம் மாறுவதால் கேளிக்கை, லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய ஆடை, ரிமணிகள், அலங்காரப்பொருட்கள், வாசனைத் ரியங்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். ஏப்ரல் ம் தேதி முதல் ராசிநாதன் செவ்வாய் *6*-ஆமிடம் . பலம் கூடப் பெறுவதால் செல்வாக்கு, மதிப்பு, அந்தஸ்து ம் உயரும் நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். பிரச்சினைகள் யும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு விவகாரங் ளும் வெற்றி காணச் சந்தர்ப்பம் கனிந்து வரும். நிலம், ா, வீடு, வாகனங்களால் ஆதாயம் கிடைத்துவரும். சொத்துக்களின் சேர்க்கையும் நிகழும். செந்நிறப் ருட்கள் லாபம் தரும். துணிச்சலான காரியங்களில் ாடு கூடும். மார்ச் *15, 16, 19, 27, 29, 30*, ஏப்ரல் *1, 5* லை), *8* (காலை), *10, 13* தேதிகள் சிறப்பானவை. தென் கு, தென்மேற்குத்திசைகள் அனுகூலமானவை. மகர, ராசிக்காரர்கள் உதவுவார்கள். *4, 6* எண்கள் ர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)

ரு, செவ்வாய், சனி ஆகிய முக்கியமான கிரகங்கள் கூலமாக உலவாததால் அலைச்சலும், உழைப்பும் கூடும். அமைதி ஏற்படும். எடுத்த காரியங்களை நிறைவேற்ற ப்பாடுபட வேண்டிவரும். நூதனமான துறைகளில் ஈடுபட நேரம் விசேடமானதாகாது. மாமூலாகச் செய்துவரும் ங்களிலும்கூட அதிகம் அக்கறை தேவை. அலட்சியப் கு அடியோடு கூடாது. பயணத்தின்போதும், இயந்திரங் ல் பணிபுரியும்போதும் பாதுகாப்புத் தேவை. னாதிக்கத்திற்கு இடம் தரலாகாது. தாய்நலனில் கவனம் தேவைப்படும். நிலம், மனை, வீடு, வாகனம் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. அலுவலகங் களில் பணிபுரிபவர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள் ஆகியோர் பொறுப்புணர்ந்து கடமையாற்றினால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். மாணவர்கள் படிப்பில் முழு அக்கறை செலுத்துவது அவசியமாகும்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்திவருவது நல்லது. மக்களால் சலனம் ஏற்படும். மறதியால் மற்றையோரது அதிருப்திக்கு ஆட்பட நேரலாம். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் அனுகூலமிராது. சுக்கிரன், கேது ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் கலைத்துறை யினருக்கும், மாதர்களுக்கும், அனுகூலமான போக்குத் தென்படும். ஞானமார்க்கத்தில் ஈடுபாடு கூடும். அதனால் மனத்தெளிவும் பிறக்கும். தகவல் தொடர்புத்துறைகள் ஆக்கம் தரும். *27*-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு அனுகூலமான போக்குத் தென்படும். ஏப்ரல் *4*-ஆம் தேதி முதல் ஸ்பெகுலேஷன் துறைகள் அளவோடு ஆதாயம் தரும். மக்கள்நலம் கவனிப்பின்பேரில் சீர்பெறும். மக்களுக்காக ஓரிரு செலவுகளையும் மேற்கொள்ள நேரலாம். கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இருந்துவரும். மார்ச் *15, 16, 27, 29, 30*, ஏப்ரல் *1, 8* (காலை), *10, 13* தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, வடமேற்குத்திசைகள் அனுகூல மானவை. மகர, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். *6, 7* எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமாக உலவுவதால் உங்கள் சுயபலம் கூடும். மனத்தில் உற்சாகம் அதிகரிக்கும். பொருள் வரவு திருப்தி தரும். கொடுக்கல்-வாங்கல், ஸ்பெகுலேஷன் துறைகள் ஆதாயம் கொண்டுவரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழச் சந்தர்ப்பம் கூடிவரும். விருந்து உபசாரங்களிலும், கேளிக்கை, உல்லாசங்களிலும் ஈடுபாடு கூடும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அனுகூலம் உண்டாகும். அலுவலகப் பணியாளர்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவிவரும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள், மருத்துவர்கள், இரசாயனத்துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள், விஞ்ஞானிகள், ஆன்மிகவாதிகள், ஆசிரியர்கள் ஆகியோருக் கெல்லாம் செழிப்பான பாதை புலப்படும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை பெறுவதற்குரிய வாய்ப்புக் கூடிவரும்.

எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிட்டும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். பிரச்சினைகள் எளிதில் தீரும். கலைத்துறையினருக்கு உற்சாகமான பாதை புலப்படும். பெண்களுக்குச் செழிப்பான

மறக்கமுடியாத பரிசு

வித்தியாசமான முதலீடு

புதுடில்லி.
14-2-98

அன்புள்ள அம்மா, நலம்.

எல்லாருடைய நலத்திற்கு எழுதவும். ஹனிமூன் முடிந்து இப்போதுதான் வீடு திரும்பினோம். நேபால், நைனிட்டால் போன்ற இடங்களைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம். இங்கு வீடு திரும்பியதும் அந்த சந்தோஷம் இரட்டிப்பாகி இருக்கிறது. 'கல்கி'யும், 'அமுதசுரபி'யும் வந்து கொண்டிருக்கின்றன.

நீங்கள் என் பெயரில் ரூ.10,000/- **'ஸ்ரீராம் டிரஸ்ட்'** டில் டெபாசிட் செய்திருப்பதாக அப்பா சொன்னார். முதலீட்டு ரசீதும் அனுப்பி உள்ளார்கள். நிறையவே செலவு செய்து என் கல்யாணத்தை நடத்தி வைத்தீர்கள். இப்போது ரூ.10,000/- என்பெயரில் முதலீடு வேறு. தொடர்ந்து 5 வருடங்களுக்கு வாராவாரம் **'கல்கி'** யும், மாதந்தோறும் **'அமுதசுரபி'** யும் 5 ஆண்டுகளுக்கு **தீபாவளி மலர்** களும், வீட்டுக்கே வந்து விடும் என்று அறிந்ததும் ஏக சந்தோஷமாக இருக்கிறது. இரண்டுமே பொன்விழா கண்ட நல்ல குடும்பப் பத்திரிகைகள் ஆச்சே!

மாப்பிள்ளை உங்கள் 'ஐடியா'வைப் பாராட்டினார். அதிலும் முதலீடு செய்த ரூ.10,000/- ஐந்து வருடங்கள் கழித்து ரூ.20,000/- ஆக திரும்பக் கிடைக்கும் என அறிந்தபோது ஏக மகிழ்ச்சி. உங்கள் பேரனை L.K.Gயில் சேர்க்க உபயோகப்படுமாம். இந்தத் திட்டத்தைப் பற்றி என் தோழிகளிடமும் சொல்லி வையுங்கள். எல்லாருக்கும் பயன்தரக்கூடிய இந்த **'வித்தியாசமான' முதலீட்டுத் திட்டத்தை** அறிமுகப்படுத்திய கைராசியான ஸ்ரீராம் நிறுவனத்திற்கு எத்தனை முறை 'தாங்க்ஸ்' சொன்னாலும் தகும். மேலும் கணக்கிட்டுப் பார்த்ததில் எங்களுக்கு ஆண்டுக்கு 27% பலன் கிடைக்கிறது. இதுதான் மறக்க முடியாத பரிசு!

அன்புடன்,
பிரியா

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ரூ.10,000/- (ரூ.பத்தாயிரம்) ஸ்ரீராம் டிரஸ்ட் பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :
ஸ்ரீராம் டிரஸ்ட், A-7, 2வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,சென்னை - 600 102.
போன் : 6286869 / 6287879

- பெயர் : திரு / திருமதி / செல்வி : ....

முகவரி : ....
.... Pin ....

- கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ....
- வாரிசுதாரர் (Nominee) : ....
- கல்கி மற்றும் அமுதசுரபி இதழ்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ....

....

இத்துடன் ரூ.10,000/- (பத்தாயிரம்) காசோலை / டிடி எண் : .... / தேதி : ....
வங்கியின் பெயர்______________________ இணைத்துள்ளேன். 5 ஆண்டுகளுக்குப் பிறகு **ரூ.20,000** (இருபதாயிரம்) ஆகத் திரும்ப பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறேன்.

இடம் தேதி முதலீட்டாளர் கையொப்பம்

சூழ்நிலை உருவாகும். பயணம் பயன்படும். என்றாலும் பாதுகாப்பும் தேவை. நூதனமானவர்களால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் சமாளிப்பீர்கள். புத லம் குறைந்திருப்பதால் வியாபாரிகள் அகலக்கால் வைக்கலாகாது. கணிதம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. 7-ஆம் தேதி முதல் புதன் வக்கிரநிலை பெறுவதால் நிலைமை சீர்பெறும். 31-ஆம் தேதி முதல் சுக்கிரன் ஆமிடம் மாறுவதால் பொருள்வரவு கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். பணநடமாட்டமுள்ள இனங்களில் தொடர்பு உள்ளவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். ஏப்ரல் 4-ஆம் தேதி முதல் செவ்வாய் 4-ஆமிடம் மாறுவதால் அலைச்சல் சற்று அதிகரிக்கும். மார்ச் *16, 19, 27, 29, 30,* ஏப்ரல் *1, 5* (இரவு), *10, 13* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்கு, தென்கிழக்கு, கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, மீன, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். *1, 3, 6, 8, 9* எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : *(அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)*

புதன் *2*-லும், சுக்கிரன் *12*-லும் இருப்பது அனுகூலமானதாகும். இதர கிரகங்களின் சஞ்சாரம் கோசாரப்படி விசேடமாக அமையாததால் சிறுசிறு பிரச்சினைகளும் அவ்வப்போது தலைதூக்கும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. பேச்சில் கடுமையைக் குறைத்து இனிமையைக் கூட்டிக் கொள்வதன் மூலம் மற்றையோரது அதிருப்திக்கு ஆளாகாமல் தப்பலாம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சோர்வுக்கு இடம் தராமல் கடுமையாகப் பாடுபட்டால் பயன் கூடப் பெறலாம். மக்கள்நலம், வாழ்க்கைத்துணைநலம், பெற்றோர் நலம் ஆகியவற்றில் கவனம் செலுத்தினால் நல்ல போக்கைக் காணலாம். வியாபாரிகள், கணிதத் துறையாளர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கெல்லாம் மாமூலான வளர்ச்சி தடைப்படாது. சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண்பதற்குரிய சூழ்நிலையைப் பெறுவார்கள்.

பொருள்வரவு கூடுமென்றாலும் எதிர்பாராத செலவுகளும் கூடும். எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தரலாகாது. பொறுமை அவசியம் தேவை. *31*-ஆம் தேதி முதல் நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். பெற்றோரால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். தொலைதூரத்தொடர்பு ஓரளவு பயன்படும். ஏப்ரல் *4*-ஆம் தேதி முதல் செவ்வாய் *3*-ஆமிடம் மாறி, பலம் கூடப் பெறுவதால் உங்கள் மனத்தில் துணிவும், நம்பிக்கையும் பிறக்கும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு வியாஜ்ஜியங்களிலும் அனுகூலமான திருப்பத்தைக் காணலாம். தகவல் தொடர்பு இனங்கள் ஆக்கம் தரும். இயந்திரப்பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றமான பாதை புலப்படும். மார்ச் *16, 19, 27, 29, 30,* ஏப்ரல் *1, 5* (இரவு), *8* (காலை), *13* தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசை நலம் தரும். மிதுன, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். *6*-ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மீனம் : *(பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

ராகு, சுக்கிரன் ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் ஆற்றல் வெளிப்படும். வசீகரச் சக்தி கூடும். நூதனமானவர்களால் அனுகூலம் பெறுவீர்கள். ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள் லாபம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். போக்குவரத்துச் சாதனங்கள், தோல் பொருட்கள் ஆகியவை லாபம் தரும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை நிலவிவரும். இதர கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் அலைச்சல், உடல் நலக்குறைவு, மனத்தில் சலனம் ஆகியவையும் ஏற்படும். பக்குவத்துடன் சமாளிப்பது அவசியமாகும். உஷ்ணாதிக்கத்திற்கு இடம் தரலாகாது. மற்றையோரது மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நல்லது.

எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடு ஈடுபடுவதன் மூலம் தொல்லைகளுக்கு ஆளாகாமல் தப்பலாம். வேலையாட்களால் அதிகம் அனுகூலமிராது. தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள் ஆகியோர் தங்கள் பொறுப்புணர்ந்து கடமையாற்றினால் சரிவுக்கு ஆளாகாமல் தப்பலாம். எதிர்ப்புக்கள் அதிகரிக்குமாதலால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகலாகாது. பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணிபுரியும்போதும் எச்சரிக்கை தேவை. வீண்விவகாரங்களில் பிரவேசிக்கலாகாது. புதிய துறைகளில் ஈடுபட இந்த நேரம் விசேடமாகாது. எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செயல்படுவது அவசியமாகும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சோதனைகள் அகலும். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் அமைதி காணலாம். மார்ச் *15, 19, 27, 29, 30,* ஏப்ரல் *1, 5* (இரவு), *8* (காலை), *10* தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, தென்கிழக்குத்திசைகள் நலம் தரும். சிம்ம, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். *4, 6* எண்கள் அதிர்ஷ்டமானவை.

அச்சிட்டோர்: சாய் ஸ்ரீராம் அச்சகம், சென்னை – 26. வெளியிட்டவர்: ஸ்ரீராம் டிரஸ்ட். சார்பில் ஏ.வி.எஸ்.ராஜா.
முகவரி: ஏ–7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் (கிழக்கு) சென்னை – 600 102. தொலைபேசி எண்: 628 68 69, 628 78 79. தனி இதழ் ரூ. 10.00 ஆண்டுச் சந்தா ரூ. 120.00
ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன்